இதழ் -64

ரூ. 50

தமிழ் பேசும் மக்களின் தேசிய சஞ்சிகை

# இருக்கிறம்

ඉරුක්කිරම්

மாதம் இருமுறை

ஒரு பொல்லாப்புமில்லை


15 ஜனவரி 2010 பக்கங்கள் - 64 இருக்கை 04 காத்திருப்பு 06




## வெள்ளத்திற்குப் பின்னரான வாழ்வும் தேர்தலை நோக்கிய வாக்குறுதிகளும்

## சூரியனின் கடலோரக் கலாட்டா

வினைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.




நியாயமான, சுதந்திரமான நீடித்து நிலைத்திருக்கும் உலகம், இதற்குத்தான் அபிவிருத்திக் கூட்டுறவுக்கான மனிதநேய நிறுவனம் **HIVOS** பங்களிக்க விரும்புகிறது. சகல பிரஜைகளும் அதாவது ஆண்களும், பெண்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும், வளங்களையும் சம அளவில் அடையக்கூடியதான ஒரு உலகிற்காக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து **HIVOS** பாடுபடுகிறது.

மனிதநேயப் பெறுமானங்களினால் வழிநடத்தப்படும் **HIVOS**, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள வறிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கிறது. இம் மக்களது சூழ்நிலைகளின் நீண்டகால அபிவிருத்திக்காகவும், குறிப்பாக பெண்களை வலுப்படுத்தவும் இது பாடுபடுகிறது.

# இருப்பு



## பெருகியது வெள்ளம் மட்டுமல்ல, வேதனைகளும்தான்!



## ஒரு பொல்லாப்புமில்லை



இருக்கிறம்

வணக்கம் உறவுகளே!

பாரிய வெள்ள அனர்த்தத்துடன் தை பிறந்திருக்கிறது. முப்பது வருடமாக ஓடிக்கொண்டிருந்த எமது கால்கள் இன்னும் ஓய்வின்றி ஓடிக்கொண்டுதானிருக்கின்றன. யுத்த வாழ்வு ஒரு புறம், இயற்கை அனர்த்தம் மறுபுறமாக எங்களுடைய அவல வாழ்க்கை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. மீண்டும் தலைதூக்கியிருக்கும் கடத்தல்களும், கொள்ளைகளும், சுற்றிவளைப்புத் தேடுதல்களும் எமது எதிர்கால இருப்பை கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றன.

இப்பொழுது தேர்தல் காலம். வாக்குவேட்டைக்காக வரும் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகள் தாராளமாகவே காற்றலைகளில் கேட்க ஆரம்பித்திருக்கின்றன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ குத்துவெட்டுக்குள் அகப்பட்டுத் தன் நிலையைத் தக்கவைக்க படாதபாடு பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒற்றுமைதான் இனி தமிழர்களுக்கான ஒரே பலம் என்றறிந்தும் ஒன்றுசேர முடியாதளவுக்கு எங்கள் தமிழ்க்கட்சித் தலைவர்களின் வரட்டுக் கௌரவம் இடம்கொடுக்க மறுக்கின்றது. எவருமே தமிழ் மக்களுக்கான உண்மையான நலனில் அக்கறையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. இந்நிலையில் இம்முறை தேர்தலில் என்ன வாக்குறுதிகளைக் கொண்டு தமிழ்மக்களிடம் போய் நிற்கப் போகின்றார்கள்?

கிழக்கில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பொருட்கள் உரியநேரத்திற்குச் சென்றடையாததும், அதிகாரிகளால் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்படாமையும் மக்களை கொதிப்படைய வைத்தது. ஆத்திரமடைந்த மக்கள் ஒன்று திரண்டார்கள். அதிகாரிகளை நோக்கிப் பாய்ந்தார்கள். ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். மக்களின் ஒன்றுதிரண்ட பலம் அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் அரசியல்வாதிகளை சிந்திக்க வைத்தது. இதுதான் எங்களுக்கு வேண்டும். இதே ஒன்றுபட்ட பலம் என்றும் எமக்கிருக்கவேண்டும். இனிமேல் எமக்கான தலைமைத்துவத்தை உருவாக்குவதோ அதைத் தேடுவதோ இயலாத காரியம். எங்களுக்கான தலைமைத்துவம் எங்கள் கைகளிலேதான் இருக்கின்றது என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பல மாற்றங்களுடன் பிறந்திருக்கின்ற இந்த ஆண்டில் கூடவே பல சோதனைகளையும் கடந்து நிலையான நிம்மதியான வாழ்வுக்காய் இன்னும் நெடுந்தூரம் பயணிக்கவேண்டியுள்ளது. யாழில் தினமும் அரங்கேறிவரும் அசம்பாவிதங்களும், சுற்றிவளைப்புக்களும் அரசு மீதான நம்பிக்கையீனத்தையே தோற்றுவித்திருக்கின்றது. இவ்வேளையில் எங்கள் தலைவர்களின் கையாலாகாத தனத்தை நினைத்தும் வேதனைப்பட வேண்டியிருக்கிறது. என்ன செய்வது.. இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியம் தானே!

எல்லாம் புரிந்தும் இன்னமும் உணர்வற்ற ஜடங்களைப் போல நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இறந்தவர்களைப் பற்றியும் வாழ்ந்தவர்களைப் பற்றியும் புலம்பி அரசியல் நடத்துவதை விட்டு விட்டு எமக்காக, எங்கள் சனங்களுக்காக தேவையானதைப் பெற்றுக்கொடுக்க முன்வருவதே இன்றைய தேவையாகவுள்ளது. எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்பதை நினைவில் வைத்தாவது முடிக்கப்போகின்ற காரியங்களுக்கான புதிய அத்திவாரத்தை ஒன்றுபட்டு கட்டியெழுப்புவோம். ஒரு பொல்லாப்புமில்லாமல் இருக்க நினைக்கும் உங்களுடன்..

அருள் . சக்தி

ஆசிரியர்

15.01.2011

# வாசகர் கருத்து



'இருக்கிறம்' சஞ்சிகையின் வாசகர்களில் நானும் ஒருவர் என்று கூறிக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. வாசகர்களுக்கேற்ற ரசனையில் புதுப்புது விடயங்களைத் தந்து கொண்டிருக்கும் இருக்கிறமிற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 63 ஆவது இதழில் 'உலகப்பேரழகியின் மர்மமரணம்', 'அறியாத்தனத்தினால் ஏமாற்றமடைந்த மலையகப் பெண்ணின் அழுகுரல்' மற்றும் 'அம்மாயி' சிறுகதை, "செத்துப்போன என்தெரு" கவிதை போன்ற விடயங்கள் என்னைப் பாதித்த விடயங்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதுபோன்று பல விடயங்களை 'இருக்கிறம்' சஞ்சிகை தர வேண்டும் என்பதே எனது அவா.

**ம. புவிலக்ஷி, மட்டக்களப்பு**

இந்த நவீன யுகத்தில் ஊடகங்களின் தேவை அனைத்து மக்களுக்கும் மிகத்தேவையானதாக உள்ளது. இந்த அவசர யுகத்தில் மக்களுக்கு பெரும் பங்காற்றி வருகின்றது. அந்த வகையில் "இருக்கிறம்" சஞ்சிகை மக்களின் இருப்பைத் தக்கவைக்க துணிவோடு தனக்கே உரித்தான பாணியில் உண்மைகளை உரைத்து, ஊடக தர்மத்தை உயிர்வாழ வைக்கின்றது.

**நிமலராஜா, குட்செட் வீதி, வவுனியா**

தங்கள் 63 ஆவது 'இருக்கிறம்' பார்க்கக் கிடைத்தது. அவலங்களின் மீது நடத்தப்படும் ஒரு அற்ப அரசியல் கட்டுரை எழுதிய கண்ணனுக்கு வாழ்த்துக்கள். விக்கிலீக்ஸ் பற்றிய பதிப்பகத்தார் வரவேற்கத்தக்கது. கோ புவின் கட்டுரை வரலாற்றை சற்று ஏக்கத்துடன் எண்ணிப்பார்க்க வைக்கின்றது. 'அம்மாயி' சிறு கதை நெகிழவைத்துவிட்டது. வாஸ்த்து பற்றிய நேரமுகம் பயனுள்ளதாக இருக்கின்றது. உங்கள் பணி மேலும் சிறக்க வேண்டும்.

**எம். சப்ராஸ், சாய்ந்தமருது**

எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு நீங்கள் தரும் தொழில்நுட்பத் தகவல்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. சென்ற தம்பியும் நின்ற தம்பியும் இலக்கிய காட்சி படிக்கும் மாணவர்களுக்கு புதிய சிந்தனையாகவும் தேவையானதுமான பகுதி. எங்கள் பகுதியில் இருக்கிறம் கிடைப்பதில்லை. கொழும்புக்கு வரும்போதுதான் நான் வாங்கக் கூடிய வகையில் இருக்கின்றது. இதற்கு ஒரு வழி செய்வீர்களா?

**என். லக்ஷ்மன், இரத்தினபுரி**

நவம்பர் 25 இல் வெளிவந்த 'இருக்கிறம்' பார்த்தேன். அட்டைப்படம் அருமையாக இருக்கின்றது. வாழ்த்துக்கள். உள்ளே இரண்டு விடயங்களில் எனக்கு உடன்பாடு இல்லை. ஒன்று 16 ஆவது பக்கத்தில் உள்ள 'நல்ல இசை நல்ல மூட் தருமா?' இன்னொன்று 19 ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள 'செக்ஸுக்குப் பின் ஆண்கள் செய்யும் தவறுகள்'. இன்று பொதுவாக இவ்வாறான விடயங்களை பார்ப்பதற்கும் எழுதுவதற்கும் என்றே சில ஊடகங்கள் இருக்கின்றன. ஆனால் 'இருக்கிறம்' போல மக்களது பிரச்சினைகளையும் தரமானவற்றையும் தருவதற்கு ஒன்றுமில்லை. இருக்கிறத்திற்கென்று ஒரு தனித்துவம் இருக்கின்றது. இவ்வாறான சில ஆக்கங்களால் அதன் தரம் கெட்டுப்போய்விடக்கூடாது. அதனை நேசிக்கும் ஒரு வாசகன் என்ற ரீதியில் கூறுகின்றேன்.

**ந.சிவதீபன்**
**ஆமர்வீதி, கொழும்பு – 12**


ஒரு பொல்லாப்புமில்லை காத்திருப்பு 06 - இருக்கை 04

# இருக்கிறம்

மாதம் இருமுறை இதழ் 64

ஈகோ பப்ளிசிங் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585190
மின்னஞ்சல் : irukiram@gmail.com

| | |
|---|---|
| நிர்வாக ஆசிரியர் | : சாந்தி சச்சிதானந்தம் |
| ஆசிரியர் | : அருளானந்தம் சஞ்சீத் |
| அனுவகை நிருபர் | : க. கலாவர்ஷ்னி |
| நிருபர் குழு | : தி. ஸ்ரீகாந்த் |
| | த. சிந்துஜா |
| | பூ. ஜெசிந்தா |
| கார்ட்டூன் | : சஞ்சீத் |
| கணனி தட்டச்சு | : க. மாலா |
| | கு. நிரோஜன் |
| பக்க வடிவமைப்பு | : ஏ.ஜே.எம். பிறவ்ஸ் |
| | கு.முஜீன்நாத் |



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.

சிறப்புக் கட்டுரை : தேசிய கீதம்

08



சிங்களத்தில் மட்டும் தேசிய கீதம் பாடப் படவேண்டும் என்று அண்மையில் அமைச்சரவையில் ஒரு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உலகத் தமிழர்களின் பார்வை இலங்கை மீது பதிந்துள்ளது. தேசிய கீதத்தைப் பற்றிய ஒரு உலகளாவிய சிறப்புக் கண்ணோட்டம்.

**மீண்டும் பற்றிக் கொள்ளும் இனவாத நெருப்பு...**

நேரடி ரிப்போர்ட் : வெள்ளமும் வாழ்வும்

13



தேர்தல் காலமாகையால் வாக்குறுதிகளுக்குக் குறைவில்லை. ஆனால் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண மக்களுக்கான உதவிகள் போதியளவில் சென்றடைவதில் சிக்கல்கள் இருக்கும் சூழ்நிலையில் புலம்பெயர் தமிழர்களுடைய பங்கு என்னவாக இருக்கும் என்பதை அறிய பக்கங்களைப் புரட்டுங்கள்.

**வெள்ளத்திற்குப் பின்னரான வாழ்வும்...**

அதற்குத் தக : பேஸ் புக்

32



தனது வீட்டு வேலைகளில் பங்கெடுக்காத கணவனை என்ன செய்யலாம் என்று கேட்டு ஒரு பெண் பேஸ்புக்கில் ஐடியா கேட்க பல பெண் தோழிகள் கொடுத்த விசித்திரமான யோசனைகளை சுவாரஸ்யமாக தொகுத்து தந்துள்ளார் அஷ்ரப் சிஹாப்தீன்.

**கைகொடுக்கும் கண்ணாளன்...**

அரங்கியல் பார்வை : சர்வதேச எழுத்தாளர் மாநாடு

48



பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் அண்மையில் நடைபெற்று முடிந்த சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் உள்ள குறை, நிறைகளையும் அத்தோடு இனிவரும் காலங்களில் கவனிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியதுமான ஒரு விளக்கக் கட்டுரை உள்ளே...

**ஏமாற்றங்களும் எதிர்பார்ப்புகளும்...**

திரைப்பார்வை : ஆடுகளம்

24




**வித்தியாசமான வெற்றிக்களம்..**

பொங்கல் வெளியீடுகளில் தனுஷ் நடித்த ஆடுகளம் சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கின்றது. வழமையான பாணியை விட்டு வித்தியாசமான ரசனையில் வெற்றி மாறன் இயக்கிய படத்தைப் பற்றிய பார்வை உள்ளே...

51 முஸ்லிம் சமூகம் : முஸ்லிம் அரசியல்

**அண்ணல் நபி காட்டிய அரசியல்...**

56 நேர்முகம் : பகவத்சிங் நித்தியானந்தன்

**இந்தியக் கலைஞர்கள் பாடினால் தான் கேட்பார்களாம்...**

34 சட்டம் பேசுகிறது : மீறப்படும் மனித உரிமைகள்

**சித்திரவதையும் அடிப்படை உரிமைகளும்...**

48 விளையாட்டு : சாதனை

**சாதனைகளும் வேதனைகளும்...**

பா. தமிழ்மாறன்



யுத்தத்தில் விடுதலைப் புலிகளை தோற்கடித்தமைக்கு நினைவாக கிளிநொச்சி நகரத்தில், வீழ்த்தப்பட்டிருக்கின்ற தண்ணீர்த் தாங்கி நினைவுச் சின்னமாக்கப்பட்டுள்ளது. அலை அலையாக சிங்கள சுற்றுலாப் பயணிகள் அங்கு திரண்டபடியிருக்கிறார்கள். வீழ்ந்த கிளிநொச்சி நகரத்தின் குறியீடாக நமக்குத் தெரியும் அந்தத் தண்ணீர்த் தாங்கி மனதை வலிக்கச் செய்யும் நிலையில், 'பயங்கரவாதிகள் வீழ்த்திச் சென்ற தாங்கி', 'அதை மீட்டுப் பாதுகாக்கும் படைகள்' என்று பூரிப்புடன் சுற்றுலாப் பயணிகள் நிறைகின்றார்கள்.

இன்று கிளிநொச்சி நகரமும், அதனை அண்டியிருக்கிற கிராமங்களும், வன்னியும், வடக்குகிழக்கு என்ற தமிழர்களின் முழுத் தாய்நிலமும் தனது அடையாளங்களுக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறது. உலகம் பல்வேறு கிராமங்களால், பல்வேறு நகரங்களால், பல்வேறு நாடுகளால் நிரம்பியது. எங்கள் கிராமமும், எங்கள் நகரமும், எங்கள் நாடும் எங்கள் மனவெளிகளை பிரதிபலிக்கிறது. தமிழ் மக்களின் தாயகத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிகளும் தனித்துவமும், அழகும், முக்கியத்துவமும் கொண்டவை.



கிளிநொச்சியின் மீது எழுதப்படும் கதைகள், வரலாற்று திரிபுகள் எல்லாம் அதன் அடையாளத்தை அழிக்க முற்படுகின்றன. கிளிநொச்சியில் சிங்கள பெயர்ப்பலகைகள் அதிகரித்து விட்டன. சில இடங்களில் தமிழை விட சிங்களத்தில்தான் பெயர்ப்பலகைகள் உள்ளன. சில கிராமங்களுக்குச் செல்லும்பொழுது வழிகாட்டிப் பெயர்ப் பலகைகள் எல்லாம் சிங்களத்தில்தான் எழுதப்பட்டுள்ளன. 1996 இல் இராணுவத்திடம் வீழ்ந்த யாழ்ப்பாணத்தில் 15 வருடங்களை கடந்தும் இப்படிப் பெயர்ப் பலகைகளை காண்பது அரிது.

ஆனால் கிளிநொச்சியில் முன்னர் தனித் தமிழில் பெயர்கள் வைக்கப்பட்டன. பிள்ளைகளுக்கும் சில கடைகளுக்கும் தமிழில் பெயர் வைக்கப்பட்டது. இதனால் சில பெரியவர்கள் கூட தங்கள் பெயர்களை மாற்றியிருந்தார்கள். கிளிநொச்சி மீள்குடியமர்வுக்குப்பிறகு அநேகமான கடைகள் அந்தத் தமிழ் பெயர்களுடன்தான் இயங்குகின்றன. உலகத்தில் வேறு எங்கும் இப்படி ஒரு நகரத்தை யாரும் பார்த்திருக்க முடியாது. ஒரு தமிழ் நகரம் என்கிற அளவில் கிளிநொச்சி தன் அடையாளத்தை பதித்துக் கொண்டு வந்தது.

1997 இல் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தாங்கியை விடுதலைப் புலிகள் வீழ்த்தினார்கள். 'சத்ஜெய யுத்தம்' காரணமாக கிளிநொச்சியை விட்டு விடுதலைப்புலிகள் பின்வாங்கும் தருணத்தில் அந்தத் தண்ணீர்த் தாங்கியை தகர்த்துவிட்டு பின்வாங்கினார்கள். மீண்டும் கிளிநொச்சி நகரத்தை கைப்பற்றும் நோக்கிலும், தங்கள் மீதும், மக்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொள்ள அந்தத் தண்ணீர்த் தாங்கியை படையினர் பயன்படுத்தலாம் என்பதனாலும் அதனை தந்திரோபாயமாக வீழ்த்தியதாக புலிகள் கூறினார்கள்.

மிகவும் உயரமான அந்தத் தண்ணீர்த் தாங்கி கிளிநொச்சி நகரத்தின் வீழ்ச்சியின் குறியீடாக வீழ்ந்து கிடந்தது. 1998 இல் விடுதலைப் புலிகள் மீண்டும் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றிய பொழுதில் அந்தத் தண்ணீர்த் தாங்கி வீழ்ந்து கிடந்தும், கிளிநொச்சி நகரின் எழுச்சியை பிரதிபலித்ததாக அவர்கள் பிரமித்து நின்றார்கள். 2002 சமாதான காலத்தில் அதே இடத்தில் மீண்டும் புதிய தண்ணீர்த் தாங்கி கட்டியெழுப்பப்பட்டது.

பழைய தாங்கியின் உடைந்த சில பாகங்கள் இப்பொழுதும் காணப்படுகின்றன.

கடந்த 2009 ஜனவரி இரண்டாம் நாள் கிளிநொச்சியை விட்டு மீண்டும் புலிகள் பின்வாங்கினார்கள். பின்வாங்குவதற்கு முன்பாக 2008 இறுதி நாட்களில் அந்தத் தண்ணீர்த் தாங்கியை வீழ்த்தினார்கள். கிளிநொச்சியை அண்டிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அடுத்த கட்ட இராணுவத்தின் தாக்குதல்களுக்கு தண்ணீர்த் தாங்கி பயன்படலாம் என்றும், படைத்தரப்பிற்கான நீர் விநியோகத்திற்கு பயன்படலாம் என்றும் அவர்கள் நினைத்ததால் தாம் தந்திரோபாயமாக மீண்டும் தண்ணீர்த் தாங்கியை வீழ்த்திச் சென்றார்கள்.

அப்பொழுதும் கிளிநொச்சியின் வீழ்ச்சியை அந்தத்





# கிளிநொச்சி நகரின் குறியீடு !
# இன்று வீழ்ச்சியின் அடையாளம் !

> "படையினர் தங்கள் மனிதாபிமான படை நடவடிக்கை வாயிலாக கிளிநொச்சியை மீட்டதன் வெற்றியை இதில் உணர்ந்துகொள்வதாக குறிப்பிட்டவர், அவர்கள் கிளிநொச்சியை மீட்டுள்ளதுடன் இந்த நகர மக்களையும் தங்கள் படையினர் மீட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்."

தண்ணீர்த்தாங்கி பிரதிபலித்திருந்தது -
ஒரு சமாதான நகரமாக உலகமெங்கும் அறியப் பட்ட கிளிநொச்சியின் மீது இலங்கை அரசு தொடுத்த யுத்தம் மிகவும் கொடுமையானது. புன்னகைக்கும் நகரமாகவும், வெள்ளை நகரமாகவும், வரவழைக்கும் நகரமாகவும் இருந்த கிளிநொச்சியை சூழ்ச்சியின் மூலம் உலக அரசுகள் பலியாக்கின. ஒரு சமாதான நகரத்தின் மீது போர் தொடுத்தார்கள். அதை அழித்தார்கள். பேச்சுவார்த்தை மேசைகள் உடைந்தன. நீர் அருந்திய கிண்ணங்கள் சிதைந்தன. உணவு அருந்திய கோப்பைகள் உடைந்தன.

சமாதானத்தின் வீழ்ச்சி கிளிநொச்சி நகரத்தின் அழிவின் பின்னணியை தொட்டு நிற்கிறது. சமாதானத்தின் எதிரிகளே வன்னி நிலத்தின் அழிவின் பின்னணியில் இருக்கிறார்கள். தாக்குதல்களின் பின்னணியில் இருக்கிறார்கள். இப்படிச் சூழ்ச்சிகரமாக வீழ்த்தப்பட்ட கிளிநொச்சியின் அடையாளத்தைதான் இன்றைய வீழ்ந்த தண்ணீர் தாங்கியும் பிரதிபலிக்கிறது.


சிங்கள சுற்றுலாப் பயணிகள் இந்த தண்ணீர்த் தாங்கியைப் பார்த்து பிரமிக்கிறார்கள். பயங்கரவாதிகளால் வீழ்த்தப்பட்டது என்ற அடையாளத்துடன் பார்க்கிறார்கள். இதைப்போலவே ஆனையிறவில் விடுதலைப் புலிகள் ஓட்டிச் சென்ற வெடிதாங்கி ஊர்தியையும் தங்கள் நினைவுச் சுவடாக்கியுள்ளார்கள். அதில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் பெயரை வீரக்கதையுடனும் விருதுடனும் பொறித்துள்ளார்கள். வன்னி நிலமெங்கும் இப்படி இராணுவத்தினதும், யுத்தத்தினதும், அவர்களின் வெற்றியினது நினைவுச் சின்னங்க[ளை] பொறித்து அதில் சிங்கள இராணு[வ] வரலாறு எழுதுவதற்காக அரசும் அ[...] படைகளும் மிகவும் பிரயத்தனப்படுகின்றன.

கிளிநொச்சி தண்ணீர்த் தாங்கியின் முன்பாக வரி[...] வரிசையாக பேருந்துகள் நிற்கின்றன. கமராக்களு[...] இறங்கி போகும் பிரயாணிகள், இடிந்து வீழ்ச்சி[...] சின்னமாக இருக்கும் தண்ணீர்த் தாங்கியின் முன்[...] நின்று படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அ[...] தண்ணீர்த் தாங்கியை சுற்றிச் சுற்றி வந்து பார்[...] கொண்டிருந்தார்கள். அருகில் வழிகாட்டும் நிலையத்[...] இராணுவம் திறந்துள்ளது. அங்கு வரும் மக்கள் [...] நிலையத்தில் சென்று மேலதிகமான விளக்கங்க[...] பெறுகிறார்கள். படையினர் அங்கு வரும் பிரயாணிக[...] அன்போடு உபசரித்து காண்பித்து அனுப்புகிறார்கள்.

அங்கு பார்வையிட்டுச் சென்ற தென்னிலங்[...] சுற்றுலாப் பயணி ஒருவரிடம் அந்தத் தண்[...] தாங்கியை பார்க்கும் பொழுது எப்படி உணருகிறீ[...] என்று கேட்டேன்? தங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்[...] என்கிறார் அவர். படையினர் தங்கள் மனிதாபி[...] படை நடவடிக்கை வாயிலாக கிளிநொச்சியை மீட்[...] வெற்றியை இதில் உணர்ந்துகொள்வதாக குறிப்[...] அவர் கிளிநொச்சியை மீட்டதுடன் இந்த நகர மக்களை[...] தங்கள் படையினர் மீட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்ட[...]

உலகத்தின் சூழ்ச்சியால் வீழ்ந்த நகரத்தை வி[...] விடுதலைப் புலிகள் பின்வாங்கி வெளியேறிய பொ[...] படையினர் நுழைந்து கைப்பற்றி கொடியேற்றினா[...] அத்தோடு இலங்கைப் படைகள் மனிதாபிமானமற்ற

## காலமும் கோலமும்!




வகையில் கொடிய யுத்தத்தை எப்படி நடத்தியது என்பது அவர்களுக்கும் தெரியும் எல்லோருக்கும் தெரியும். அந்தக் கதைகள் இன்னும் தீராத துயராக வந்து கொண்டிருக்கிறது. கிளிநொச்சி நகர மக்கள் முதல் வன்னி மக்கள் வரை முழு ஈழ மக்களையும் படையினர் மீட்டனரா? ஆக்கிரமித்தனரா? என்பதும் தமிழ் மக்களுக்குத் தெரியும்.

வீழ்ந்து கிடக்கின்ற அந்தத் தண்ணீர்த் தாங்கியை வீதியால் பார்த்துச் செல்லும் தமிழ் மக்கள் அதை பார்க்கும் பொழுது மிகவும் வேதனைப்படுகிறார்கள். கிளிநொச்சி நகர மக்களும் கிளிநொச்சியை அண்டிய கிராம மக்களும் அதனைத் தெருவால் பார்த்துச் செல்லும் பொழுது தங்களுக்கு நேர்ந்த கதியினை நினைக்கிறார்கள். அது வீழ்ச்சியின் அடையாளமாக, ஆக்கிரமிப்பின் அடையாளமாக தெரிவதுடன் யுத்தத்தினால் காயமுற்ற மக்களின் முகங்களில் சிங்கள இராணுவ வெற்றி எழுதும் துயர்க்கதையினையும் அந்த மக்களுக்குச் சொல்கிறது.

இந்தத்தண்ணீர்தாங்கியையும், விடுதலைப் புலிகளின் வெடி மருந்துத் தாங்கியையும், இராணுவ உருவங்களையும், படை நடவடிக்கைப் போர் வெற்றி தூபிகளையும் பார்க்கும் இந்த மக்கள் இடிந்த வீடுகளை ஏன் பார்ப்பதில்லை? இடிந்த கூடாரப் பள்ளிகளுக்கு ஏன் செல்வதில்லை? கால் இழந்து, கையிழந்து, உறவிழந்து, குடி அழிந்து போன சனங்களை ஏன் பார்ப்பதில்லை? எதனால் இந்த யுத்தம் நிகழ்ந்தது? தமிழ் மக்கள் என்ன கேட்கிறார்கள்? அவர்களின் உரிமையை யார் பறித்தது? அவர்கள் ஏன் போராடினார்கள்? ஏன் இப்பொழுது இந்த நிலமும் அவர்களும் விழ்ந்து கிடக்கின்றனர் என்பதை அறிவதில்லை?

கிளிநொச்சி மக்கள் மட்டுமல்ல முழு ஈழ மக்களுமே இன்று நெருக்கடியிலிருக்கிறார்கள். தங்களை, தங்கள் நகரத்தை, தங்கள் நாட்டை எப்படி காப்பாற்றுவது? அதன் அடையாளங்களை எப்படி பாதுகாப்பது? என்ற நெருக்கடியில் இருக்கிறார்கள். முழுமையான இராணுவ ஆட்சியின் கீழ் துரிதமான ஆக்கிரமிப்பும் சூழ்ச்சியான இன அடையாள அழிப்பும் நடக்கும் தருணத்தில் இந்த அடையாளங்களை பாதுகாக்க வேண்டியிருக்கிறது என அவர்கள் உணர்கின்றனர்.

தமிழ் மக்களுக்கான நிலத்தில் தமிழ்ப் பெயர்களை வைப்பதுடன் அவர்களின் துயரை வைத்து, வாழ்க்கையை வைத்து, வரலாற்றை வைத்து திரிபுபடுத்தி பொறிக்கப்படும் பதிவுகளுக்கு எதிராக உண்மையான கதைகளை பதிவு செய்ய வேண்டிய அவசியத்திலிருக்கிறார்கள். கிளிநொச்சி தண்ணீர்த் தாங்கி சிங்கள மக்களுக்கு வெற்றியின் அடையாளமாக இருக்கலாம். தமிழர்களுக்கோ அது பெயர்ந்தலைந்த வீழ்ச்சியின் அடையாளமாக இருக்கிறது. தாங்கள் தமது நகரத்தை விட்டு துரத்தப்பட்ட வரலாற்றுத் துயரின் அடையாளமாக இருக்கிறது. புலியின் வெடி தாங்கி ஊர்தி, அதில் கொல்லப்பட்ட இராணுவத்தினரை நினைவுபடுத்தினால் தமிழர்களுக்கோ அதில் களப் பலியான தமது பிள்ளைகளை நினைவுபடுத்துகிறது.

தமிழர்கள் தம் வாழ்க்கையின் அடையாளம் பற்றிய, தமது நிலத்தின் அடையாளம் பற்றிய, தங்களது நகரத்தின் அடையாளம் பற்றிய புரிதலும் அக்கறையும் தேவையான காலத்தில் வாழ்கிறார்கள். இராணுவ நோக்கங்களும் இராணுவச் செயற்பாடுகளும், ஆக்கிரமிப்பையும் அடையாள அழிப்பையும் அதிகார குறி வைத்திருக்கிற இந்த நெருக்கடியான காலத்தில், கிளிநொச்சி தனக்குரிய அடையாளத்தை இழந்துவிடாது. வன்னி தனக்குரிய அடையாளத்தை இழந்துவிடாது. வடக்கு - கிழக்கு என்ற தாயகம் தனக்குரிய அடையாளத்தை இழந்துவிடாது என்பதை நம்பிக்கையுடன் பேணிப் பாதுகாத்து வாழ்ந்து காட்ட வேண்டியிருக்கிறது.

- நன்றி ஜீ.ரி.என்.

# கழிவு நீரில் தங்கம்?


இயற்கை நீர், தொழிற்சாலைக் கழிவுநீர், கைவிடப்பட்ட சுரங்கக் குப்பைகள் போன்ற பல்வேறு கரைசல்களிலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுப்பதற்கான ஆராய்ச்சிகள் அமெரிக்காவின் மெக்சிகோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. முன்னொரு காலத்தில் அந்த மாநிலத்தில் பெருமளவு தங்கம் இருப்ப தாகத் தெரியவந்தபோது தங்க வேட்டைக்காக மக்கள் படையெடுத்தனர். அவர்களால் தங்கம் எடுக்கப்பட்டு பின் கைவிடப்பட்டபல சுரங்கங்கள் இன்று அப் பகுதியில் உள்ளன. அங்கு தண்ணீரில் கரைந்திருக்கும் தங்கத்தை, பாசியைப் பயன்படுத்திப் பிரித்தெடுப்பது லாபகரமானதாக இருக்கும் என்பது அவர்களது எண்ணம். அதிகரித்துச் செல்லும் தங்கத்தின் விலைக்கு ஒரு மாற்றீடு வந்துவிட்டது என்று நம்புவோம். ஆனால் இந்த ஆராய்ச்சி இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கின்றது.




# உலகிலேயே மிகப் பெரிய குகை

மொத்த நியூயோர்க் நகர மக்களையும் கொள்ளளவாகக் கொள்ளக்கூடிய 'ஹேங் சன் தூங்' எனப்படும் மிகப் பெரிய குகை வியட்னாமில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அன்னாமைட் மலைகளில் உள்ள அந்த பிரம்மாண்ட குகையினுள் பெரிய காடும், அதனூடே ஒரு ஆறும் ஓடுகிறது. இந்தக் குகையின் முடிவு இன்னும் அறியப்படவில்லை. இதற்கு 'மலை நதி குகை' என்று தற்போது பெயர் மாற்றப்பட்டுள்ளது.

# தொழில் நுட்பமும் ஞாபக சக்தியும்



தலைக்குள் நேரடியாக ஊடுருவாமல் தொழில்நுட்பத்தின் மூலம் ஞாபக சக்தியை தூண்டலாம் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இதன் பெயர் டிரான்ஸ்கிரேனியல் டைரக்ட் கரன்ட் ஸ்டிமுலேஷன். அதாவது எலெக்ட்ரோடுகளை பயன்படுத்தி மயிர்க்கால்களில் மிகக் குறைந்த அளவு மின்சாரத்தைச் செலுத்துவது. இதன் மூலம் மூளையின் ஒரு பகுதியின் செயற்பாட்டை தற்காலிகமாக கூட்டவோ குறைக்கவோ முடியும். இதற்கான ஆராய்ச்சியின்போது இந்த மின்தூண்டலுக்கு உள்ளானவர்கள் மற்றவர்களைவிட இரு மடங்கு ஞாபக சக்தியைப் பெற்றனர். பார்வையால் காண்பவற்றை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்வதில் 10 சதவீத முன்னேற்றம் காணப்பட்டது.




# எலியும் பாடும்

மனிதர்களைப் போல ஏனைய உயிரினங்களையும் பாடவைக்கும் முயற்சிகளில் ஜப்பானிய விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர். அதனடிப் படையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட எலியை உருவாக்கி கலப்பின சேர்க்கை நடத்தப்பட்டது. அதன்மூலம் உருவாக்கப்பட்ட எலிகளில் ஒன்று பறவைகளின் சத்தமான கிரீச் என்று ஒலி எழுப்பியது. அது பாடல் போன்று கேட்டது. இந்த எலி மூலம் தோன்றும் மற்ற எலிகளும் இது போன்று பாடும் தன்மையுடன் கூடியதாக பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மனிதனின் குரலில் எலியை பாட வைப்பது எப்படி என்ற ஆராய்ச்சி தீவிரமாக நடைபெறுகின்றது. இனி பாடகர்களுக்கு பஞ்சம் ஏற்படாது.

# கட்டைவிரலளவு கைப்பேசி

நியோ 808 ஐ என்ற மிகவும் சிறிய போன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 72 மி.மீ. அகலம் 41 மி.மீ. சிறிய எம்.பி.3 பிளேயர் போல இருக்கும் இதில் மியூசிக் பிளேயர், எப்.எம். ரேடியோ, 1.3 மெகா பிக்ஸெல் கமரா, ஜி.பி.ஆர்.எஸ். வசதி, இ - புக் ரீடர் ஆகியன உள்ளன. எப்.எம். ரேடியோவில் 30 சனல்களை மெமரியில் வைக்கலாம். கமராவுடன் போட்டோ எடிட்டர் வசதியும் தரப் பட்டுள்ளது. போனுடன் ஒரு யூ.எஸ்.பி. சார்ஜரும் தரப்பட்டுள்ளது. 128 எம்.பி. மெமரி இருந்தாலும் 4 ஜி.பி. வரை மெமரி கார்டுகளை இந்த போன் ஏற்றுக் கொள்கிறது. போனுடன் 128 எம்.பி. மெமரி கார்ட் தரப்படுகிறது. ஜி.பி.ஆர்.எஸ். வசதி நன்றாகக் கிடைக்கிறது. இதில் உள்ள இ-புக் ரீடர் மூலம் ஒன் லைன் புத்தகங்களை வாசிக்க முடிந்தது. இவை அனைத்திற்கும் ஈடு கொடுக்கும் வகையில் பட்டறி திறன் கொண்டதாக உள்ளது. மேலதிகமாக ஒரு பட்டறியும் தரப்படுகிறது.



# வேகத்தை அதிகரிக்கும் சிப்

இங்கிலாந்தில் உள்ள கிளாஸ்கோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கம்பியூட்டர் வேகத்தை பல மடங்கு அதிகரிக்கும் புதிய சிப் ஒன்றை உருவாக்கியுள்ளனர். கம்பியூட்டரில் உள்ள புரொசசர் மைக்ரோ சிப்பில் பொதுவாக 2 அல்லது 4 பாகங்கள் இருக்கும். சில சிப்களில் 16 பாகங்கள் வரை இருக்கும். இப்போது விஞ்ஞானி கள் உருவாக்கியுள்ள மைக்ரோ சிப்பில் 1000 பாகங்களை உருவாக்க முடியும். இதனால் இந்த கம்பியூட்டர் தற்போதைய கம்பியூட்டரைவிட 20 மடங்கு வேகமாக வேலை செய்யும். இது பேர்சனல் கம்பியூட்டராக இருந்தாலும் அதிநவீன கம்பியூட்டரை விட சக்தி வாய்ந்ததாக இருக்கும். விரைவில் இவ்வாறான கம்பியூட்டர்கள் விற்பனைக்கு வரவுள்ளன.

கண்ணன்

"உலகெங்கும் ஒரே மொழியில் தான் தேசிய கீதம் பாடப்படுகிறது. அதே போன்று ஒரே நாடு என்பதை வெளிப்படுத்த சிங்களத்தில் மட்டுமே தேசியகீதம் பாடவேண்டும்"





# மீண்டும் பற்றிக் கொள்ளும் இனவாத நெருப்பு



இலங்கையின் தேசியகீதம் தமிழருக்கு எதிரான புதிய தொரு இனவாதமாக வடிவெடுக்க ஆரம்பித்துள்ளது. தேசியகீதத்தை சிங்களத்தில் மட்டுமே பாடவேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை அமைச்சரவையில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. சிங்களத்தில் மட்டுமே பாடவேண்டும் என்று அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டே விட்டது என்கிறது சண்டே ரைம்ஸ் வாரஇதழ்.

ஆனால் அப்படித் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை என்கிறது அரசாங்கம். எவ்வாறாயினும் சிங்களத்தில் மட்டுமே தேசியகீதம் பாடப்பட வேண்டும் என்றதொரு அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதை அரசாங்கம் மறுக்கவில்லை. அது அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டும் உள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தவர் வேறு யாரும் அல்லர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தான். எனவே இது அதிஉயர் அதிகார மட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட முடிவு என்பது தெளிவாகிறது. "உலகெங்கும் ஒரே மொழியில் தான் தேசிய கீதம் பாடப்படுகிறது. அதே போன்று ஒரே நாடு என்பதை வெளிப்படுத்த சிங்களத்தில் மட்டுமே தேசியகீதம் பாடவேண்டும்" என்று அமைச்சரவையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி முன்னர் சிறிமாவோ அம்மையார் பிரதமராக இருந்தபோது ஒரு நிகழ்வில் தமிழில் தேசியகீதம் பாடப்பட்டதற்காக அவர் எழுந்து சென்றுவிட்டதாகவும் கூறியுள்ளார் ஜனாதிபதி. இதிலிருந்து தேசியகீதத்தை விடவும் சிங்கள மொழிக்கே அதிக மரியாதை கொடுக்க அரசாங்கம் முனைகிறது என்பது தெளிவாகிறது.

தேசியகீதம் என்பது அனைத்து மக்களையும் அது பாடப்படும் நேரத்தில் கட்டிப் போடக் கூடிய வலிமை மிக்கதாக இருக்க வேண்டும். ஆனால் இலங்கையில் தேசியகீதம் அத்தகைய பண்பைக் கொண்டதாக மக்களால் மதிக்கப்படுகிறதா என்பது கேள்வி. சிங்கள மக்கள் மத்தியில் தேசிய கீதம் பரிச்சயமுள்ளதாக இருந்தாலும் தமிழர் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் அது கடந்த பல காலமாகப் பாடப்படுவதில்லை. அதைவிடத் தமிழ்த் தேசியம் பற்றிய கருத்துகளும் அதுசார்ந்த போராட்டங்களும் இலங்கையின் தேசிய கீதத்தை விட்டுத் தமிழர்களை விலகியே நிற்க வைத்துள்ளது.

இதன் காரணமாக சிங்களத்தில் தான் தேசியகீதம் பாடவேண்டும் என்ற செய்தி வெளியானபோது ஒரு சாராரிடம் அதையே நாம் கருத்தில் கொள்ளாத போது அது எந்த மொழியில் பாடப்பட்டால் என்ன என்ற கருதது வெளிப்பட்டது. இப்போது

**சிறப்புக் கட்டுரை**

நல்லிணக்கம் பற்றிய பேச்சுகள் அதிகமாக உலாவருகின்ற சூழலில் சிங்கள மொழியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது இங்கு முக்கியமானது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறிய அரசாங்கம் இப்போது அதன் பாதையில் இருந்து மாறிச் செல்வதாகவே தெரிகிறது. ஒரே நாடு - ஒரே மக்கள் என்ற அதன் கோட்பாடு இப்போது ஒரே மொழி - சிங்களமொழி என்பது போன்று மாறத் தொடங்கியுள்ளது.

அனைவரும் சிங்களமும் தமிழும் கற்க வேண்டும் என்று கூறி வந்த அரசாங்கம் இப்போது தமிழில் தேசிய கீதத்தைப் பாடுவதற்குத் தடைவிதிக்க முற்படுகிறது என்றால் அதன் மீது எவருக்கும் சந்தேகம் வருவது இயல்பு. ஒருபோதும் தமிழில் தேசிய கீதம் பாடப்படாது இருப்பதென்பது வேறு.

ஆனால் தமிழில் தேசியகீதம் பாடுவதைத் தடுத்து நிறுத்துவதென்பது முற்றிலும் இனவாதக் கண்ணோட்டம் கொண்டதாகவே இருக்கும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அமைச்சரவையில் பேசிய அமைச்சர் விமல் வீரவன்ச, 300 மொழிகள் பேசப்படும் இந்தியாவில் ஹிந்தியில் தான் தேசிய கீதம் பாடப்படுகிறது என்று கூறியிருக்கிறார். பொல்லைக் கொடுத்து அடி வாங்கியதாக அது அமைந்து விட்டது.

ஏனென்றால் இந்தியாவின் தேசியகீதம் ஹிந்தியில் பாடப்படுவதில்லை. பெங்காலி மொழியில் தான் அது அமைந்துள்ளது. அதைவிட உலகெங்கும் ஒரே மொழியில்தான் தேசிய கீதம் பாடப்படுகிறது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் விமல் வீரவன்சவும் வெளியிட்ட கருத்துகள் தவறானவை. சுவிட்ஸர்லாந்தில் ஜேர்மன், இத்தாலியன், பிரெஞ்ச், ரோமன் என நான்கு மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுகிறது. கனடாவில் பிரெஞ்ச், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேசியகீதம் இசைக்கப்படுகிறது.

கனடாவின் தேசியகீதத்தின் மூலமொழி ஆங்கிலம் அல்ல. பிரெஞ்சில் இருந்தே அது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. நியூசிலாந்தில் பழங்குடி மக்களின் மௌரி மொழியிலும் பின்னர் ஆங்கிலத்திலும் தேசியகீதம் இசைக்கப்படுகிறது.

இங்கு மௌரி மொழியிலுள்ள தேசிய கீதம் ஆங்கில மொழியின் நேரடி மொழிபெயர்ப்பு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்காவில் ஐந்து மொழிகளில் தேசியகீதம் இசைக்கப்படுகிறது. முதல் இரு வரிகளும் சோசா மொழியிலும், அதன் பின்னர் செசோதோ மொழியிலும், அதையடுத்து ஆபிரிக்க மொழியிலும், பின்னர் ஆங்கிலத்திலும் இசைக்கப்பட்டு கடைசி இரண்டு வரிகளும் சூலு மொழியில் பாடப்படுகிறது. இப்படி உலகில் தேசியகீதம் இசைப்பதற்கு என்று வரையறுக்கப்பட்டதொரு பொதுவான நடைமுறை இல்லை. பல நாடுகளின் தேசிய கீதங்களில் மொழியே இல்லை. வெறும் இசை மட்டும்தான் உள்ளது. இப்படிப் பல உதாரணங்கள் உலகில் உள்ளன.

தேசிய கீதம் என்பது பல மொழிகள் பேசப்படும் நாட்டில் பொது மொழியில் இடம்பெறுவது வழக்கம். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்களம், தமிழ் என்று இரண்டே மொழிகள்தான் உள்ளன. பல பிரச்சினைகளைத் தாண்டி வந்துள்ள நிலையில் இரண்டு மொழிகளில் தேசிய கீதம் பாடப்படுவதால் எந்தப் பிரச்சினையும் வரப் போவதில்லை. ஆனால் அரசாங்கம் தமிழரைத் தேசியகீதத்தின் மூலமாவது சிங்களத்தைப் பாட வைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்பது போன்று செயற்படுகிறது. தமிழில் தேசியகீதம் பாடியதால் சிறிமாவோ அம்மையார் நிகழ்வில் இருந்து எழுந்து சென்றதாக உதாரணம் காட்டும் அளவுக்கு அரசாங்கம் இந்த விடயத்தில் ஆராய்ச்சிகளில் இறங்கியுள்ளது. அதைவிட அமைச்சர் விமல் வீரவன்சவோ, தமிழில் தேசியகீதம் பாடப்படுவது நகைப்புக்கிடமானது என்று கூறியுள்ளார்.





**சிங்களத் தேசியவாதிகள் என்று கூறிக் கொள்ளும் அமைச்சர் விமல் வீரவன்சவோ, முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையாரோ தேசியகீதத்துக்கு மதிப்புக் கொடுக்கவில்லை என்பது வெளிப்படையாகிறது**

இதிலிருந்து தம்மைச் சிங்களத் தேசியவாதிகள் என்று கூறிக் கொள்ளும் அமைச்சர் விமல் வீரவன்சவோ, முன்னாள் பிரதமர் சிறிமாவோ அம்மையாரோ தேசியகீதத்துக்கு மதிப்புக் கொடுக்கவில்லை என்பது வெளிப்படையாகிறது. தேசியகீதத்தின் அத்தனை வரிகளும் இசையும் ஒன்றாக இருக்கும். அப்போது அதை மதிக்கின்ற குணவியல்பு தானாகவே வரவேண்டும். அது தமிழில் பாடும்போது இவர்களுக்கு வரவில்லை என்றால் அதன் அர்த்தம் இவர்களுக்குத் தேசப்பற்று இல்லை என்பதே. ஏனென்றால் பல நாடுகளின் தேசிய கீதம் வெறும் இசையாக மட்டுமே உள்ளது. எழுத்து வரி வடிவில் இருக்காது. அப்படிப்பட்ட நிலையில் தமிழில் பாடினால் என்ன? சிங்களத்தில் பாடினால் என்ன? அதற்குரிய மரியாதை உள்ளதென்பதை சிங்களத் தேசியவாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்பவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

இப்போது அரசாங்கம் தமிழில் தேசியகீதம் பாடலாம், அது பற்றித் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை என்று கூறி இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட முனைகிறது. ஆனால் அரசாங்கம் இதன் மூலம் புதியதொரு பிரச்சினையைச் சிங்களத் தேசியவாதிகள் மத்தியில் கிளப்பி விட்டுள்ளது. அவர்கள் இப்போது சிங்களத்தில் தான் தேசியகீதம் பாடப்பட வேண்டும் என்று வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை ஒரு சிங்கள - பௌத்த நாடு என்றும், அங்கு வாழ்பவர்கள் சிங்கள பௌத்த பாரம்பரியங்களுக்கு அடிபணிந்தே நடந்து கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர. அதுமட்டுமன்றி சிங்களத்தில் தேசிய கீதம் பாட மறுப்பவர்களுக்கு இலங்கையில் இடமில்லை என்றும் அவர் கூறியுள்ளார். இதுபோன்ற இனவாதக் கருத்துகள் இப்போது வெளிப்படத் தொடங்கியுள்ளன. இதற்கெல்லாம் காரணம் அரசாங்கம் தான். அரசாங்கமே பற்ற வைக்கின்ற போது தெற்கில் நீறுபூத்த நெருப்பாக உறங்கிக் கிடந்த இனவாதம் மெல்ல மெல்லக் கிளர்ந்தெழத் தொடங்கியுள்ளது. இவையெல்லாம் இன்னொரு 1958 இற்கோ, 1977 இற்கோ, 1983 இற்கோ தமிழரைத் தள்ளிச் செல்லமாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. ஏனென்றால் இலங்கை அரசாங்கத்தின் போக்கு இன நல்லிணக்கம் என்பதில் இருந்து விலகி இனவிரோதமாக மாறிக் கொண்டிருக்கிறது ●

# தெய்வ நிந்தனையின் பெயரால் உருவாகும் மதத் தீவிரவாதம்



**பா**கிஸ்தானில் நடந்த கதையிது. ஒரு வைத்தியரை ஒரு மெடிக்கல் சேல்ஸ் செய்கின்றவன் குறிப்பிட்ட மருந்தொன்றின் விற்பனைக்காக அணுகினான். அவர் அதில் வெகுவாக ஈடுபாடு காட்டாததால் அவன் போய் சில மணித்தியாலங்களுக்குப் பின்பு தன்னுடைய இன்னொரு பணியாளரை கூடிய விளக்கத்தை அளிப்பதற்காகக் கூட்டி வந்தான். வைத்தியரோ இவனை அடையாளம் காணவில்லை. "கொஞ்சம் முன்புதான் வந்தேனே.. என்னுடைய விசிட்டிங்கார்ட்வைத்து விட்டுப் போனேனே" என்றான் இவன். "சொறி அதைக் குப்பையில் போட்டு விட்டேன்.." என்றார் வைத்தியர். வேலை முடித்துக்கொண்டு சென்ற சேல்ஸ்மேன் நேரே பொலிஸ் நிலையத்துக்குப் போய் முறைப்பாடு செய்தான்.

அவனுடைய பெயர் 'முஹம்மட்' என ஆரம்பிக்கின்றது. அந்தப் பெயர் இருக்கின்ற விசிட்டிங் கார்ட்டை குப்பையில் போட்டதால் தெய்வ நிந்தனைக் குற்றத்தினை வைத்தியர்புரிந்துவிட்டார்என்றான். பொலிஸ் நேரே வந்து வைத்தியரைக் கைது செய்தது.



பாகிஸ்தானில் தெய்வ நிந்தனைக்குத் தண்டனை மரண தண்டனையே.

நாங்கள் பொதுவாகவே பழைய பத்திரிகைகளை பலவிதமான தேவைகளுக்கும் உபயோகிப்போம் அல்லவா? சமயலறையில் மா சலிப்பது தொடக்கம் கூட்டிக் குப்பை அள்ளுவது வரை நியூஸ்பிரின்ட் பேப்பர் எங்கள் சகல தேவைகளுக்கும் கைகொடுக்கின்றது. பாகிஸ்தானிலும் அப்படித்தான். செல்வந்தர்கள் தாம் வோக்கிங் கொண்டு போகின்ற நாய்களின் மலத்தை அள்ளுவதற்கும் அது உதவுகின்றது. இதனால் அங்கு பத்திரிகைகளில் மக்களுக்கு அறிவுரை கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பத்திரிகையிலும் அல்லாஹ், முஹம்மட் ஆகிய பெயர்களோ அல்லது குர் ஆன் வாசகங்களோ ஏதாவது இருந்தால் அவற்றை ஆராய்ந்து வெட்டி எடுத்து 'பொருத்தமான முறையில்' அகற்றிவிட்டுத்தான்வேறு தேவைகளுக்குப்பாவிக்கலாம் என்று ஆலோசனை கொடுத்திருக்கிறார்கள்.

இல்லாவிடில்நாய்மலம்அள்ளுகின்றதனவந்தரும் தெய்வநிந்தனைச் சட்டத்தின் கீழ் தூக்கிலிடப்படலாம். ஒன்று விட்ட ஒரு முஸ்லிம் ஆணுக்கு முஹம்மட் என்று பெயர் சூட்டப்பட்டிருக்கும். இந்த நிலையில் ஒவ்வொரு பத்திரிகையிலும் இப்பெயரை அகற்றப் போனால் எப்படி சல்லடையாக இருக்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்.

என்னுடைய நண்பரொருவர் அங்குள்ள வங்கி ஒன்றுக்கு காசோலை மாற்றப் போனார். அவர் எழுதிய காசோலையில் தவறு நேர்ந்ததால் அதைக் கிழித்துப் போடப் போனவரின் இரு கைகளையும் வங்கி அலுவலர் பற்றிப் பிடித்துத் தடுத்து அக்காசோலையை வாங்கி அதன் மேலே அச்சடித்திருந்த குர் ஆன் வாசகங்களை மெல்ல ஒரு கத்தரிக்கோலினால் வெட்டி எடுத்து பத்திரப்படுத்திவிட்டு கிழித்து எறிய வைத்தார். இப்படியெல்லாம் சாதாரணமாக அறிவுள்ள மனிதர்கள் நடக்க முடியுமாவென்று நாம் கவலைப்படும் அளவுக்கு உலக நடப்புக்கள் போகின்றன.

தெய்வ நிந்தனைச் சட்டம் ஆங்கிலேயர் காலத்தில் இந்தியாவில் கொண்டுவரப்பட்ட சட்டமாகும். ஒரு மதத்தவர் ஏனைய மதத்தவர்களை நிந்திப்பதனால் ஏற்படும் மத ரீதியான முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு காலனித்துவ அரசாங்கம் கொண்டுவந்த சட்டம் இது. பாகிஸ்தானில் ஜனாதிபதி ஜியா உல் ஹக் காலத்தில் மரண தண்டனைக்குரிய குற்றமாக மாற்றப்பட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை இது இஸ்லாத்தின் சில அம்சங்களை விமர்சிப்பவர்களின் வாயைக் கட்டிப் போடுவதற்கும் சொந்தப் பகை காரணமாக பழி தீர்க்க நினைக்கும் நபர்களுக்கு வசதியாகவும் இச்சட்டம் இருந்திருக்கின்றது.

ஆசியா பீபீ என்னும் கிறிஸ்தவப் பெண்ணொருத்தி. அவள் ஒரு விவசாயக்கூலி. வயல் வேலையில் ஈடுபட்டிருக்கும் பொழுது சக பெண் தொழிலாளிகளுடன் ஏதோ வாய்த் தர்க்கம் ஏற்பட்டதன் முடிவில் அவளுடைய

# பதிப்பகத்தார்

எதிராளிகள் அவள் தெய்வ நிந்தனைக் குற்றம் செய்ததாக முறைப்பாடு செய்து விட்டார்கள். இதெல்லாம் வாய் வார்த்தைதான் வேறு நிரூபணங்கள் இல்லை. இன்று இதற்காக அவள் தூக்கு மேடையை நோக்கி நிற்கின்றாள். நாம் மேலே கூறிய கதைகளை வைத்துக் கொண்டு என்னவிதமாக அவள் தெய்வ நிந்தனை செய்திருக்கலாம் என்பதை நீங்கள் ஊகித்துப் பார்க்கலாம். முஹம்மட் என்னும் பெயர் கொண்ட நபரொருவரை தூஷித்தாலும் போதுமே.

ஆசியா பீபியின் உதவிக்கு ஓடி வந்தார் ஆளும் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியியைச் சேர்ந்த பஞ்சாப் மாநில ஆளுனர் சல்மான் தஸீர். தெய்வ நிந்தனைச் சட்டத்தின் கீழ் என்றாவது ஒரு முஸ்லிம் பணக்காரர் தண்டிக்கப்பட்டிருக்கின்றாரா? 'எப்பொழுதும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்களும், வறியவர்களும்தான் அகப்பட்டிருக்கின்றனர். அது பழி தீர்க்கும் நடவடிக்கையாகத்தான் உபயோகிக்கப் பட்டிருக்கின்றது. அதனை அகற்றத் தேவையில்லை. ஆனால் திருத்த வேண்டும் மரண தண்டனையை மாற்ற வேண்டும்' என்றார். இச்சட்டத் திருத்தத்துக்கு பகிரங்கமாக பிரச்சாரம் செய்தது மட்டுமல்லாமல் ஆசியா பீபியின் உயிருக்காக வாதாடினார். கடந்தவாரம் அவரை மும்தாஜ் ஹுசெய்ன் காதிரி என்னும் அவருடைய மெய்ப்பாதுகாவலரே சுட்டுக் கொன்றான்.

அத்துடன்கதைமுடியவில்லை. கொலைகாரன்கைது செய்யப்பட்டு நீதிமன்றுக்குக் கொண்டு வரப்பட்டபோது வழக்கறிஞர்கள் உட்பட மக்கள் ஆரவாரம் செய்து ரோசாப்பூ இதழ்களை அவன் மீது சொரிந்தார்களாம்.



கராச்சி நகரில் தெய்வ நிந்தனைச் சட்டத்தினை ஆதரித்து 50,000க்கும் மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். நாங்கள் காதிரியின் துணிச்சலைப் பாராட்டுகின்றோம் என்றும் கோஷங்கள் எழுப்பியிருக்கிறார்கள். உடனடியாகவே இஸ்லாமாபாத்தில் பிரதம மந்திரி யூசுப் ராசா கிலானி தெய்வநிந்தனைச் சட்டத்தினை மாற்றும் நோக்கம் எங்களுக்கு இல்லை என அறிவித்தல் விட்டிருக்கின்றார். இந்த விடயத்தில் பாகிஸ்தான் இரண்டாகப் பிரிந்திருக்கின்றது என்று சொல்லலாம். ஆனால் கடைசியில் எந்தப் பகுதி வெல்லும் என்பதை சொல்லவே தேவையில்லை என்று நினைக்கின்றேன். தெய்வ நிந்தனைச்சட்டத்தினைசர்வதேச ரீதியாக அமுல்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் இயக்கத்துக்கு பாகிஸ்தான் ஆதரவாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எந்த சமூகத்திலும் தீவிரவாதப் போக்குடையவர்கள் இருப்பார்கள். அச்சமூகத்தில் வறுமையும் அறியாமையும் இருந்தால் அந்த வறிய மக்களே தீவிரவாதப் போக்குகளின் ஆதரவாளர்களாகத் திரட்டப்படுகின்றார்கள். இந்த மக்களை அடிப்படையாக வைத்து தீவிரவாதிகள் தங்கள் அதிகாரத் தளங்களை கட்டியெழுப்புகிறார்கள். அதற்குப் பிறகு அவர்களைத் தடுக்க ஒரு வழியும் இல்லையாகும். சமூகத்தின்மீது தாம் வைத்திருக்கின்ற அளவுகடந்த கட்டுப்பாட்டினையும் அதிகாரத்தினையும் இழப்பதற்கு அவர்கள் ஒருபோதும் இசையமாட்டார்கள். இவர்களை விட்டுவைப்பதனால் பிறகு இப்படித்தான் கோமாளித்தனமான அவலங்களை நாம் அனுபவித்தே தீரவேண்டும்.

இதனைத் தடுப்பதற்கு ஒரு கடினமான வழி இருக்கவே செய்கின்றது.

முதலாவதாக, எங்கள் நம்பிக்கைக்குகந்த எந்த மதமோ எந்தக் கொள்கையோ ஆனாலும் சரி அவையெல்லாம் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டதென உணர்ந்து அதன் சரி பிழைகளை ஆராயும் மனப்பாங்கினையும் சூழலினையும் சமூகத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும். கடவுள் இருக்கலாம். ஆனால் அவர் குறித்து நாம் ஏற்படுத்தியிருக்கும் நம்பிக்கைகளின் உருவங்கள் அனைத்துமே மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டவையாகும். இவை காலத்தால் மாற்றம் அடைவன. மாற்றம் அடைவதே சரி. இதனால் சுதந்திரமான விவாதங்களை அனுமதிக்க வேண்டும். சுதந்திரமான கருத்துப் பரிமாற்றங்களினால் உண்மைக்கு ஒரு கேடும் நேராது. உண்மை, அது என்றும் உண்மையாக இருப்பதால் நித்தியமாக வாழும். உண்மை அல்லாத கொள்கையைத்தான் வன்முறையினால் வலிந்து நாங்கள் கட்டிக்காக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இதனால் பயப்படாமல் குடும்பங்களில் மற்றும் கல்வி நிலையங்களில் கேள்வி கேட்டுத் தேடி ஆராய்ந்து ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ளும் பண்புகளை நாம் வளர்க்க வேண்டும். இப்படியான சூழ்நிலையின் விருத்தியினால் தீவிரவாதப் போக்குடையவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது மட்டுமல்லாமல் அவர்கள் இயங்கக்கூடிய தளத்தினையும் நாம் அகற்றுவோம்.


அடுத்து, எங்கு தீவிரவாதம் தோற்றம் பெறுகின்றதோ அதனை அங்கேயே முளையிலேயே கிள்ள நாங்கள் தயாராக இருக்க வேண்டும். ஜேர்மனி இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். யூதர்களுக்கெதிரான உணர்வுகளும், கறுப்பர்களுக்கெதிரான இனவாதமும் வெள்ளையர்களுக்கு மத்தியில் இருப்பதை நாம் அறிவோம். இந்த இனவாதமே ஜேர்மனியில் பாஸிஸமாக உருவெடுத்து இரண்டாம் உலக மகாயுத்தத்தின் அழிவுக்கு இட்டுச் சென்றது. அக்காலத்தில்

ஹிட்லரைஆதரிக்க[illegible]ர்களும் உண்டா? போரின்பின்னர் ஜனநாயக விழுமியங்களைக் கட்டியெழுப்புவதற்காக பிரத்தியேகமான திட்டங்களில் ஜேர்மன் அரசாங்கம் இறங்கியது. அதன் அரசியல் கட்சிகள்கூட மக்கள் மத்தியில் பயிற்சிப் பட்டறைகளையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் செய்யக்கூடிய சுயாதீனமான அமைப்புக்களை நிறுவி அவற்றுக்கான நிதிகளை வழங்கின. இவ்வளவு வேலைக்குப் பிறகும் 1980களில் ஜேர்மனியில் நாஸிசம் மீண்டும் தலைதூக்கியது. வளர்முக நாடுகளிலிருந்து வந்து குடியேறும் நம்மவர்களுக்கெதிராக இது அவிழ்த்து விடப்பட்டது. அதற்கான ஆதரவும் அதிகரிக்கத் தொடங்கியது. உடனேயே அங்குள்ள ஜனநாயகத்தை மதிக்கும் சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்று கூடி ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பங்குகொண்ட அமைதி ஆர்ப்பாட்டத்தினை ஏற்பாடு செய்தார்கள்.




அதில் பங்குபற்றிய ஒவ்வொருவரும் ஒரு மெழுகுதிரி கொண்டுவந்து உண்மைக்காகவும், பல்லின மக்களின் ஒன்றிணைந்த வாழ்க்கைக்காகவும், சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்திற்காகவும் அதனை ஏற்றி வைத்தார்கள். இக்காட்சியைப் பார்த்து மெழுகுதிரி மட்டுமல்ல உலகமே உருகியது. அதற்குப் பிறகுதான் தலைதூக்கிய பாஸிஸவாதம் அடங்கியது.

நாங்கள் ஞாபகம் வைத்திருக்க வேண்டியது இதைத்தான். எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு பொது விடயத்தைப் பற்றி நாம் நினைக்கின்ற கருத்தினைச் சொல்ல என்ன காரணத்துக்காகவெனினும் நாம் பயப்பட்டோமென்றால் அங்குள்ள சூழ்நிலை தவறாகும். அது இறைவரால் சொல்லப்பட்டது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வந்தது என்று ஒருவிதத்தாலும் அதனை நியாயப்படுத்த முடியாது ○





# விழித்தெழு...



உலகை புதுப்பிக்க வந்த
பூங்கொடியே
உன்னைத் தான் அழைக்கிறது
என் கவிதை...
ஊரெல்லாம்
விழித்துக்கிடக்கின்றது.
உன் சிந்தனையை மட்டும்
ஏன் தாலாட்டுகின்றாய்?
கண்ணீர்..
கோழையின் கையில் இருக்கும்
துரும்பு..
உனக்கது வேண்டாமடி
துடைத்தெடு..
தூய சிந்தனையின்
வார்த்தை எனும் ஆயுதம் ஏந்தி
போராடிடலாம்...
தங்கிவாழ்வது தன்மானக்கேடு
தயங்காது எழுந்து நில்
புதுமைகள் படைக்க வந்த
பாரதியின் புதுமைப்பெண்
நீ என்பதை
புரிந்து கொள்
நம்பி வாடும்
அவலம் வேண்டாம்
உன்னை நம்பி வாழட்டும்.
வீறுநடை போட்டு
விரைந்து வந்திடு
விடியலைக் காணலாம்!

- ரா. சுபத்ரா



ஒரு சஞ்சிகையை தொடர்ந்து வெளியிடுவது என்பது நம்நாட்டைப் பொறுத்தளவில் சிரமமான ஒரு விடயம். பல்வேறு தடைகளையும் சிக்கல்களையும் தாண்டியும் ஒரு சில சஞ்சிகைகள் அவ்வப்போது வெளிவந்துகொண்டுதானிருக்கின்றன.




| | |
|---|---|
| நூல் | : கலைமுகம் |
| ஆசிரியர் | : நீ. மரியசேவியர் அடிகள் |
| முகவரி | : திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். |
| விலை | : ரூபா. 350.00 |

தற்போது இலங்கையில் வெளிவந்து கொண்டிருக்கும் கலை இலக்கிய சமூக சஞ்சிகையான 'கலைமுகம்' தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளது. கலைமுகம் வெளிவர ஆரம்பித்து 21 வருடங்களாகிய நிலையில் 2006 ஆம் ஆண்டு நிலவிய கடுமையான யுத்த கெடுபிடிகளுக்கு மத்தியிலும் யாழிலிருந்து தன் வெளியீட்டை தந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2009 ஜூன் மாதமளவில் 'கலைமுகம்' சஞ்சிகையின் 49 ஆவது இதழ் வெளிவந்தது. ஏறத்தாழ ஒரு வருட கால இடைவெளியின் பின் தற்போது 50 இதழை வெற்றிகரமாக வெளியிட்டுள்ளார்கள்.

காலத்தை வென்ற பல கனதியான ஆக்கங்கள் இதழில் நிறைந்து காணப்படுகின்றன. நம் நாட்டு படைப்பாளிகள் பலரது ஆக்கங்களுக்கு கலைமுகம் பக்கங்களைக் கொடுத்துள்ளது. கதைகள், கட்டுரைகள், நெஞ்சைத் தொடும் கவிதைகள், அகதி வாழ்க்கையின் அவலங்கள், நம்நாட்டு படைப்பாளிகளின் இலக்கிய செய்யுள்களில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்கள், ஒப்பாரி இலக்கியங்களைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி, மறைந்த கலைஞர்களின் நினைவுகள், கலைகள் பற்றிய பார்வை, இலக்கியங்களில் வாழ்ந்த பெண்கள், அழிந்துகொண்டு செல்லும் யாழ்ப்பாணத்தின் சுவடுகள் என்று சஞ்சிகை முழுவதையும் எண்ணி எண்ணி செதுக்கியுள்ளார்கள்.

பல புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் வாசித்துப் பெறும் முழு அறிவையும் ஒரு சஞ்சிகை தந்திருப்பது சாலச்சிறந்தது. எல்லாவகையான வாசகர்களையும் அந்தந்த கோணத்தில் கவர்ந்துள்ளமை நனி சிறந்தது.

டைட்டானிக் வெற்றிப் படத்தை தயாரித்தளித்த ஜேம்ஸ் கமரூனின் அவதார் திரைப்படத்தை அணுவணுவாக இரசித்து முப்பரிமாணக் கோணத்தில் ஒரு விமர்சனத்தைத் தந்திருப்பது சஞ்சிகை வரலாற்றில் புதுமை எனலாம். ஈழத்துப் பெண்களின் சிந்தனையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய சொல்லாத சேதிகள் எனும் கட்டுரையில் ஈழத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் பெண்களின் அடக்குமுறைகளுக்கெதிராக பெண்ணியச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை கவிதை வடிவில் கலைமுகம் தந்துள்ளது. 1975 இற்குப் பின்னரான காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த அவல நிலைகள் பற்றி 'யாழ்ப்பாணமே ஓ எனது யாழ்ப்பாணமே' என்ற கட்டுரையில் காணக்கூடியதாக உள்ளது.

'ஔவை தரு முகில்' எனும் சிறுகதை தனிமையில் வாழும் பழைய சிந்தனைகள் கொண்ட தகப்பனுக்கும் புதிய சிந்தனையுடைய மகளுக்கும் இடையிலான வாழ்க்கையை சித்தரிப்பதாக அமைந்துள்ளது. யுத்தம் தந்து விட்டுப்போன வடுக்களை புலோலியூர் வேல் நந்தனின் ஆக்கத்தில் காணக்கூடியவாறு இருக்கின்றது. இவ்வாறு இன்னும் எண்ணற்ற சிறந்த ஆக்கங்கள் நிறைந்து கலைமுகம் 50 ஆவது சிறப்பிதழ் வெளிவந்துள்ளது.

எல்லா சஞ்சிகைகளையும் ஆட்டிப்படைக்கும் பொருளாதார பிரச்சினைகள் கலைமுகத்தையும் விட்டுவைக்கவில்லை. இதனால் கிரமமாக வெளிவரமுடியாமல் வெகு சிரமத்துக்கு மத்தியில் அவ்வப்போது வெளிவந்துகொண்டிருக்கின்றது.

இவ்வாறான தரமான சஞ்சிகைகளை ஊக்குவித்து அவற்றின் நாமங்களை தக்கவைக்க வேண்டிய பொறுப்பு தமிழ்பேசும் அனைவரினதும் கட்டாயக் கடமையாகும்.



தமிழ் இலக்கியம், இயல், இசை, நாடகம் என்பவற்றில் தடம்பதித்த எம் முன்னோர்கள் பற்றி எழுத்தாளர் அந்தனி ஜீவா எழுதிய சிறந்த பத்திப் பிரதிகளின் தொகுப்பாக வெளிவந்திருப்பதே இந்தப் 'பார்வையின் பதிவுகள்'

இலக்கிய முன்னோடிகள் பற்றியும் இசை நாடக மேதைகளைப் பற்றியும் மலைநாட்டைப் பற்றியும் இந்திய சஞ்சிகைகளில் நம்நாட்டு எழுத்தாளர்கள் பெற்றுள்ள இடத்தையும் திறனாய்வாளர்கள் பற்றியும் சிங்கள இலக்கியம் மற்றும் இலக்கியவாதிகள் பற்றியும் புலம்பெயர் இலக்கியம் பற்றியதுமான வரலாற்றுப் பதிவுகளை ஒன்றிணைத்து தருகின்றார். அந்தவகையில் பிரேமிள், தமிழன்பர் எஸ்.எம். ஹனிபா, கே.எஸ். சிவகுமாரன், கே.டானியல் என்போரது வாழ்க்கையில் பிழப்பாகவிருந்த அவர்களது இலட்சியப் பயணத்தை மிக அழகாக வரைந்துள்ளார். மூத்த இலக்கியவாதியான ஏ. இக்பால் பற்றிய உண்மைப்பதிவுகளை இந்நூல் சுமந்துள்ளது.

அத்தோடு மூத்த அறிவிப்பாளர் விசாலாட்சி ஹமீத் அவர்களின் புரட்சிகரமான வாழ்க்கை பற்றிய பதிவானது நீண்ட நாட்களாக அவரது பெயரில் பலருக்கு ஏற்பட்ட சந்தேகத்தை தீர்த்துவைத்திருக்கும்.

30 வருடங்களுக்கு முன்னால் அமரராகிவிட்ட எழுத்தாளரும் சிந்தனையாளரும் முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடியுமான அறிஞர் அ.ந. கந்தசாமியின் இளமைக்காலத்து காவிய வாழ்வை சித்தரித்துக் காட்டியுள்ளமை சிறப்பான அம்சம்.




ஆங்காங்கே மலையகத்தின் மண் வாசனை வீசுவதை நன்கு அறியக்கூடியவாறு இருக்கின்றது. அத்தோடு ஒரு பத்தியில் "தேசிய கலை இலக்கிய பேரவையின் 36 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த சனி ஞாயிறு இரண்டு நாட்களும்.," என தொடர்கின்றது. "கடந்த சனி, ஞாயிறு.." என்பது பத்திரிகைகளுக்கு எழுதும்போது பொருத்தமாகிவிடும். பத்திரிகைகளில் வெளிவந்த படைப்பாயினும் புத்தக வடிவமேற்று இருக்கும்போது காலம் அறிந்து கூறப்படுவது அவசியம். எவ்வாறாயினும் இவ்வாறான ஒரு தொகுப்பு இனிவரும் ஒரு சந்ததிக்கு சிறந்த வழிகாட்டலாக இருக்கும் அதேவேளை இவர்களைப் பற்றிய பதிவானது அழியாமல் ஞாபக சின்னங்களாக இருக்கும் என்றும் கூறலாம்.

| | |
|---|---|
| நூல் | : பார்வையின் பதிவுகள் |
| ஆசிரியர் | : அந்தனி ஜீவா |
| முகவரி | : 57, மஹிந்த பிளேஸ், கொழும்பு-06. |
| விலை | : ரூபா. 250.00 |

# வெள்ளத்திற்குப் பின்னரான வாழ்வும் தேர்தலை நோக்கிய வாக்குறுதிகளும்



கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வாழ்விடங்களை விட்டு வெளியேறியிருந்த மக்கள் தற்பொழுது பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் வழிந்துவரும் நிலையில் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பத் தொடங்கியிருக்கின்றனர். இதுவரை ஐம்பதாயிரம் பேர் தற்காலிகக் கூடாரங்களில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மழைவெள்ளத்தின் காரணமாக கிட்டத்தட்ட மூன்றரை இலட்சம் பேர் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேற நேர்ந்திருந்தது. இவர்கள் அவசர அவசரமாக வெளியேறியதால் தங்களுடைய உடைமைகள் பலவற்றை விட்டுச் சென்றிருந்தனர். அவை தற்போது வெள்ளத்தால் சேதப்பட்டிருப்பதை அவதானித்தபடி இவர்கள் ஊர் திரும்பிவருகின்றனர். இவர்கள் வளர்த்துவந்த கால்நடைகளும் வெள்ளத்தில் பலியாகியிருக்கின்றன.

சுனாமி பேரலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களில் கிழக்கு மாகாண மக்களே அதிகம். யுத்தத்தினாலும் பெரும் அவலத்தை சந்தித்த இவர்கள் இன்றும் பல இராணுவ மற்றும் பொருளாதார நெருக்கடிக்குள்ளேதான் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இப்படியாக பல துயரங்களை சந்திக்கும் மக்களுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்திருந்தது கடந்த எட்டாம் திகதி தொடங்கிய பெருவெள்ளம். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதும் அதிகாரிகள் அதனை வழங்குவதற்கு விருப்பம் காட்டுவதாக தெரியவில்லை என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுமே வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில், ஒரு தொகை மக்கள் பாடசாலைகளிலும், பொது இடங்களில் அமைக்கப்பட்ட முகாம்களிலும், நண்பர்கள் - உறவினர்கள் வீடுகளில் ஒரு பெருந்தொகையினரும் தங்கியிருக்கின்றனர்.

இருப்பினும் தமது வீடுகளிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியிருந்தவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்படமாட் டாது என கிராம சேவையாளர்களும் பிரதேச செயலாளர்களும் கூறியிருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அத்துடன் பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் இருந்து விரைவாக வெளியேறிச் செல்லுமாறும் சில இடங்களில் கிராம சேவையாளர்களால் பொதுமக்கள் வற்புறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் வழங்கும்படி கூறும் நிவாரணங்களை தமது சொந்தப் பணத்தை கொடுப்பது போன்று ஏன் அதிகாரிகள் மறுக் கின்றனர் எனக் கேள்வி எழுப்பும் பொதுமக்கள், பொலிஸாரோ அல்லது இராணுவத்தினரோ இந்த நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சிறப்பாக இருக்கும் எனவும் ஒருசாரார் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்னமும் முழுமையாக வெள்ள நீர் வடியாத நிலையில் கடந்த வாரம் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொதுமக் களைப் பார்வையிட முகாம் ஒன்றுக்குச் சென்றவேளை இந்தக் கோரிக்கையினை மக்கள் விடுத்திருந்தனர். அதிகாரிகளிடம் வழங்கும்படி கூறும் நிவாரணங்களை அமைச்சர்களே நேர டியாக வழங்குவது, வீணடிப்புகளுக்கும் சுருட்டுதல்களுக்கும் ஏதுவான காரணங்களாக அமையும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க இயற்கையின் அனர்த்தத்தினால் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ள கிழக்கு மக்களின் துயர் துடை க்க ஒவ்வொரு தமிழனும் முன்வர வேண்டும். பிரதேச வேறு பாடுகளை மறந்து அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகளே என் கின்ற நினைவுடன் உதவி செய்வதன் மூலமாக அவர்களின் துயரை நீக்கி சுமூகமான வாழ்வை கட்டியெழுப்ப ஒவ்வொரு உலகத் தமிழனும் முன்வருவதே இன்றைய நிலையில் சாலச் சிறந்தது.

உலக நாடுகள் வழங்கும் உதவிகளை அரச அதிகாரிகள் ஏப்பம் விடுவதால் அதனைத் தட்டிக்கேட்க முற்படும் மக்கள் விரட்டி அடிக்கப்படுவதாகவும் செய்திகளுடாக அறிய முடிகிறது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு ஓடும் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையடிக்கும் கும்பல்களாலும், தேர்தலுக்காக கிழக்கு மக்களின் ஆதரவை பெறும் நோக்கில் படையெடுக்கும் அரசியல்வாதிகளாலும் கிழக்கு மக்கள் செய்வத றியாது திகைத்து நிற்கின்றனர். பொய்யான வாக்குறுதிகளை வழங்கிவிட்டுச் செல்லும் இவர்களினால் கிழக்கு மாகாண மக்களின் துன்பங்களுக்கு இன்று வரை முடிவு வரவில்லை.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் வசித்த மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள் ளதால் இவர்களுக்கான உடனடி அவசர மனிதாபிமான உதவி களை வழங்குமாறு சர்வதேச அரசுகளை ஐக்கிய நாடுகள் சபை கோரியது. ஐக்கிய நாடுகள் மனிதாபிமான உதவி வழங்குவ தற்கான நிறுவனம், ஐக்கிய அமெரிக்காவின் அனைத்துலக மேம்பாட்டுக்கான உதவி வழங்கும் நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான மற்றும் சிவில் பாதுகாப்புக்கான அமைப்பு உட்பட பல்வேறு அனைத்துலக மனிதாபிமான உதவி வழங்கும் அமைப்புக்கள் உதவிகளை வழங்கி வருகின்றன. ஆனால் அரச அதிகாரிகளோ கொடுக்கப்படும் உதவிப் பொருட்களை வழங்காமல் ஏப்பமிடுகிறார்கள்.



அடுத்த ஆறு மாதங்களுக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்க குறைந்தது 51 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையென ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளை அவசர உதவி வழங்கப்பட வேண்டிய பிரதேசங்களாகப் பிரகடனம் செய்து, மக்களுக்கான உதவிகள் உடனடியான சென்றடைவதற்கான ஏற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டியது அரசின் கைகளில் தங்கியுள்ளது. அரசோ பேச்சளவிலேதான் இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்கள் பல இன்னல்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்களை அனுப்பி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவை தெரிவிப்பதன் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களின் துயரை ஒருபோதும் துடைத்து விட முடியாது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதில் புலம்பெயர் தமிழர்கள் அதீத முயற்சிகளை மேற்கொண்டு வருவது ஆறுதலாக இருக்கிறது. இருப்பினும் இவைகள் அனைத்தும் மந்த கதியிலேயேதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது வருத்தத்திற்கு உரியதே. அருகில் இருக்கும் தமிழக அரசோ அல்லது தமிழக மக்களோ பெரிதாக கிழக்கில் இடம்பெற்ற பேரவலத்தை கருத்தில் எடுத்துக் கொண்டதாக தெரியவில்லை. அரசியல் பிரச்சினையென்றால் பொங்கியெழும் தமிழகம் இயற்கை அழிவை சந்தித்திருக்கும் கிழக்குமாகாண மக்களுக்கு எதையும் செய்யாமல் இருப்பது கவலைக்கிடமான விடயமே. அரசு உதவி செய்யும் என்று நினைத்துவிடாமல் தமிழர்களின் பாதுகாப்புக்கும் அவர்களின் துன்பங்கள் தீர்ந்திடவும் உலகத்தமிழரே உறுதுணையாக இருக்க வேண்டும் என்கிற மனதுடன் உதவிகளை செய்ய முன்வர வேண்டும்.

முற்றாக சேதமடைந்துள்ள ஆறாயிரத்திற்கும் அதிகமான வீடுகளை மீண்டும் அமைப்பதற்கும் சேதமடைந்த வீடுகளை திருத்தியமைப்பதற்கும் 44.5 மில்லியன் ரூபா பணம் உடனடியாக ஒதுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பில் அமைச்சர் பசில் ராஜபக்ஸ தெரிவித்திருந்தார். தூர்ந்துபோயுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதார கட்டமைப்பை சீர்செய்வதற்கு இந்தியாவின் உதவியினை நாடியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், சேதமடைந்த வீதிகள், பாலங்கள் மற்றும் குளங்கள் என்பவற்றின் திட்ட அறிக்கையினை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த மக்களின் குடும்பங்களுக்கு மரண செலவு கொடுப்பனவான ரூபா பதினையாயிரத்தைத் தவிர வேறு இழப்பீடுகள் வழங்கப்படமாட்டாதெனவும், பாதிக்கப்பட்ட பயிர்ச் செய்கையாளர்களுக்கு எதிர்வரும் போகத்திற்கு மானியமாக விதைநெல், பசளை என்பன வழங்கப்படும் எனவும், முற்றாக சேதமாக்கப்பட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் எனவும், பகுதியாக சேதமடைந்த வீடுகளுக்கான கொடுப்பனவை பற்றியும் தொழில் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான இழப்பீடு பற்றியும் கவனம் செலுத்தப்படும் எனவும் பசில் வாக்குறுதியளித்தார்.

ஆனால் இவையெல்லாம் வெறும் வாக்குறுதியளவிலே நிற்பதாகவே மக்கள் தெரிவிக்கின்றனர். கிழக்கு மக்கள் மற்றும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இப்படியான வாக்குறுதிகளை அரசு வழங்கிவருகிறதா என்று நிலைமைகளை வைத்துப் பார்க்கும்போது சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. உலக நாடுகள் கொடுத்திருக்கும் பொருட்கள் மற்றும் பணத்தை பாதிப்புக்குள்ளான மக்களுக்கு கொடுக்காமல் ஏப்பமிடும் இவர்களா கிழக்கு மக்களின் குறைகளை தீர்க்கப்போகிறார்கள் என்று கேட்கிறார்கள் சில பொது மக்கள்.

இந்நிலையில் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்தை வலியுறுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க வழிசெய்வார்களா என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான சகல உதவிகளையும் அரசாங்கம் வழங்க முன்வரவேண்டும் என்பதே எல்லோரினதும் விருப்பமாகும். அதற்கு நமது அரசியல்வாதிகள் பக்கபலமாக செயற்படுவார்களா என்பதே இன்று கேள்விக் குறியாகவிருக்கிறது.




**மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான சகல உதவிகளையும் அரசாங்கம் வழங்க முன்வரவேண்டும் என்பதே எல்லோரினதும் விருப்பமாகும்.**

அரசியல் காய்நகர்த்தலுக்காகவும், உலக நாடுகளிடமிருந்து பணத்தை பெறுவதற்காகவுமே இப்படியான பொய்யான வாக்குறுதிகளை கொடுத்துவிட்டுச் செல்கிறார்கள். இவர்களின் வாக்குறுதிகளை நம்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை ஒருபோதும் வழங்க முடியாமல் போய்விடும். ஆகவே உலகத் தமிழர்கள் தமது நாடுகளின் ஆதரவுடன் பொருட்கள் மற்றும் பணத்தை சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக சென்றடையும் வகையில் உதவிகளை செய்ய வேண்டும். தமிழகம் மற்றும் பிற நாடுகளில் வாழும் தமிழர்கள் இது விடயத்தில் உடனடியாக தக்க செயற்பாட்டை செய்து கிழக்கு மாகாண மக்களின் துயரை போக்குவதே காலத்தின் கட்டாயம். அது தேவையும் கூட.

# தலையில்லா முண்டங்கள்

தலையெழுத்தை தலைகீழாய் எழுதிவிட்ட ஆண்டவனே
தந்துவிடு நல்வாழ்வை எமக்கு! - 'தாங்கத்
தலைவரினை' இழந்துவிட்டு தவிக்கின்ற 'எம்சமூகம்'
தலையிழந்து முண்டமெனக் கிடக்கு!

தலைவர் நாம் என்றவர்கள் தறுதலைகள் முன்னாலே
தலை கவிழ்ந்து நிற்கின்றார் எதற்கு? அவர்
தலையாட்டி பொம்மைகள்போல் தனித்துவத்தை விட்டுவிடின்
தருவாரே சில எலும்பு அதற்கு!

தலையில்லாத் தலைகளினை தலைவரென நினைத்ததற்காய்
தலையிடிதான் எங்களுக்குப் பரிசு! - பதவிக்காய்
தலைசொறிந்து பல்லிளிக்கும் தலைவர்களால்
தடுமாறும் எம்வாழ்க்கை தரிசு!

தலை தடவி கண்களிலே கண்கெட்டோர் கைவைக்க
தலையணையில் எம்தலைகள் இருக்கு! - தங்கள்
தலை தப்பினால்போதும் என்கின்ற கோழையரை
தேர்ந்தெடுத்த நாங்கள்தான் கிறுக்கு!

தலைப்பிறையை மேகத்தால் தகர்த்தெறிய முடியாது
தலைவர்களே கொண்டிடுவீர் ஒப்பு! - உங்கள்
தலைகளினை காப்பாற்ற கண்ணிருந்தும் குருடர்களாய்
தவறுகளை பார்த்திருத்தல் தப்பு!

தலையில்லா முண்டங்களாய் மாறிவிட்ட எம்மவர்க்கு
தலையாக ஒருதலைவன் எழுவான்! - அவன்
தலைவரவர் சுவடுகளில் தயங்காமல் நிதம் நடக்க
தளையொடிந்து
சிரிக்குமெங்கள்எழுவான்!!

கவிஞர் பொத்துவில் அஸ்மின்



# என்னவென்று நான் சொல்லுவேன்



என் மனத் தோட்டத்தில்
நாட்டி வைத்தேன்
காதல் விதை ஒன்று
அதை வாடி விடாமல்
தினம் தினம் வார்த்தை
நீரூற்றி வளர்த்து வந்தேன் - அன்று
தரங்கெட்ட உறவு நீங்க
போட்டேன் இடையிடையே
நம்பிக்கை உரம் - இருகரம்
கோர்க்கும் வரம் பெற்ற பெருமரமாய்
பூத்தது இன்று அன்பு எனும் பூ
காயாகி கனியாகா - சங்கதி
சொந்தமண் துறந்த என்கதி
அப்போது
மணமகள் அந்தஸ்தை - காரிகை
நானும் கைப்பற்ற துடித்தேன்
இப்போது
பட்டப்படிப்பு முடித்த பணக்கார
மருமகள் தேவையாம்
மணமகனின் தாயாருக்கு
தட்டிக்கழிக்க முடியாத
மணாளனின் மனநிலை கண்டு கலங்கினேன்
மனிதநேயம் அறியா மாமியாரே!
இது உங்கள் சதியா
எங்கள் விதியா
சீதன சந்தையில் சீர்வரிசையோடு
விலைமகளாய் சீரழிய கூடாதென்பதற்காய்
இதுவரை காலமும் நான்
கட்டிக்காத்த கற்பனை இமயம்
கண்ணீர் வெள்ளத்தில் அழிய
வேசம் போடும் மாந்தர்
மத்தியில் பாசத்தில்
என்னவென்று நான் சொல்வேன்?

தேசகீர்த்தி - ஹமீட் சுஹைப்

# வானத்தால் குதிக்கும் வடலிகள்


தியாகலிங்கம்.இ (நோர்வே)

அகல விரிந்த ஆழ்கடல் வருடி வந்த மாலை இளம் காற்றின் மந்தகார மொழி நித்தம் கேட்கும், அது அங்கே நின்று கதை பேசும், கரையோரத்துக் காவலனான பிள்ளையார் கோயில். இருள் கொண்ட நேரத்திலும் இரகசியம் பேசாத அலைகளின் கரை காணும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள். அன்றொரு நாள் சுனாமியாய் வந்ததற்காய் நிரந்தரமாய்க் கோபித்துக் கொள்ளாத மனிதர்கள் என்றும்போல் இன்றும் மறந்து மன்னித்து அவனிடமே சென்று சிலாகித்து கால்கழுவிவரும் முறியாத உறவுகள். ஆயுள் முற்றி ஆவிவிடும் தருணத்தில் வந்துவிட்ட அன்றைய நாளை உணர்ந்துகொண்ட வாகனங்களின் அவசரம். யாழ் செல்லும் சொகுசு வண்டிகளின் அணிவகுப்பு இரு கரைகளையும் அடைத்துக் கொண்டதால் சாலைப் போக்குவரத்தில் வாகனங்கள் மூச்சுவிட முடியாத அவதி. நிறுத்தி இருக்கும் சொகுசு வண்டிகளை அடையாளம் கண்டு அவசரமாய் வந்து ஏறிக்கொள்ளும் பயணிகளின் பரபரப்பு.

சீ சைட் பிள்ளையார் கோயிலும் அதைச் சுற்றி போட்டிக்கு நிற்கும் சொகுசு வண்டிகளும் யாழ்ப்பாணத்தை மோப்பம் பிடிக்க வெறிகொண்டவர்களுக்கு திறவு கோலாகிவிட்ட ஒன்று. ஆயிரமாயிரமாய்க் கொடுத்து ஆகாயத்தால் பறந்தவர்களுக்கு ஆயிரத்தோடு தரையால் போகும் அரிய வரப்பிரசாதம். நானும் மோப்ப நாயாக... எப்போதோ பார்த்ததை சடுதியாக இழந்ததை மீண்டும் பார்த்து விடவேண்டும் என்கின்ற வெறியோடு... ஏற்கனவே அனுமதிச் சீட்டைப் பெற்றிருந்த ஒரு சொகுசு வண்டிக்குள் அவசரமாக என்னையும் திணித்துக் கொண்டேன்.



உள்ளே ஊதுபத்தியும் பக்திப்பாடலும் நான் மறந்து போய்விட்ட தடங்களை மீண்டும் ஞாபகப்படுத்த, நல்லூர்க் கந்தனும் எங்கள் ஊர் முருகனும் மீண்டும் என்கண்ணில் நிழலாட, மாண்டு போன அந்த இன்பங்களை எண்ணி மீண்டும் ஒரு பெருமூச்சு என்னையும் அறியாது புறப்படலாயிற்று. முன்னுக்கு இருந்த பிரயாணி, தானே முதலில் பஸ்சில் கால் வைத்தவர் என்பதை சந்திரனில் கால் வைத்த பெருமையில் கூறி தான் சரியான வண்டியில் ஏறிவிட்டதாக உறுதிப்படுத்தும் வகையில் கைத் தொலைபேசியில் தனது முகவருக்கு திடமாக கூறிக்கொண்டு இருந்தார். கறுப்புக் கண்ணாடி கடல்காற்றை உள்ளே விடமாட்டேன் என்று அடம்பிடிக்க புழுக்கம், வியர்வை முத்துக்களை பிரசவிக்க பொறுக்க முடியாதவனாய் பஸ்ஸைவிட்டு இறங்கி வெளியே நின்றேன். தெருவையும் கடலையும் பிரித்து நின்ற தண்டவாளங்கள் நாட்டில் இருக்கும் இரு இனங்களைப் போன்று இணையவும் முடியாமல் பிரியவும் முடியாமல் சாமாந்தரப் பயணிப்பில் சலிப்புக் கொண்டாலும் கொள்ளாதவர்களாக. .



சிறிது நேரத்தில் ஒரு குடும்பமும் வந்து அதே பேரூந்தில் ஏறினார்கள். முப்பது வயது மதிக்கத் தக்க அந்த இளைஞனை நான் ஒரு முறை பார்த்தேன். சுருட்டப்பட்ட முடி, காதணி கொண்ட காதுகள், மெல்லிய வென்னியனில் சுவிஸ்மான் என எழுதப்பட்ட அடையாளம் அணிந்து இருந்த டெனிமின் இறுகிய பிடிப்பு, அவன் காலில் விலை மதிப்பான காலணி, கையிலே சுவிஸ் கடிகாரம், கழுத்திலே




தங்கச் சங்கிலி, முதுகிலே பெரிய பையொன்றுமாக சோளக்காட்டில் புகுந்த யானையாக அவன் உள்ளே போய்க் கொண்டு இருந்தான். அவனைத் தொடர்ந்து அவனது குடும்பமும் அவசரமாக உள்ளே சென்று கொண்டு இருந்தது. அந்தக் குடும்பத்தைத் தொடர்ந்து நானும் நேரம் நெருங்குவதால் பிரிய முடியாத கடல் காற்றிற்கு பிரியாவி-டை கொடுத்து வண்டியில் ஏறினேன். வண்டிக்குள் சென்ற இளைஞன் தனது பொதியை வன்முறையைப் பாவித்து அடைந்து வைத்துவிட்டு நின்று நெளிந்தான். பின்பு

"ஏசியப் போடுங்கண்ண.." எனக் கத்தினான். முன்னுக்கு இருந்து எந்தப் பதிலும் வரவில்லை. நடத்துனர் ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு அனுமதிப் பத்திரங்களைச் சரிபார்ப்பதில் மீண்டும் ஒன்றிப் போனார்.

வருபவர்களும், வண்டிக்குள் ஏறுபவர்களும், ஆசனத்தைச் சரிபார்ப்பவர்களும், பிழையான வண்டியில் ஏறி இருந்ததற்காய் திருப்பி நடத்துனரால் அனுப்பப்படுபவர்களுமாய் அலங்கோலப்படும் சிறிய சந்தைக்குள் அகப்பட்டதான உணர்வில் நான் எதுவும் செய்யமுடியாதவனாய் ஆசனத்தில் அமர்ந்து இருந்தேன். "இது ஒரு பிச்சைக்கார நாடு. எதுவும் ஒழுங்காக நடக்காது. வெள்ளைக்காறன்ர நாடு எண்டாலும் நாடுதான். எல்லாம் நேரத்துக்குச் சொல்லி வைச்சதுமாதிரி நடக்கும்" அந்த இளைஞன் பக்கத்தில் இருந்தவரோடு பெரிதாக கதைத்தான். எனக்குப் பக்கத்தில் இருந்தவர் அவனைக் காட்டி கண் சைகை செய்து வாயைப் பிதுக்கிக் காட்டினார். நானும் அவருக்கு கண்பாசை காட்டிவிட்டுப் பேசாது இருந்தேன்.

பக்கத்து ஆசனத்தில் இருந் தவர் என்னை விடுவதாய் இல்லை. "பார்த்தீங்களே.. சுவிஸ்காரரர் நெஞ்சிலேயே எழுதிக்கொண்டு வந்து இருக்கிறார். காதில தொங் கட்டான், கழுத்தில தங்கச் சங்கிலி, குடும்பியும் வைச்சிருந்தா ஆணைப் பெண்ணாக்கி பெண்ணை ஆணாக்கி இருக்கலாம். அற்பனுக்கு பவுசு வந்தமாதிரியெல்லே இந்த ஆட்டம் எல்லாம் இருக்குது..."

நான் சிரித்தேன்.

"என்ன நீங்கள் வாய் துறக்கிறியள் இல்லை" பொறுக்க முடியாதவராய் அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

"இல்ல மௌனம் கனகராசி எண்டுவினம். எங்களுக்கு இருக்கிற சோலிக்கே விடைதெரியாது. எதுக்கு மற்றைவயின்ர சோலி எண்டுதான்...?"

"அது நல்ல புத்திதான். நானும் அப்பிடி இருக்கோணும் எண்டுதான் நினைக்கிறவன். ஆனா அப்பிடி இருக்க விடுகிறான்கள் இல்லைத் தம்பி. என்ர வீட்டில ஒருத்தன் குந்திக் கொண்டு இருக்கிறான். வேலை வெட்டிக்குப் போவேன்ரா எண்டு கேட்டா வெளிநாடு போறதுதான் என்ர வேலை எண்டு சொல்லிக் கொண்டு ஊரளந்து கொண்டு இருக்கிறான். இப்பிடி யாரும் நெஞ்சில எழுதிக்கொண்டு வந்தா அவனுக்கெல்லாம் பித்தம் தலைக்கேறி விசர் பிடிச்சிடும். பிறகு தெருத்தெருவா அலைஞ்சு திரிவான். போனவங்கள் போனவங்களாகவே இருக்காமல் ஏன் திரும்பி வந்து இருக்கிறதுகளையும் குழப்போணும்? சொல்லுங்கோ தம்பி?"

எனக்கு அவர் கேட்ட கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வதென்று தெரியவில்லை. நானே குற்றவாளியாக இருந்துகொண்டு தீர்ப்பு சொல்ல முடியுமா என்பது புரியவில்லை. என்றாலும் அவரைச் சமாளிக்கும் விதமாக ஏதாவது சொல்ல வேண்டும் என்பதை உணர்ந்தவனாக

"நீங்கள் செர்ல்லுறதும் உண்மைதான் அண்ணை. அங்க கோப்பை கழுவிகினமோ, கக்கூசு கழுவிகினமோ, இங்கை வரேக்கையாவதும் உந்த நெஞ்சில எழுதுறதையும் நெளிப்பு காட்டுறதையும் கொஞ்சம் அடக்கி வாசிக்கலாம் தான். உங்கட ஆதங்கத்திலையும் சத்தியமா நியாயம் இருக்கத்தான் செய்யுது. ஆனா மனிசர் எண்டா இப்பிடித்தான் நாலுவிதமாயும் இருப்பினம் அண்ண. ஒண்டு ஒழுங்காப் போகும். இன்னொண்டு குறுக்கால இழுத்துக் கொண்டு போகும். அதுதானே இயற்கை?"

"அதுவும் சரிதான் தம்பி. இவையெல்லாம் கஷ்டப்பட்டுத்தானே காசு உழைக்கினம். அதைக் கவனமாகத்தானே செலவழிக்கோணும். அதைவிட்டிட்டு மெசினில அடிச்சமாதிரி கடனுக்குக் கார்ட்டில எடுத்து விளையாட்டுக் காட்டினால் வாயப்பிளக்கிற அப்பாவிகளுக்கு பைத்தியம் பிடிக்கத்தானே செய்யும். அந்த நேரம் நடந்து திரிஞ்ச தூரம் எல்லாம் இப்ப பஸ்ஸில போகக்கூட அவைக்கு அவமானமாய்ப் போயிட்டுது. ஓட்டோ, டக்சி வேணும் எண்டெல்லே நிக்கினம். இவங்கட ஆட்டத்தைப் பார்த்துப்போட்டு தோட்டம் துறவுக்குப் போக வேண்டியதுகள் எல்லாம் பகல் கனவு கண்டுகொண்டு திரியுதுகள். கேட்டா வெளிநாடு போற துதான் எங்கட வேலையெண்டுதுகள்" அவர் மீண்டும் புலம்பினார்.

"அண்ண ஏசியக் கூட்டுங்கோ" அந்த இளைஞன் கத்தினான். பக்கத்தில் இருந்தவர் கண்ணை விரித்து தனது அதிருப்தியைக் காட்டினார். எதுவும் புரியாத சிங்களச் சாரதி இன்னும் அதிகமாக வேகத்தைக்கூட்டி பயணிகளை இருக்கையில் இருந்து எழாதவாறு பார்த்துக் கொண்டான்.

"றோட்டே இல்லை. ஐயோ என்ன ஓட்டம் ஓடுறான். இதுக்குத்தான் இந்த நாட்டுக்கு எல்லாம் வரக்கூடாது எண்டுறது" என்றான் அந்த இளைஞன்.

"ம் இவரையெல்லாம் யாரோ நிறைகுடம் வைச்சுக் கூப்பிட்டமாதிரி. தங்கட பவுசக் காட்ட இங்க வந்திட்டு... வடலிக்க இருந்து போனவங்கள் எல்லாம் ஏதோ வானத்தில இருந்து குதிச்சமாதிரிக் கதையப்பார். ஐயோ இவனைமாதிரி எத்தனைபேர் வரப்போகினமோ?" பக்கத்தில் இருந்தவர் அங்கலாயித்துக் கொண்டார்.

சிலாபத்தில், பேரூந்து உணவு இடைவேளைக்காக நின்றது. அவசரமாக தனது குடும்பத்தையும் இழுத்துக் கொண்டு இறங்கிய அந்த இளைஞன் போன வேகத்தில் "உதுக்கையும் மனிசன் சாப்பிடுவானே?" எனக் கத்தியவண்ணம் திரும்பி வந்து பேரூந்தில் ஏறிக் கொண்டான். நானும் பக்கத்தில் இருந்தவரும் இறங்கிச் சென்று றோள்ஸ் வேண்டி பிளேன்ரீயுடன் சாப்பிட்டுவிட்டு ஆறுதலாக மீண்டும் பேரூந்திற்கு வந்தோம். அந்த இளைஞனின் குடும்பமும் அவனுக்காக வெளிநாட்டு பிஸ்கற்றையும் கடித்து போத்தல் நீரையும் பருகிக் கொண்டு இருந்தார்கள். பக்கத்து இருக்கைக்காரர் கண்ணைக்

காட்டினார். எனக்கு அவர்களைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

முறிகண்டியில் பேருந்து நின்றபோது நித்திரையின் மடியின் நிம்மதி கண்டு கொண்டு இருந்தேன். அந்த நிம்மதியை துறந்து இயற்கையின் அவதியை தணிக்க வேண்டும் என்கின்ற கட்டாயத்தில் வெளியே செல்ல வேண்டி இருந்தது. அவசர அவசரமாக அநாவசியமானதை இறைத்துவிட்டு ஒரு தேனீரை வேண்டி வந்து அருந்துவதற்கு அமர்ந்தபோது அந்தக் குடும்பம் பிஸ்கேற்றை விட்டு றோள்ஸ்சுக்கு மாறி இருந்ததைப் பார்க்க முடிந்தது. 'பசிச்சா கறிவேண்டாம். நித்திரை வந்தால் பாய் வேண்டாம்' என்று அம்மா சொல்லும் பழமொழியின் அர்த்தம் எனக்கு அப்போது புரிந்தது.

சிறிது நேர நித்திரை மயக்கத்தில் பேருந்து ஓமந்தையை வந்தடைந்திருந்தது. ஒரு காலத்தில் தவம் கிடந்து கடந்த தரைப்பாதையின் வாசலாக, மனிதம் கேள்விக்குறியாக்கப்பட்ட கணங்களாக, ஆண்டியும் அரசனும் கைகட்டி வாய்பொத்தி கௌரவத்தைக் கைவிட்டு கடந்தபாதையான ஓமந்தையின் முகம் இப்போது சற்று மாறி இருந்தது ஒருவித சௌகரியத்தைத் தந்தது.

என் நினைவுகள் 'ஐடி' என்னும் சொற்கேட்டு நெருப்பு பட்ட மசுக்குட்டியாக அடங்கிப் போயிற்று. ஒரு இராணுவ வீரன் எல்லோரிடமும் அடையாள அட்டையைப் பார்த்துக் கொண்டு வர, நானும் எனது அடையாளமாக கடவுச்சீட்டைக் காட்டினேன். பக்கத்தில் இருந்தவர் தனது அடையாள அட்டையை காட்டிவிட்டு கறுப்பு கண்ணாடியூடே நிரந்தரமாக வெளியே பார்க்கத் தொடங்கி இருந்தார். என்னிடம் இருந்த போஸ்ரல் அடையாள அட்டை இப்போது இலங்கையில் பாவிக்க முடியாது போய்விட்டது எனது வருத்தமாக நான் பேசாது இருந்தேன். எனது கடவுச் சீட்டைப் பார்த்து விட்டு அந்தக் குடும்பமும், அவரும் வெளிநாடுதான் என்று கூறியது எனது காதில் அரைகுறையாக விழுந்து கொண்டு இருந்தது. நான் கண்ணாடிப்பக்கமும் திரும்ப முடியாதவனாய், எதிர்பக்கமும் திரும்ப முடியாதவனாய் முட்கம்பிக்குள் சுற்றிவைக்கப்பட்ட மனிதனாக நேரே சிறிது நேரம் பார்த்துக் கொண்டு இருந்தேன். பின்பு வராத நித்திரை வந்ததாக கண்மூடி பாசங்கு செய்வதில் காலம் கழிக்கலானேன்.

யாழ்ப்பாணம் வந்தபோது நான் நித்திரையாகப் போய்விட்டேன். பக்கத்து இருக்கைக்காரர் என்னைத் தட்டி எழுப்பினார். நான் முதலில் நிலைமை புரியாது திரு திருவென விழித்து பின்பு ஒருவாறு நிலைமையைப் புரிந்து கொண்டேன். அரைகுறையாக விழித்துக்கொண்ட யாழ்ப்பாணம் இன்னும் அமைதிகெடாது இருந்தது. அமைதியாகிவிட்ட அந்த மனிதரின் முகத்திலும் இப்போது சாந்தம் நிறைந்திருந்தது.

"தம்பி மனிசர் எண்டா நாலுவிதமாயும் இருப்பினம் எண்டதுக்கு உண்மையிலேயே நல்ல பாடம் தந்திருக்கிறீர். நாலு சொல்லு தேவையில்லை. ஒரு சிரிப்பில ஆயிரம் விசயம் சொல்லலாம் எண்டு உம்மைக் கண்டபிறகு எனக்குப் புரிஞ்சிருக்குது. சரியப்பன் நான் வாறன்" என்றார் பக்கத்து இருக்கைக்காறர்.

என்னால் என்னையே நம்பமுடியாத ஒருவித பரிதவிப்பில் சில கணங்கள் உறைந்து போய் இருந்தேன். பின்பும் நிலைமையை உணர்ந்தவனாக..

"சரி வாங்க" என்றேன்.

ரொன்சன்

# நாய்களைப் பாதுகாத்த படையினர்

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக பல்வேறு வடுக்களையும் ஆறாத வேதனைகளையும் சுமந்து வாழும் எம்மவர் மத்தியில் இயற்கை மீண்டுமொருமுறை தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திச் சென்றுள்ளது.

நாடு முழுவதும் பரவலாக பெய்த மழை பலரது இருப்பிடங்களை பிடுங்கிக்கொண்டு தெருவுக்கு விரட்டியடித்துள்ளது. இதில் கிழக்கு மாகாணத்தில் இம்முறை பெய்த மழை பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வை நீர்க்கதியாக்கியுள்ளது. இவ்வாறானதொரு இக்கட்டான சூழலில் மக்கள் வாழ்வா? சாவா? என்றதொரு போராட்டத்தின் மத்தியில் தவித்தவேளை நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கவேண்டிய படையினர் மக்களைக் காப்பாற்றுவதை விட்டுவிட்டு தமது நாய்களைக் காப்பாற்றிய விசித்திர சம்பவம் மட்டக்களப்பில் நடந்துள்ளது.

தந்திரி மலையில் முகாமிட்டுள்ள 260 படையினர் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் வள்ளங்கள் மூலம் பத்திரமாக தங்களது பாதுகாப்பிற்கு அடைக்களம் தேடி வெளியேறினர். அவர்கள் வெளியேறும்போது தங்களது செல்லப்பிராணிகளான நாய்களையும் ஏற்றிச்சென்ற விடயத்தை சிங்களச் செய்திச்சேவையொன்று புகைப்பட ஆதாரத்துடன் வெளியிட்டுள்ளது. அவ்வாறு வெளியேறிய படையினரும், அவர்களது செல்லப்பிராணிகளும் தந்திரிமலை ரஜமகா விகாரையில் அடைக்களம் புகுந்துள்ளனர்.

படையினர் அவர்களது செல்லப்பிராணிகளைப் பத்திரமாக அழைத்துச் சென்றது தவறில்லை. ஆனால் மனிதர்கள் அநாதரவாக தத்தளித்துக் கொண்டிருக்க மிருகங்களுக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவமே இங்கு கவனிக்கவேண்டியது.

வெள்ளத்தில் சிக்குண்டு அவதியுற்ற மக்கள் அப்பகுதியில் கடமையிலிருந்த படையினரை அணுகி உதவி கோரியபோது, தமது வள்ளத்திற்கு பெற்றோல் வாங்கித் தந்தால்தான் உதவுவோம் என்று மனிதாபிமானமற்ற முறையில் கூறி தமது நாய்களை ஏற்றிச் சென்றுள்ளனர்.

இவ்வாறானதொரு சூழலில் நாய்களைவிட மனித உயிர்கள் கேவலமானவையா? ஒரே நாடு ஒரே மக்கள் என்ற பரந்த சிந்தனையில் ஓட்டை விழுகிறதா? இவற்றிற்குப் பதிலளிக்க வேண்டியது காலத்தின் கடமையாகும்.



இன்று வானலைகளின் வல்லரசனாகத் திகழும் 'சூரியன் எப்.எம்' பற்றித் தெரியாதோர் யாருமே இல்லை. 13 ஆவது வருடத்தில் வெற்றிவாகை சூடி, வீறுநடை போட்டுக்கொண்டிருக்கும் சூரியன் பல சாதனைகளை மக்களுக்காகச் செய்துள்ள ஒரு மக்கள் வானொலி என்றும் சொல்லலாம். ஒரு மதிய வேளையில் சூரியன் அறிவிப்பாளர்களுடன் காலி முகத்திடலில் ஒரு ஓரமாக ஒதுங்கினோம். விடாப்பிடியாக பெய்துகொண்டிருந்த மழைகூட அன்று ஓய்ந்துகொண்டது ஆச்சரியமாகவிருந்தது. சூரியனின் கதிர்கள் காலிமுகத் திடலெங்கும் சுட்டெரித்துக் கொண்டிருந்தன.


அப்பப்பா என்ன ஒரு துடிப்பு! என்ன கலகலப்பு! சுறுசுறுப்பான ஒன்பது இளம் அறிவிப்பாளர்களை ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் சந்திக்கக் கிடைத்தது சந்தோசமாகவிருந்தது. வானொலிகளில் கேட்கக்கிடைத்த குரல்களை நேரடியாக பார்த்தபோது இவர்களா இப்படி என்று தோன்றியது. எல்லோருக்கும் பரிச்சயமான ஒரு கலைஞர், அறிவிப்பாளர், நாடறிந்த ஒரு நல்ல மனிதர் 'நடா அண்ணா' என செல்லமாக அழைக்கப்படும் நடராஜசிவம், சூரியனின் நிகழ்ச்சிப் பொறுப்பதிகாரி நவனீதன், 'மணி அண்ணா' எனப்படும் மணிவண்ணன். இவர் உண்மையாகவே டொக்டராம். அத்தோடு காலை நேரத்தில் ஒலிக்கும் இரு குரல்களுக்குச் சொந்தக்காரர்களான சைலி மற்றும் டிலான், நிசாந்தன், தரணி, சந்ரு மற்றும் சஹானா. இவர்கள் அனைவரையும் ஒருமித்துப் பிடிக்க கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது.

நடாஅண்ணாதான் ஆட்டத்தை ஆரம்பித்தார். "36ஆவது மாடியில் இருந்த எங்களை ஒரேயடியாக கீழே கொண்டுவந்து நிறுத்திட்டீங்களே" என்றார். எல்லோரும் சிரித்துக்கொண்டே வந்த நோக்கத்தை மறந்து பட்டம் விட பறந்துவிட்டார்கள். அவர்கள் பின்னாடியே ஓடிச்சென்று "சரி பிறகு பட்டம் விடலாம். இப்போது கொஞ்சம் கதைப்பம்" என்றேன். "எதைப்பற்றிக் கதைப்பது" என எல்லோரும் கோரஷாக கேட்டார்கள். நாளைய சமுதாயத்தை ஒரு நல்ல வழியில் கொண்டுசெல்லவேண்டிய பொறுப்பு இன்றைய இளைஞர்களுக்கு இருக்கிறதா என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டேன்.

"சமுதாயத்த திருத்துற வழிய எங்ககிட்ட கேக்குறீங்களா? நானே நிறைய திருந்த வேண்டி இருக்கு" என்றார் சஹானா. கூடவே நிசாந்தனும் "சமுதாயமா திருந்துறதா.." என்றார். "பரவால்ல சொல்றன்" என்ற சஹானா "அனுபவஸ்தர்கள் காட்டும் வழியில் எங்களுடைய இளைஞர்கள் சென்றால் நல்லா இருக்கும். ஒரு பெண்ணாக இருந்து போராடுறது கஷ்டம். அப்படி போராடனும் என்றால் எதையும் மிஸ் பண்ண ரெடியாக இருக்கனும். எங்களுடைய ஆசாபாசங்கள் எல்லாவற்றையும் இழந்தால்தான் அப்படி ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கலாம்" என்றார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த டிலான் கொல்லென்று சிரித்தார்.

"இளைஞர்கள் நினைத்தால் சாதிக்க முடியாத விடயம் ஒன்றுமில்லை. ஒரு நாட்டின் ஜனாதிபதியைக்கூட மாற்றலாம். அனுபவம் இருக்கணும் என்று சொல்லமுடியாது. இளைஞர்கள் எல்லோரும் ஒன்றாகத் திரண்டு செயற்பட்டாலே அது ஒரு பெரிய சக்திதான்" என்றார் தரணி. "பெண்கள் நினைத்தால் முடியாதது ஒன்டுமே இல்ல. அவங்களால் சமுதாயத்த திருத்தி முன்னுக்கு கொண்டுவரமுடியும்" என்றார் சைலி.

நவா போட்டாரே ஒரு போடு. "நாங்க எல்லோரும் marry பண்ணினால் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கலாம்" என்றார். எல்லோருக்கும் சிரிப்பு. "அப்ப இது இப்போதைக்கு நடக்காது" என்றார் தரணி. "அதுக்கு இன்னும் ஒரு 5 வருஷம் ஆகணும்" என்றார் சந்ரு. "சூரியன் அறிவிப்பாளர்கள்






# கலாட்டா

எல்லோருமே சிறியவர்களாம். வயசு காணாதாம். நான் என்னத்ததான் சொல்ல'' என்றார் டிலான்.


எல்லாவற்றையும் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்த நடா அண்ணாவோ மிகவும் பொறுமையாக ''நாளைய சமுதாயத்தை நல்ல நிலைக்கு கொண்டுவருவது இளைஞர்கள் கையிலும் இல்ல, அனுபவஸ்தர்களின் கையிலும் இல்ல. காந்தியைப்போலவோ, இயேசுவைப்போலவோ, புத்தரைப்போலவோ, அன்னை சாரதா தேவியைப் போலவோ உள்ள மகான்களால்தான் முடியும்'' என்றார் சூடாக.

கொஞ்ச நேரம் சீரியஸா கதைத்துவிட்டதால் சற்று இயல்பாக கதைக்கத்தொடங்கினோம். சஹானாதான் ஆரம்பித்தார்.

''நான் Evening Show நவா அண்ணாவோட செய்றன். அந்த கொடுமைய எப்படிச் சொல்றது..'' என்று சஹானா சொல்ல ''நவா என்ன கொடுமை.. என்ன கொடுமை?'' என்று கேட்க ''பார்த்தீங்களா.. பார்த்தீங்களா? இப்படித்தான் என்ன மிரட்டுவாரு'' என்று சஹானா பதிலுக்கு சொல்ல நான்தான் அந்த சிறு சண்டையை தீர்த்துவைத்தேன்.

''சரி காதலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று எல்லோரிடமும் ஒரு கேள்வியைப் போட்டேன். ''காதல் ஒரு அழகான உணர்வு. அழகான நல்ல காதல் எல்லோருக்கும் கிடைக்காது. இரண்டு பேருமே உண்மையாக இருந்தால் நிச்சயமா வெற்றி கிடைக்கும்'' என்ற சஹானா ரொம்ப சீரியசாக காதலிக்கிறாராம். கல்யாணம் எப்போது என்று கேட்டதும் நாணிக் கோணி முகம் சிவந்து ஓடியே போய்விட்டார்.

வானொலியில் நேயர்களுடன் வெளுத்துக்கட்டும் இவர்கள் நேரில் கதைக்க ரொம்பவும் வெட்கப்பட்டார்கள். ''பாருங்க நம்ம சூரியன் அறிவிப்பாளர்கள் எல்லாம் எப்படி வெட்கப்படுறாங்க'' என்று என்னிடம் நடா அண்ணா காட்டினார். ஆனால் தரணியோ என்னருகில் வராமல் ஒரு தூரத்தில் போய் அமர்ந்துகொண்டார். சந்ரு கடைசிவரை என் முகத்தையே பார்க்கவில்லை. அவ்வளவுக்கு



வெட்கமாம்.

"காதல் நல்ல விசயம் எண்டு எல்லாரும் சொல்றாங்க. அது நல்லாவே இருந்துட்டு போகட்டும்" என்றார் சைலி. நேரம் வரும்போதுதான் தன்னுடைய காதலைப்பற்றி சொல்வாராம். அவ்ளோ பெரிய்ய்யயயய காதலாம். சந்ருக்கு காதல் தோல்வியென்ற விடயம் இவர் சொல்லித்தான் எனக்குத் தெரியும். (ஐயோ பாவம்...)

இந்தக் காதலைப் பற்றிக் கேட்டாலே எல்லோரும்

"காதல் நல்ல விசயம் எண்டு எல்லாரும் சொல்றாங்க. அது நல்லாவே இருந்துட்டு போகட்டும்". நேரம் வரும்போதுதான் தன்னுடைய காதலைப்பற்றி சொல்வாராம் சைலி.

எஸ்கேப் ஆகிவிடுவார்கள். தரணி காதலிக்கவில்லையாம். அதனால் அவருக்கு காதலைப் பற்றி தெரியாதாம். (நம்பிட்டோம்) "நிசாந்தனை காதலிக்க என்று ஒரு கூட்டமே இருக்கின்றது. ஆனால் அவர் யாரை காதலிக்கின்றார் என்று அவருக்கு மட்டும்தான் தெரியும்" என்று தரணி சொல்ல "அட ஏண்டாப்பா இதெல்லாம் சொல்லி குடும்பத்துக்குள்ள குழப்பத்த உண்டுபண்ணுறீங்க" என்ற நிசாந்தன் "நான் லவ் பண்ணுவன். ஆனால் சீரியஸா லவ் பண்ண மாட்டன். ஏன்னா அது பொய்" என்றார்.

டிலான் உடனே "சீ நான் அந்தமாதிரி இல்ல. நான் சின்னப் பிள்ள. இப்பதான் 15 வயசு" என்றார் நக்கலாக. (இது கொஞ்சம் ஓவராத் தெரியேல?)

"எங்களையெல்லாம் கேக்குறீங்களே.. மணி அண்ணாக்கு கேர்ள் பிரண்ட் இருக்கா எண்டு கேக்கலயா" என்றார் நிசாந்தன். உடனே சந்ரு "அவர் Marry பண்ணிட்டார்," என்றார். "எப்பவுமே அவர் யாராவது இப்படிக் கேட்டால் அவரை முந்திக்கிட்டு இவங்கதான் பதில் சொல்வாங்க, ஆனால் அவர் வாயே திறக்க மாட்டார்" நவாவின் பக்கம் திரும்பினேன். "காதல் என்றால் பஸ் மாதிரி. கல்யாணம் என்பது Flight மாதிரி. பஸ்ல போய்க்கொண்டு இருக்கும்போது இறங்கலாம். ஆனால் Fightல போய்க்கொண்டு இருக்கும்போது இறங்க ஏலாது. அதால கொஞ்சம் யோசித்துதான் செய்யனும்" என்ற நவாவுக்கு 23 வயதுடைய, அழகான, பரதநாட்டியம் தெரிந்த பெண்தான் வேண்டுமாம். என்ன வாசக நேயர்களே! உங்களுக்கு இந்தத் தகுதி இருந்தால் நவாவுக்கு அப்ளிகேசன் போடலாம். (என்ன நவா ஓகேயா?)

"இவங்கள நம்பாதீங்க. எல்லோரும் நல்ல பசங்க போல இருப்பாங்க. ஆனால் இவங்கள மட்டும் நம்பவே கூடாது. இதுக்குமேல நான் சொல்லமாட்டன். பிறகு வீடு தேடி வந்து அடிப்பாங்க" என்றார் சைலி.

இவர்கள் மறக்கமுடியாத சம்பவங்கள் ஒருசிலவற்றையும் எம்முடன் பகிர்ந்துகொண்டனர். "என்னுடைய மச்சானுக்கு என்னோட வயசுதான் இருக்கும். நான் இந்தத் துறைக்கு வர காரணம் அவரும்தான். நான் அறிவிப்பு செய்துகொண்டிருக்கும்போது அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. அது என்னை மிகவும் பாதித்த ஒரு விடயம்" என்று கண்கலங்கினார் டிலான். டிலானுக்கு அன்று சுகமில்லை. இருந்தும் எங்களுக்காக சிரமப்பட்டு வந்திருந்தார். எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு சந்ரு பேச ஆரம்பித்தார். "எங்கட வலியக் கொழுவி நிகழ்ச்சியில் பலர் எங்களை 'உனக்கென்ன லூசா? பைத்தியமா' என்றெல்லாம் ஏசியிருக்காங்க. இது மட்டுமல்ல இன்னும் எவ்வளவோ இருக்கு. அடி வாங்காத குறை மட்டும்தான். சூரியன் என்று சொல்லித்தான் அவர்களிடமிருந்து தப்பித்து வருவம். இந்த சுவாரஷ்யங்களை என்றுமே மறக்க முடியாது" என்றார்.

"வித்தியாசமாக யோசிப்பதுதான் எங்களின் வெற்றிக்கு காரணம்" என்றார் நவா. நவாவுக்கு மறக்கமுடியாத விடயம் அவர் சூரியனுக்கு நேர்முகத் தேர்வுக்கு வந்ததுதானாம். "விடிய காலையில் 8 மணிக்கு எனக்கு கோல் வந்தது நேர்முகத் தேர்வுக்கு வாங்க என்று. அப்போது நாங்கள் விளையாடிக்கிட்டு இருந்தம். 10 மணிக்கு நேர்முகத் தேர்வு. வீட்ட போய் வெளிக்கிட்டு வாறதுக்கு நேரம் இல்ல. அப்படியே வந்துட்டம். Voice Recording நடந்தது. பிறகு என்னை போய் நாளைக்கு நல்லா உடுத்திக்கிட்டு வாங்க என்றாங்க. மறுநாள் நேர்முகத் தேர்வு நடந்தது. வீட்டுக்கு போய் சேர்வதற்கு முன்னரேயே 'நீங்க செலக்ட்டட்' என்று கோல் வந்தது" என்று சொல்லி சந்தோஷப்பட்டார் நவா.

"முன்பு எப்ப பார்த்தாலும் எங்கள தனியார் வானொலி... தனியார் வானொலி... என்று சில மூத்த அறிவிப்பாளர்கள் குறை சொல்லிக்கிட்டே இருப்பாங்க. இப்ப அவங்க எங்கள வெளில கண்டால் மனசார வாழ்த்துறாங்க. தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும்தான் எங்களுடைய வெற்றிக்குக் காரணம்" என்று அடுக்கிக்கொண்டே போனார் நவா.

நேரமும் நகர அன்றைய இனிமையான மாலைப்பொழுதில் சூரியன் அறிவிப்பாளர்களுடன் கலாய்த்த மகிழ்ச்சியில் நான் வீடு திரும்ப, சூரியனும் தன் கதிர்களுடன் அஸ்தமிக்கத் தொடங்கியிருந்தான் ○

சந்திப்பும் படங்களும் - சாகித்யா


பட்டம் விடும்போது...

"முன்பு எப்ப பார்த்தாலும் எங்கள தனியார் வானொலி... தனியார் வானொலி... என்று சில மூத்த அறிவிப்பாளர்கள் குறை சொல்லிக்கிட்டே இருப்பாங்க. இப்ப அவங்க எங்கள வெளில கண்டால் மனசார வாழ்த்துறாங்க. தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும்தான் எங்களுடைய வெற்றிக்குக் காரணம்"


# ஓடியோ பைல்களை நமக்கு தேவையான அளவிற்கு வெட்டி ரிங்டோனாக உபயோகிக்க...

இன்று கையடக்கத் தொலைபேசி இல்லாத நபரே இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் ரசனைக்கேற்ற விதத்தில் விதவிதமாக ரிங்டோன் வைத்துக்கொள்வார்கள். நாம் முழுப் பாடலையும் ரிங்டோன் ஆக செட் செய்யும் வசதி இருந்தாலும் இப்படி செட் செய்யும்போது நமக்கு ஏதேனும் அழைப்பு வந்தால் அந்த பாடலில் உள்ள இசை முதலில் வந்து அடுத்து பாடல் வருவதற்குள் அந்த அழைப்பு துண்டிக்கப்படும். மற்றும் நமக்குத் தேவையான பகுதியை மட்டும் ஒலிக்க செய்ய முடியாது. ஆகவே நாம் எப்படி முழு பாடலில் இருந்து நமக்கு தேவையான பகுதியை மட்டும் வெட்டுவது என பார்ப்போம்.

இதனைச் சுலபமாக செய்ய ஒரு இலவச மென்பொருள் உள்ளது. கீழே உள்ள டவுன்லோட் பட்டனை அழுத்தி இந்த மென்பொருளை உங்கள் கணனியில் நிறுவி கொள்ளுங்கள்.

* நிறுவியதும் டெஸ்க்டொப் பகுதியில் வரும் shotcut பட்டனை இரண்டு முறை கிளிக் செய்து மென்பொருளை திறந்துகொள்ளுங்கள்.


* முதலில் Open என்ற பட்டனை கிளிக் செய்து உங்கள் ஓடியோ பைலை தெரிவு செய்து கொள்ளுங்கள்.




தெரிவு செய்ததும் அந்தப் பாடல் ஒலிக்க ஆரம்பிக்கும்.

* அங்கு உங்களுக்குத் தேவையான இடத்தில் Scroll பட்டனை நகர்த்தி உங்களுக்கு தேவையான இடத்தில் வைத்து Set start என்பதை கிளிக் செய்யவும்.

* அடுத்து உங்களுக்குத் தேவைப்படும் இடம் வரை வந்தவுடன் End Start என்பதைக் கிளிக் செய்யவும்.




* இப்பொழுது நீங்கள் தெரிவு செய்த பகுதி கட் ஆகி விட்டது. இப்பொழுது Play Selection என்ற பட்டனை அழுத்தினால் நீங்கள் தெரிவு செய்த பகுதி மட்டும் Play ஆகும். அந்தப் பகுதி திருப்தியாக இருந்தால் Save Selection என்ற பட்டனை அழுத்துங்கள். அது உங்கள் கணனியில் சேமிக்கப்படும்.

* தெரிவு செய்த பகுதி திருப்தியாக இல்லை என நினைத்தால் New Selection என்ற பட்டனை அழுத்தி வேறு இடத்தை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து உங்கள் கணனியில் சேமித்துக் கொள்ளுங்கள்.

இந்த மென்பொருளை டவுன்லோட் செய்ய கீழே உள்ள தளத்திற்குச் செல்லவும்.


http://download.cnet.com/3001-2170_4-10724232.html?spi=362f75166449ad4cbc269e01e2803576

இனி உங்கள் இஷ்டம் போல ஓடியோ பைல்களை கட் செய்து ரிங்டோனாக வைத்துக்கொள்ளலாம்.

## கம்பியூட்டர் போல்டர்

Standard Buttons மற்றும் Address Bar என்பன நமது கம்பியூட்டரில் எப்போதும் தெரியும் வகையில் இருக்கும். சில சந்தர்ப்பங்களில் இவை திடீரென்று காணாமல் போய்விடுவதும் உண்டு. அதனை மீண்டும் எப்படி கொண்டுவருவது என்று பார்ப்போம்.

போல்டரில் Standard Buttons மற்றும் Address Bar இல்லை. இப்போது உங்கள் போல்டரில் மேலே உள்ள View என்ற இடத்தை கிளிக் செய்யுங்கள். அதில் Toolbars என்பதை கிளிக் செய்தால் கீழுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு உங்களுக்கு இன்னொரு தட்டு Open ஆகும். அதில் Standard Buttons மற்றும் Address Bar என்ற இரண்டு இடத்திலும் டிக் இல்லாமல் இருக்கும்.




அவ்விரண்டு இடத்திலும் நீங்கள் டிக் செய்துவிட்டால் காணாமல் போன அந்த இரண்டும் வந்துவிடும்.




# ஆடுகளம் வித்தியாசமான வெற்றிக்களம்

**பொ**ங்கலுக்கு வெளியான படங்கள் எல்லாவற்றையும் பார்த்துவிட்டாலும் சில படங்களைப் பார்க்கும்பொழுது மட்டும்தான் அதுகுறித்து எழுதத் தோன்றுகிறது. 'துரோகம் ஆடியது, ஆடுகின்றது, ஆடும்' என்ற வினைத்தொகையின் பண்பாய் வெளிவந்திருக்கின்ற படம்தான் 'ஆடுகளம்'. உலகம் இருக்கும் வரை ஒருவரின் அன்பில், அவர் நம்மீது கொண்டிருக்கும் அக்கறையில் திக்கித்திணறி நாம் மூர்ச்சையாகிப் போகும்பொழுது முதுகில் விழும் குத்தே 'ஆடுகளம்'

சமுத்திரக்கனியின் குரலில், சேவல் சண்டையைப் பற்றிய வரலாற்றில் தொடங்குகிறது இப்படத்தின் தொடக்கம். 'பொல்லாதவன்' பாணியில் முதலில் கிளைமாக்ஸ், அதிலிருந்து பின்னோக்கி கதை என்ற நகர்வை மீண்டும் கையாண்டிருக்கிறார் இயக்குனர் வெற்றிமாறன்.

தனது முதல் படமான பொல்லாதவனில் வடசென்னை தாதாக்களின் இருட்டு உலகத்தை கீழ்த்தட்டு, நடுத்தர வர்க்கத்து இளைஞனின் வாழ்வின் பின்னணியில் அழுத்தமாகச் சொன்ன வெற்றிமாறன் இந்த முறை வேறொரு களத்தில் இறங்கி ஆடியிருக்கிறார். மதுரையில் சேவல் சண்டையில் ஈடுபடும் குழுக்களைப் பின்னணியாகக் கொண்டு மனிதர்களுக்குள் செயல்படும் மிருகத்தனங்களைக் காட்டியிருக்கிறார்.

களம் புதிது, காட்சி புதிது என்று தயங்காமல் சொல்லிவிடலாம். சேவல் சண்டையின் தன்மைகளை நுட்பமாகவும் துல்லியமான விவரங்களுடனும் ஆவணப்படுத்துகிறார் வெற்றிமாறன். சேவல்களை வைத்துக்கொண்டு நடக்கும் மனித ஆட்டங்களை சுவாரஸ்யமாகச் சொல்லிச்செல்கிறார். சேவல் சண்டையில் அந்த ஏரியாவிலேயே கொடிகட்டிப் பறக்கும் பேட்டைக்காரன் (புலம்யெர் கவிஞரான வ.ஐ.ச. ஜெயபாலன்) என்ற பெரியவரின் குழுவிடம் தொடர்ந்து தோற்றுவருகிறது பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரத்தினத்தின் குழு. ரத்தினத்தின் அப்பா சேவல் சண்டையில் பெரிய ஆளாய் இருந்தவர்.

கறுப்பு (தனுஷ்) பேட்டைக்காரன் குழுவில் உள்ள விசுவாசமான சிஷ்யன். கறுப்பு தன் குருவிடம் கற்றுக்கொண்டதை வைத்து ஒரு சேவலைத் தனியாக வளர்த்து வருகிறான். ஆனாலும் பேட்டைக்காரன் அது பந்தயத்தில் ஜெயிக்காது என்று கணிக்கிறார். ரத்தினத்திற்கும் பேட்டைக்காரனுக்கும் நடக்கும் கடைசி சேவல் சண்டையில் கறுப்பு, குருவை மீறி தன் சேவலைக் களமிறக்கி ரத்தினத்தைத் தோற்கடித்து பேட்டைக்காரரின் மானத்தைக் காப்பாற்றுகிறான். இதனால் பேட்டைக்காரனின் ஈகோ சீண்டப்படுகிறது. வெற்றியால் கறுப்புவின் வசதியும் புகழும் அதிகரிக்க பேட்டைக்காரன் உள்ளுக்குள் புழுங்குகிறார். அந்தப் புழுக்கம் அவரை எதை நோக்கி நகர்த்துகிறது? எதிரியைக்கூட நேருக்கு நேர் எதிர்கொள்ளும் பேட்டைக்காரன் தன் சிஷ்யனை எப்படி எதிர்கொள்கிறார்? என்பதில் மனிதர்களின் குணம் துல்லியமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கதைக்கு நடுவே ஆங்கிலோ இந்தியப் பெண் ஐரின் (ரொப்ஸி) மீது தனுஷ் கொள்ளும் காதலும் அது மெல்லக் கனியும் விதமும் சொல்லப்படுகின்றன.

தன் மீது கட்டப்பட்ட பிம்பம் சிதையும்போது தன் ஈகோவின் மீதான தாக்குதலால் மனிதன் எப்படியெல்லாம் தன் கோர முகத்தைக் காட்ட நேர்கிறது? அதன் பின் விளைவுகள் என்னென்ன? என்பதையெல்லாம் ஆடுகளம் சொல்லிச்செல்கிறது.

முடிந்தவரை இயல்பாய், நேர்மையாய், எடுத்துக்கொண்ட கதைக்களத்துக்கு நேர்மை செய்வதாய் படத்தின் டைட்டிலிலிருந்தே சேவல் சண்டையின் தமிழக வரலாற்றுப் பின்னணியுடன் தொடங்கி அதன் வளர்ப்பு, பயிற்சி, சண்டையிடும் முறை, அம் மனிதர்களுக்கும் சேவல்களுக்கும் இடையேயான உறவு போன்ற பலவற்றை காட்சிப்படுத்தியிருப்பதில் தெரிகிறது வெற்றிமாறனின் உழைப்பு.

பேட்டைக்காரனுடன் சேர்ந்தே வரும் தனுஷ், கறுப்பு என்ற கதாபாத்திரத்தில் தன்னுடைய வித்தியாசமான நடிப்பை வெளிக்காட்டியிருக்கிறார். பேட்டைக்காரன் பேச்சைக் கேட்காமல் தான் வைத்திருக்கும் ஒரு சேவலுடன் இறங்கும் போதும் வெல்லும் போதும் தியேட்டர் கதிகலங்குகிறது. தன் தாய் இறக்கும் போது சரி, போட்டியில் வென்று வந்த பணத்தை செலவு செய்யும் போதும் சரி, காதலியிடம் ஆங்கிலத்தில் பேச முயற்சிக்கும் போதும் சரி, இறுதிக் கட்ட காட்சியிலும் சரி.. தனுஷ் எங்கெங்கு

விக்ரமாதித்தன்

என்னவேண்டுமோ அதை சிறப்பாகத் தந்திருக்கிறார்.

பொலிஸ் விரட்டியதால் விட்டுவிட்டுவந்த சேவலை, தேடிப்போகும் போதுதான் நாயகி ரொப்ஸியை சந்திக்கின்றான் கறுப்பு. பார்த்த உடனே நாயகன் காதல் வயப்படுவதும், பிறகு காதல் இல்லையென நாயகி மறுப்பதும், மீண்டும் நண்பர்களாகுவதும் படத்துடன் ஒன்றியிருக்கிறது. இடைவேளைக்கு பிறகு தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாமல் தனுஷ் தன்னுடைய இயல்பான நடிப்பை வெளிக்காட்டியிருக்கிறார்.

நாயகி ரொப்ஸி ஒரு ஆங்கிலேய இந்திய பெண்ணாக நடித்திருக்கிறார். கதையில் இவருக்கு அதிக நடிப்போ தனியே டுயட்டோ இல்லை. இருந்தாலும் கச்சிதமாக நடித்திருக்கிறார்.

புலம்பெயர் எழுத்தாளரான கவிஞர் ஜெயபாலன், படத்தின் இறுதியில் செய்யும் வில்லத்தனம் சூப்பர். படத்தின் ரத்த ஓட்டம் தனுஷ் என்றால் அதன் இதயமாக ஜெயபாலனைச் சொல்லலாம். பழுத்த நடிகரைப் போன்ற திறனுடன் பாத்திரத்தைக் கையாள்கிறார். அந்த மீசைக்குள் நெளியும் உதடுகளும் ரோஷத்தில் துடிக்கும் கண்களும் அட்டகாசம், கோபம், பொறாமை என்று எல்லாவற்றுக்கும் ஈடு கொடுக்கிறது அவரது நடிப்பு.

தலை நிறைய முடியுடன் ஹீரோவின் நண்பனாக கிஷோர். நடை, உடை, பாவனைகளில் நிஜமான நண்பனாக இருக்கிறார். எந்த நேரத்திலும் வில்லனாகிவிடுவாரோ என்று நாம் நினைத்துக் கொண்டே பார்ப்பதால் வில்லனாகவும் தெரிகிறார். இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விஷயம், ஜெயபாலனுக்கும் கிஷோருக்கும் குரல் கொடுத்திருக்கும் ராதாரவியும் சமுத்திரக்கனியும்! இவர்கள் இருவரும் குரலுக்கும் ஒரு பாத்திரம் உண்டு என்பதைக் காட்டியிருக் கிறார்கள். இவர்களைப் போலவே தனுஷின் தாயாக வருபவர், தனுஷின் கூடவே வரும் நண்பர், பேட்டைக்காரனின் மனைவி மீனாள், பேட்டைக்காரனுக்கு எதிராக உறுமிக் கொண்டே திரியும் இன்ஸ்பெக்டர் ரத்தினம் என எல்லோருமே படத்துக்கு பலம் சேர்க்கிறார்கள். இன்னும் பல மதுரை மண்ணின் கதாபாத்திரங்கள் திரையில் செதுக்கப்பட்டிருக்கின்றன. வலிந்து திணிக்கப்பட்ட பாடல்கள் இல்லை. சண்டைக் காட்சிகள் இல்லை. இரட்டை அர்த்தமுள்ள நகைச்சுவைக் காட்சிகள் இல்லை. கிராமத்துக் களம் என்பதால் பச்சைப்பசேல் காட்சிகள் இல்லை.

ரத்தக்களறி வெட்டுக்குத்து இல்லை.

கதைக்கான களம்தான் இருக்கிறது. கதையின் மாந்தர்கள் தான் இருக்கின்றார்கள். பொல்லாதவனில் ஏற்படுத்திய நம்பிக்கையைத் தக்கவைத்திருக்கிறார் வெற்றிமாறன். நடிகர்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அத்தனைச் சிறப்பானது. பிசிறு தட்டாத மதுரைக் குரலோடு பொருந்தியிருக்கிறார் தனுஷ். ஒளிப்பதிவு, பின்னணி இசை, கிரபிக்ஸ் போன்ற அத்தனை தொழில்நுட்ப விடயங்களும் நிறைவு. சேவல் சண்டைக் காட்சிகளின் நீளமும் இடைவேளைக்குப் பிறகான சில காட்சிகளின் நீளமும் கதைக்கு அவசியமேயாயினும் கொஞ்சம் சோர்வைத் தந்ததை மறுப்பதிற்கில்லை.

| | |
|---|---|
| தயாரிப்பு | : சன் பிக்சர்ஸ் |
| எழுத்து, இயக்கம் | : வெற்றிமாறன் |
| நடிப்பு | : தனுஷ், வ.ஐ.ச. ஜெயபாலன், கிஷோர், ரொப்ஸி |
| இசை | : ஜி.வி. பிரகாஷ் குமார் |
| ஒளிப்பதிவு | : வேல்ராஜ் |

வெற்றிமாறனுக்கு இடதும் வலதுமாக நின்று தோள் கொடுத்திருப்பவர்கள் இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷும் ஒளிப்பதிவாளர் வேல்முருகனும். பிரகாஷின் இசையில் 'யாத்தே...' பாடல் கலக்குகிறது. ஒளிப்பதிவாளர் வேல்ராஜ், காட்சிகளின் காலப் பின்னணியைக் கச்சிதமாகப் புலப்படுத்தியுள்ளார். இரவுக் காட்சிகள் அற்புதமாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன. இறுதிக் காட்சிகளில் தான் ஏமாற்றப்பட்டுவிடுவதை உணர்ந்ததும் உணர்ச்சிவசப்படாமல் பேசும் வசனங்கள், ஏக்கங்களில் தனுஷ் நடிப்பின் உச்சத்தை தொட்டிருக்கிறார். தனுஷின் திரை வரலாற்றில் மிகப்பெரிய வெற்றிப்படமாக ஆடுகளம் அமையலாம். தமிழகத்தில் மட்டும் நின்று விடாமல் உலகத்தை வலம் வரும் உக்தியை தமிழ் சினிமா கற்றுக் கொண்டு விட்டது. அந்த வரிசையில் தனுஷின் நடிப்பும், வெற்றிமாறனின் இயக்கமும், ஜி.வி. பிரகாஷின் இசையும் ஆடுகளம் உலகத்தரம் வாய்ந்த படம் என்பதை உணர்த்தியிருக்கிறது.

**ஆகமொத்தத்தில் ஆடுகளம் யதார்த்தம்**



# வட்டவளைப் பகுதி தோட்டப்புறங்களும் வாசிகசாலைகளின் நிலைமைகளும்

எம். சந்திரசேகரன்

ஒரு மனிதன் முழுமையடைவது அவனது வாசிப்புத் திறமையாலேயே. இந்த வாசிப்புத் திறன் மேம்பாட்டுக்கு வாசிகசாலைகளின் (Library) அவசியம் இன்றியமையாததொன்று. இது குறித்து மலையகப் பகுதிகளில் தற்போது அதிகளவில் வலியுறுத்தப்பட்டு வந்தாலும் ஏராளமான தோட்டப்புறங்களில் இந்த வாசிகசாலையமைவு என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. சில தோட்டங்களில் வாசிகசாலைகள் இருந்தாலும்கூட அது பல குறைபாடுகளுடன் இயங்குவதனைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் சில தோட்டப்புறங்களில் முன்னர் வாசிகசாலைகள் அமைக்கப்பட்டிருந்தாலும்கூட சிறந்த





கவனிப்பாரின்மையால் குறுகிய காலத்தினுள் அவை மூடுவிழாக் காண்கின்றன. இவ்வாறுள்ள நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட வட்டவளை நகரத்தைப் பிரதானப்படுத்தி அதன் சுற்றுப் புறத்திலுள்ள 12 தோட்டங்களிலுள்ள வாசிகசாலைகளின் நிலைமைகள் தொடர்பாகவே இக்கட்டுரை அலசுகிறது.

வட்டவளை நகரத்தைப் பிரதான நகரமாகக் கொண்ட தோட்டப்புறங்களான லொனக், மீனாட்சி, அட்லீஸ், இன்ஜரா, மவுன்ஜீன், வட்டவளை, கடவளை, அகரவத்தை, கரோலினா, தியகலை, பின்கோயா, ரொஸ்ஸல்லை ஆகிய 12 தோட்டப்புறங்களில் லொனக் என்ற ஒரேயொரு தோட்டத்தைத் தவிர வேறு எந்தத் தோட்டத்திலுமே வாசிகசாலைகள் இல்லை.

மேற்குறிப்பிட்ட தோட்டப்புறங்களில் சில தோட்டங்களில் முன்பு வாசிகசாலைகள் அமைக்கப்பட்டிருந்தாலும்கூட அதுமுறையானபராமரிப்பு இன்மையால் குறுகிய காலத்தினுள்ளேயே மூடுவிழாக் கண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக இப்பகுதியில் உள்ளவர்களது குறிப்பாக மாணவர்களது வாசிப்புத் தேவைக்காகவும். அறிவுத் தேடல், கற்றல் நடவடிக்கைக்கான தேடுதலுக்காகவும் வட்டவளை நகரத்திலுள்ள பொது வாசிகசாலையைத் தவிர வேறு எந்த இடத்திலுமே கற்றலுக்கான வசதிகள் இல்லை.

அது மட்டுமல்ல வட்டவளை நகரத்திலுள்ள வாசிகசாலையானது அளவில் சிறியதாகக் காணப்படுவதனால் அது நகர மக்களின் தேவைக்கே போதுமானதாக உள்ளது. இங்குள்ள கட்டிட வசதி காரணமாக இது வாசிகசாலையாக மாத்திரமே இயங்குகின்றதே தவிர இங்கு பழைய ஆவணங்களையோ, பத்திரிகைகள், புத்தகங்களையோ களஞ்சியப்படுத்தி வைக்குமளவிற்கு இடவசதி இல்லை.

மேலும் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் தோட்டப்புறங்களில் வாசிகசாலைகளின் தேவையென்பது

கட்டாயமானதொன்றாக உள்ளது. ஏனெனில் இத்தோட்டங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகள், குறித்த காலங்களில் தொடர் சரிவு நிலையைக் கண்டுவருவதனை இங்கு குறிப்பிட வேண்டும். மேலும் இப்பகுதியில் தற்போது போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனை போன்றன புழக்கத்தில் உள்ளதால் அது இன்னும் சில காலங்களில் சிறுவர்களையும் பாதிக்க வாய்ப்புள்ளது. இந்நிலைமை இப்படியே நீடிக்குமாக இருந்தால் இப்பகுதியில் எதிர்கால சமூக முன்னேற்ற நிலையென்பது




பாரிய கேள்விக்குறியாகவே அமையும்.

அதனால் இங்கு வளர்கின்ற சமூகத்தை கல்வியறிவுள்ளசமூகமாககட்டியெழுப்ப வேண்டுமெனில் அதற்கு முதற்படியாக மேற்படி தோட்டப்புறங்களில் வாசிகசாலை அமைத்தல் முதற்கடமையாக இருக்கும். அதேவேளை இந்தத் தோட்டப்புறங்களுக்கு பிரதான நகரமாக விளங்கும் வட்டவளை நகரத்திலுள்ள பொது வாசிகசாலையை வெறும் வாசிகசாலையாக மாத்திரம் அல்லாமல் அதனை இப்பகுதி மக்களின் அறிவுத் தேடலுக்கான ஒரு பொதுநூலக களஞ்சியசாலையாகவும் மாற்றியமைக்கவேண்டும்.

அதற்குண்டான இடவசதிகளும், செயற்திட்ட வசதிகளும் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டிய அதேநேரம் மேற்குறிப்பிட்ட தோட்டப்புறங்களில் வாசிகசாலையை அமைத்தலுக்காக இப்பகுதியில் பணியாற்றும் தொண்டு நிறுவனங்கள் இதற்கு அதிக அக்கறை செலுத்த வேண்டியதுடன் இதற்கு சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சம்பந்தப்பட்ட இடங்களில் வாழும் படித்த இளைஞர் யுவதிகள் இவ்விடயத்திதல் கூடுதல் அக்கறை கொண்டு வாசிகசாலைகளின் ஆயுட்கால செயற்பாட்டுக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். ஏனெனில் இது நீண்டதொரு சமூகப் பிரச்சினையாகும். இதனைச் சரிசெய்ய குறித்த சிலரை மட்டும் பொறுப்புக் கூறுவதனை விடுத்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் அக்கறை கொண்டு செயற்படுவதே ஆரோக்கியமானதாக அமையும். இதுவே மலையக சமூகத்தின் இன்றைய தேவையும்கூட.



## விதி

நீதிபதி அவனை எந்த உணர்ச்சியும் இல்லாமல் பார்த்தார்.

“இந்தாப்பா. விசாரணை முடிந்துவிட்டது. நீ ஏதாவது சொல்ல ஆசைப்படுகின்றாயா?”

அவன் இல்லை என்று தலையாட்டினான். செய்யாத தப்புக்கு தண்டனை என்பதைவிட இரண்டு வருஷம் ஜெயிலில் இருக்க வேண்டுமா என்ற கால அவஸ்தை தான் அவனுக்கு பெரிதாய்த் தெரிந்தது. ஜெயில் முதல் இரண்டு நாளைக்குத்தான் போரடித்தது. பிறகு சகஜமாகி விட்டது.

அன்றைக்கு நல்ல தூக்கம். இரவில் காவலர்களின் நடை, ஷூ சத்தங்கள் கூட கேட்கவில்லை. முதுகில் குறுகுறு. உதறி எழுந்தான். அந்த மெல்லிசான வெளிச்சத்திலும் தரையில் ஒரு கட்டெறும்பு தெரிந்தது. இலேசாக மினுமினுப்புடன் ஒரு கட்டெறும்பு. இதுவரை பார்த்ததில்லை. தூக்கம் கலைந்த ஆத்திரத்தில் அதை நசுக்க காலை நகர்த்தினான்.

“ஏய் என்னைக் கொல்லாதே” எறும்பு பேசியது.

குனிந்து பார்த்தான்.

“நான்தானடாப்பா பேசினன். கொஞ்சம் என்னை தூக்கி வச்சிக்கொள் சொல்லுறேன்”

உள்ளங்கையில் அதை எடுத்துக் கொண்டு உட்கார்ந்துகொண்டு பிரமிப்பு நீங்காமல் கேட்டான்.

“ஆமா.. நீ எப்படி பேசுற..?”

“அதெல்லாம் உனக்கு எதுக்கு? நான் உன்னோட இங்கேயே இருக்கன். உனக்கு பேச்சுத் துணையாக”

தனிமை தொலைந்த சந்தோஷம் அவனுக்கு. பேசும் எறும்பு!! அவனுக்குத் தூக்கம் வரவில்லை. வெளியில் போனதும் இந்த எறும்பை வைத்தே சம்பாதிக்க வேண்டும் என்று யோசனை விரிவாகி எறும்புக்கு வித விதமாக பேசக் கற்றுக் கொடுத்தான். சின்னதாய் ஒரு பாட்டு பாடும் லெவலுக்கு எறும்பு தேறி விட்டது.

விடுதலை ஆனான். முதல் வேலையாய் எறும்பு ஷோ நடத்த வேண்டும் என்ற நினைப்பில் நடந்தவனுக்கு ஒரு நல்ல ஹோட்டல் கண்ணில் பட்டது. உள்ளே நுழைந்தான். ஒரு டீ ஓர்டர் செய்துவிட்டு சட்டைப்பையில் பத்திரமாக இருந்த அந்த எறும்பை எடுத்து மேசை மீது வைத்துவிட்டு ஒரு வெறும் கிளாசைக் கவிழ்த்து அதை பாதுகாத்தான். சர்வர் டீ கொண்டு வந்து வைத்துவிட்டு, சிநேகமாய்ப் பார்த்து சிரித்தான்.

இந்த சர்வர்தான் பேசும் எறும்பை பார்க்க போகும் முதல் ஆள் என்று நினைத்து கவிழ்த்திருந்த டம்ளரைத் திறந்து எறும்பைக் காட்டி, “லுக் அட் திஸ்” என்றான் பெருமையாக.

சர்வர் சிறிதும் தாமதிக்காமல் நான்கு விரல்களையும் சேர்த்து டப் என்று அந்த எறும்பை அடித்தார். அது நசுங்கிச் செத்துப் போனது.



■ மொழிவாணன்



# காற்றோடு காற்றாக பறந்தாளம்மா!

அந்த நேரத்தில்.
கொட்டுகின்ற பனியில்
நனைந்து கொண்டு வந்ததால்.
அவன் உடல்
கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம்.
அதனால்.
காய்ச்சல் கூட அதிகரித்திருக்கலாம்
என்று சிந்தித்த குமார்.
சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான்.
மணி 1.38.
இப்போது என்ன செய்வது?
அவன் சிந்தனை செயல்பட மறுத்தது.
மீண்டும் குனிந்து.
"நீ தூங்குறியாடா?" கருணையுடன் கேட்டான்.
ஆனாலும்.
அவனிடமிருந்து எந்தவிதமான பதிலும் இல்லை.
என்ன இது?
இவன் ஏன் இப்படி இருக்கிறான்?
"ராஜா..." அவன் மீண்டும் அழைத்தான்.
அப்போதும் அவன் பேசவில்லை.
அவன் இறந்துவிட்டானா?
இப்போது.
குமாருக்கு சந்தேகம் வந்துவிட்டது.
"டேய் ராஜா...
மெல்ல அவன் மேனியில் கையை வைத்துத் தட்டினான்.
அப்போது.
குமாருக்கு ஏதோ வித்தியாசம் தெரிந்தது.
படாரென்று எழுந்து நின்ற அவன்.
ராஜா போர்த்திக் கொண்டிருந்த
போர்வையைப் பிடித்து இழுத்தான்.
ஹா!
என்ன இது?
மேலே இழுத்த மூச்சைக் கீழே விட முடியாமல்.
வாயைத் திறந்தபடியே.
அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.
அங்கே அந்தக் கட்டிலில்.
அந்தப் போர்வைக்குள் இருந்தது.
ராஜா அல்ல.
ஓர் எலும்புக் கூடு.
குமார் போர்வையை இழுத்ததும்
எழுந்து அமர்ந்துகொண்ட எலும்புக்கூடு.
அவனைப் பார்த்தது.
கையை ஆட்டிச் சிரித்தது.
நான் காண்பது என்ன கனவா?
தனது மேனியைக் கொஞ்சம்
கிள்ளிப் பார்த்துக் கொண்டான் குமார்.
வலித்தது.

# காற்றாய் வருவேன் 15

## இறுதி அத்தியாயம்

இல்லை நிஜந்தான்.
நினைவு வந்ததும்.
அருள் வந்து ஆடும் பூசாரியைப் போல.
அவன் உடல் நடுங்கியது.
பற்கள் தந்தி அடித்தன.
நள்ளிரவு நேரத்தில்.
கட்டிலில்.
ஒரு எலும்புக் கூட்டுடன்.
தனியாக இருக்கும் சந்தர்ப்பம்
உங்களுக்குக் கிடைத்திருந்தால்.
உங்கள் நிலைமை எப்படி இருந்திருக்கும்.
என்று கொஞ்சம் கற்பனை செய்து பாருங்களேன்.
குமார் அச்சத்தினால் நடுங்கிக் கொண்டிருந்த அதேநேரம்.
கட்டிலுக்கு அடியில் இருந்து.
கூர்மையான நகங்களைக் கொண்ட இரண்டு கரங்கள்.
வெளியே வந்தன.
பீதியினால் ஊதிப்போயிருந்த குமார்.
என்ன நடைபெறப் போகிறது என்று தெரியாமல்.
விழிகளை உருட்டி.
அந்தக் கைகளையே பார்த்துக் கொண்டிருந்தான்.
வெளியில் வந்த கூர்மையான
நகங்களைக் கொண்ட அந்தக் கரங்கள் இரண்டும்.
அவனைத் தன்னருகில் வரும்படி ஜாடை காட்டின.
அந்த நேரத்தில்.
அப்படி ஒரு சுற்றுப் புறத்தில்.
அந்த மாதிரியான ஒரு காட்சியைப் பார்ப்பது.
பயங்கரமாகவே இருந்தது.
குமாரின் இதயம் மிக வேகமாகவே அடித்துக் கொண்டது.
அந்தக் காட்சியைப் பார்க்க முடியாமல்.
அவன் வேறுபுறம் திரும்பிக் கொண்டான்.
அங்கிருந்து ஓடிவிடலாம் என்று
அவன் நினைத்த அதே நேரம்.
"என்னடா என்னைப் பார்க்க
உனக்கு வெட்கமாக இருக்கிறதா?"
என்ற குரல் கேட்டதும்.
படாரென்று திரும்பிப் பார்த்தான் குமார்.
அங்கே.
என்ன ஆச்சரியம்?
இப்போது.
அந்தக் கட்டிலில் இருந்த எலும்புக் கூட்டுக்குப் பதிலாக.
அந்தப் பெண்.
பேயாகிவிட்ட அந்தப் பெண்.
கட்டிலில் அமர்ந்திருந்தாள்.
குமாரின் அடிவயிற்றைக் கலக்கியது.
அவனுக்கு மயக்கம் வருவதைப் போல் இருந்தது.
அவன்.
வியப்புடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.
"என்னடா அப்படிப் பார்க்கிறாய்?
என்னை உனக்குத் தெரியவில்லையா?"
விழிகளை உருட்டி.
இடுப்பில் கையை வைத்தபடியே.
அவள் கேட்டாள்.
விக்கித்துப் போய் நின்றிருந்த குமார்.
எதுவும் பேசாமல்.
அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.
அதுமட்டுமல்ல.
அவளுடைய அந்த விழிகளைப் பார்த்த பிறகு.
அந்த இடத்தை விட்டு
ஓடவேண்டும் என்ற எண்ணம்கூட.
அவனுக்கு வரவில்லை.
ஈவிரக்கமற்ற ஒரு கொலைக்காரனைப் போல.
பேயாகிவிட்ட பெண்.
அவனையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு.
மெல்லப் பேசினாள்.
"உனது நண்பர்கள் அனைவரும்
அவர்கள் செய்த குற்றத்திற்குத்
தண்டனை பெற்றுவிட்டார்கள்.
இப்போது எஞ்சியிருப்பது நீ மட்டும்தான்.
என்னுடைய அடுத்த பலி நீதான்.
எனக்கு நீ செய்த அந்த அநியாயத்தைப் பற்றிக்
கொஞ்சம் நினைத்துக் கொள்"
என்று சொல்லியபடியே.
நகங்கள் நீண்டு வளர்ந்திருந்த.
இரண்டு கரங்களையும் முன்னால் நீட்டிக் கொண்டு.
மெல்ல மெல்ல.
முன்னால் வந்தாள்.
குமார்.
மெல்ல மெல்ல.
பின்னால் சென்றான்.
"வேண்டாம்... வேண்டாம்...
என்னை ஒன்றும் செய்துவிடாதே"
என்று சொல்லியபடியே.
பின்னால் நகர்ந்து கொண்டிருந்தான் குமார்.
ஆனால்.
அவன் சொன்னது செவிகளில் விழாததைப்போல்.
பற்களைக் கடித்தபடியே.
முன்னால் வந்தாள்.
அவளது விழிகள் இரண்டும் தீப்பந்தங்களைப் போல
சிவப்பாகி இருந்தன.
வாயின் இரண்டு பக்கங்களிலும்.
கூர்மையான இரண்டு பற்கள் நீண்டு கொண்டிருந்தன.
குமாரின் அருகில் வந்த பேயாகிவிட்ட அந்தப்பெண்.

அன்புடன்,
அவனைத் தழுவிக் கொள்வதைப் போல்,
தன்னுடைய இரு கரங்களையும்
குமாரின் தோளில் போட்டாள்.
ஆனால்,
திடீரென்று விழித்துக் கொண்டவனைப்போல,
தன்னை சுதாகரித்துக்கொண்ட குமார்,
படாரென்று அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டான்.
ஐயோ பாவம்!
அவனுக்கு நேரம் சரியில்லை போலும்,
பாக்கு வெட்டிக்குள் இறுகிய பாக்கைப்போல்
இருந்தது அவனின் நிலை.
அவளுடைய உடும்புப்பிடியில் இருந்து அவனால்
விடுபட முடியவில்லை.
அவளிடமிருந்து விடுபட முடியாது
என்பதைப் புரிந்துகொண்ட குமார்,
உதவி கேட்டுக் கூக்குரலிட்டான்.
ஆனால்,
பேயாகிவிட்ட அந்தப் பெண்ணின்
கூர்மையான விரல்கள்,
அவனுடைய தொண்டையை இருக்கி அழுத்தியதால்,
அந்த வாய்ப்பும் அவனுக்கு இல்லாமல் போய்விட்டது.
அவன் போட்ட சத்தம்,
அவன் தொண்டைக்குள்ளேயே அடங்கிவிட்டது.
அடுத்து,
அவள் வாய் அவன் கழுத்தை நோக்கி வந்தது.
பற்கள் அங்கே பதிய,
குமார் வேதனையால் திணறினான்.
அவள் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தாள்.
குமார்,
கொஞ்சம் கொஞ்சமாக,
தன் நிலையை இழந்து கொண்டிருந்தான்.

************

ஆஸ்பத்திரியில்,
ராஜாவிற்கு ஏற்பட்ட சோகமான
அந்த சம்பவத்தைப் பற்றி,
குமாருக்கு சொல்வதற்காக,
டாக்டரும் இன்ஸ்பெக்டரும்,
குமாரின் வீட்டை அடையும்போது,
அதிகாலை மூன்று மணியாகிவிட்டது.
ஜீப்பை விட்டு இறங்கிய இருவரும்,
குமாரின் வீட்டு வாசலுக்கு வந்தபோது,
வாசல் கதவு,
'ஓ' வென்று திறந்து கிடந்தது.
அதைப் பார்த்ததும்,
இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர்
பார்த்துக் கொண்டார்கள்.
பிறகு,
குமாரின் பெயரைச் சொல்லி
இன்ஸ்பெக்டர் கூப்பிட்டார்.
ஆனாலும்,
பதில் இல்லை.
அடுத்து,
இருவரும் உள்ளே நுழைந்து பார்த்தார்கள்.
மீறும்,
வீட்டிற்குள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை.
''ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லையே?''
வியப்புடன்,
சுற்றும் முற்றும் பார்த்தபடியே சொன்னார்
இன்ஸ்பெக்டர்.
''அப்படித்தான் தெரிகிறது.
''எதற்கும் உள்ளே போய் பார்ப்போமா?''
என்று கேட்டார் டாக்டர்.
''சரி போவோம்''
என்று சொல்லியபடியே,
இருவரும் உள்ளே சென்றார்கள்.
மெல்ல மெல்ல நடந்து வந்த இன்ஸ்பெக்டர்,
அந்தப் படுக்கை அறைக்குள் எட்டிப்பார்த்தார்.
ஆ!
என்ன அது?
அறைக்குள் எட்டிப்பார்த்த இன்ஸ்பெக்டர்,
மின்னல் வேகத்தில் திரும்பி,
டாக்டரைப் பார்த்தார்.
அவர் முகத்தில் கலவரம் படர்ந்திருப்பதைப்
பார்த்ததும்,
''என்ன இன்ஸ்பெக்டர்?''
என்று திகிலுடன் கேட்டார் டாக்டர்.
''நாங்கள் தாமதமாகிவிட்டோம்
என்று நினைக்கிறேன் டாக்டர்.
அவன் கதையும் முடிந்துவிட்டது'' என்று
தலையில் அணிந்திருந்த
தொப்பியை கழற்றியபடியே சொன்னார் இன்ஸ்பெக்டர்.



''ஓ... அப்படியானால் நான்கு நபர்களின் கதையும்
முடிந்துவிட்டது என்று சொல்லுங்கள்'' என்று
சோகத்துடன் சொன்னார் டாக்டர்.
''ஆமாம்!''
என்று சொல்லியபடியே வெளியே வந்த
இன்ஸ்பெக்டர்,
ஜீப்பை நோக்கி நடந்தார்.
டாக்டரும் அவர் பின்னால் நடந்தார்.
ஜீப்பின் அருகில் வந்த இன்ஸ்பெக்டர்
கதவைத் திறந்தார்.
ஹா!
என்ன அது?
முன் சீட்டில் ஒரு சிறிய கடிதம்.
''டாக்டர்,
ஏதோ ஒரு கடிதம் போல் தெரிகிறதே?''
என்று சொல்லியபடியே,
அதைக் கையில் எடுத்தார்.

சந்தேகமே இல்லை.
அது ஒரு கடிதம்தான்.
அந்தக் கடிதம்.
அவருக்கும்.
டாக்டருக்கும்தான் எழுதப்பட்டிருந்தது.
"என்ன கடிதம் இன்ஸ்பெக்டர்"
ஜீப்பினுள் ஏறியபடியே.
வியப்புடன் கேட்டார் டாக்டர்.
"தெரியவில்லை. பார்ப்போம்"
என்று சொல்லியபடியே.
ஜீப்பின் லைட்டைப் போட்டுவிட்டு
கடிதத்தைப் பார்த்தார்.
"மதிப்பிற்குரிய இன்ஸ்பெக்டருக்கும் டாக்டருக்கும்.
நடந்து முடிந்த இந்த நான்கு கொலைகள்
தொடர்பாக நீங்கள் இருவரும்
மிகவும் சிரமப்பட்டதை நான் அறிவேன்.
அவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு.
யார் முயற்சி செய்தாலும்.
ஒருவர் செய்த பாவத்தை
இன்னொருவர் ஏற்க முடியாது.
என்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள்
என்று நம்புகின்றேன்.
அதனால்.
அவர்கள் நால்வரும் செய்த பாவத்தின் பலனை
அவர்களே அனுபவித்துவிட்டார்கள்.
எனக்கு இனி பழிவாங்குவதற்கு எவரும் இல்லை.
என் பணி முடிந்துவிட்டது.
இனி என்னால் எவருக்கும் எந்தத் தொல்லையும் ஏற்படாது.
பேயாகிவிட்ட பெண்"



"நான் நினைத்தது சரியாகிவிட்டது"
என்று சொல்லியபடியே கடிதத்தை மடித்தார் இன்ஸ்பெக்டர்.
"என்ன நினைத்தீர்கள் இன்ஸ்பெக்டர்?"
என்று.
ஆச்சரியத்தை அள்ளிக் கட்டிக் கொண்டே
கேட்டார் டாக்டர்.
அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல்.
ஜீப்பை விரைவாக ஓட்ட ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர்.
"என்ன இன்ஸ்பெக்டர் இவ்வளவு விரைவாக
எங்கே போறீர்கள்?"
திகிலுடன் கேட்டார் டாக்டர்.
"டாக்டர் அன்று எங்கள் கார் டயர்
பஞ்சராகிய இடம் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதல்லவா...?"
"ஆமாம்!"
"அந்த இடத்தில் தானே ராஜாவுக்கு அந்த விபத்து ஏற்பட்டது?"
"ம்!"
"அங்கே அந்த மலையின் மேல் இருந்த
பழைய பங்களாவை நீங்கள் பார்த்தீர்கள் தானே...?"
"ஆமாம்... அதற்கு இப்போது என்ன?"
"அந்த இடத்தில் தான் "ஹில்ஹவுஸ்"
என்ற இந்த பங்களா இருக்கிறது.
நாம் இப்போது அங்கே போவோம்.
அப்போது எங்களுக்கு எல்லாம் விபரமாகப் புரியும்
என்று நினைக்கிறேன்!"
என்று வேகத்தை இன்னும் கொஞ்சம் அதிகரித்தபடியே
சொன்னார் இன்ஸ்பெக்டர்.
அதே நேரம்.
இலேசாக மழை பெய்ய ஆரம்பித்தது.
நேரம் செல்லச் செல்ல.
அது பேய் மழையாகக் கொட்ட ஆரம்பித்தது.
அத்தோடு.
அந்தப் பகுதியே அதிரும் படி.
இடி முழங்கியது.
அந்த இடத்திற்கு வந்ததும்.
காரை நிறுத்திய இன்ஸ்பெக்டர்,
"ஹில்ஹவுஸ்" பங்களாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.
"அதோ தெரிகிறது பாருங்கள் டாக்டர்...
அதுதான் அந்த பங்களா...
ஆனால் அங்கே எப்படிப் போவது...?
இந்தத் தரித்திரம் பிடித்த மழை வேறு
கொட்டிக்கொண்டிருக்கிறதே...
என்று கவலையுடன் சொன்னார் இன்ஸ்பெக்டர்.
"ம்... அதுதானே!"
என்று கவலையுடன் சொன்னார் டாக்டர்.
அதேநேரம்.
செவிகளையே செவிடாக்கிவிடக் கூடிய விதத்தில்.
பயங்கரமாக இடி முழங்கியது.
இன்ஸ்பெக்டரும் டாக்டரும்.
தாங்கள் தலையில்தான் இடி விழுந்து விட்டதோ
என்ற நினைப்பில்
தலையைப் பிடித்துக் கொண்டார்கள்.
அத்தோடு.
'பர பராஸ்' என்ற ஓசை.
பங்களாவின் பக்கம் இருந்து வந்தது.
இருவரும் வியப்புடன் திரும்பிப் பார்த்தார்கள்.
என்ன ஆச்சரியம்.
அந்த பங்களாவின் மீது இடி விழுந்து.
"ஹில்ஹவுஸ்" பங்களா கொஞ்சம் கொஞ்சமாக
தரையைத் தழுவிக் கொண்டிருந்தது.
தொடர்ந்தும் இடி முழங்கியது.
சில விநாடிகளில்.
ஹில்ஹவுஸ் பங்களா.
தரையோடு தரையாகியது.
இன்ஸ்பெக்டர் ஜீப்பைத் திருப்பினார்.
கொழும்பில் இருந்து வந்தவர்கள்.
அவர்களைச் சந்திக்கும் போது.
எல்லாமே முடிந்துவிட்டது.
பேயாகிவிட்ட பெண்.
காற்றாய் கலந்துவிட்டாள்.

முற்றிற்று

# அதற்குத் தக

அஷ்ரஃப் சிஹாப்தீன்
ashroffshihabdeen@gmail.com

# கைகொடுக்காக் கண்ணாளன்

எனக்கு உதவுமாறு எனது கணவரிடம் எப்போது கேட்டாலும் செய்வதாகச் சொல்லுவார். ஆனால் செய்யவே மாட்டார். அவருக்கு எஜமானி போல் நான் நடந்து கொள்ளவில்லை. வீட்டு வேலைகளில்தான் உதவி கோருகிறேன். வேறு யாராவது அவரிடம் உதவி கோரினால் பாய்ந்து சென்று உதவி புரிகிறார். இதை அவரிடம் பலமுறை நான் சுட்டிக் காட்டியுமுள்ளேன். அப்படிச் சுட்டிக் காட்டும் போது என்னிடம் கோபப்பட்டு ஒரு பைத்தியக்காரனைப் போல் நடந்து கொள்கிறார். எனக்கு 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட நான்கு குழந்தைகள் உள்ளனர். நான் முழு நேரத் தாதியாகக் கடமை செய்கிறேன். வீட்டு வேலைகள் முதற்கொண்டு இரவு உணவு தயாரித்தல், ஆடை கழுவுதல், காலையில் வேலைக்குப் போகுமுன் குழந்தைகளைக் காப்பகத்தில் விடுதல் போன்ற அனைத்தையும் நானே செய்கிறேன். வார இறுதி நாட்களிலாவது உதவுமாறு கேட்கிறேன். ஆனால் அவர் அசைந்து கொடுக்கிறார் இல்லை. அன்புக்குரிய சகோதரிகளே... எனக்கு நல்ல ஆலோசனைகளைத்தருமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



மேலேயுள்ள புலம்பலையும் கோரிக்கையையும் ஒரு பெண் இணையத்தில் விடுத்ததன் பிறகு முகம் தெரியாத பல பெண்கள் பரிகாரம் சொல்லியிருக்கிறார்கள்.

அவற்றில் சில:
(பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.)

**சுதா:** ஸ்ட்ரைக்பண்ணு. உடுப்புக்கழுவாதே. வீட்டைச் சுத்தப்படுத்தாதே. இரவுச் சாப்பாடு சமைக்காதே... எதுவும் செய்யதே... உன்னால் முடிந்த உதவியை எனக்குச் செய்தால்தான் என்னாலும் இயங்க முடியும் என்று அவனுக்குச் சொல்லு. அப்போதுதான் வழிக்கு வருவான்.

**நமீதா:** அவனைத் துரத்தி விடு!

**ராஜி:** திருமணம் செய்வதற்கு முன்னர் அவனைப் பற்றி நீ தெரிந்து கொள்ளவில்லையா? நீ ஒரு வேலைக்காரி. நீதான் வீட்டு வேல்லகள் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று அவன் நினைக்கிறான். ஒன்றில் அவனை விட்டு விலகு. அல்லது எல்லா வேலைகளையும் கிடப்பில் போட்டு விட்டு வேலையைப் பார். ஆண்கள் திருந்தவே மாட்டார்கள்.

**ரம்யா:** அவன் எதையாவது செய்யச் சொன்னால் நீ செய்கிறாயா? ஆண்கள் கட்டுப்படுத்த முடியாதவர்கள். அப்படித்தான் கடவுள் அவர்களைப் படைத்திருக்கிறான். அவன் செய்யச் சொன்னதை நீ செய்தாயானால் அதைச் சுட்டிக் காட்டி அவனையும் செய்யச் சொல்லு.

**மாலினி:** அவனிடம் எதையும் செய்யக் கேட்காதே. உன்னால் எல்லாவற்றையும் செய்ய முடியவில்லையென்றால் தற்காலிகமாக ஒரு வேலையாளை அமர்த்திக்கொள். அதேவேளை, அவனுக்காக எதையும் செய்யாதே. உனது காலையுணவைத் தயார் செய்து கொள். அவனுக்குக் கொடுக்காதே. உனது ஆடைகளைக் கழுவு. அவனுடையதைத் தவிர. சுத்தமான துவாயைக் கட்டில் மெத்தைக்கு அடியில் ஒளித்து வை. ஆனால் ஒரு வாரத்துக்கு மேல் இவ்வாறு செய்யாதே. ஒரு வாரத்துக்குப் பிறகுஒருசிறந்தஉணவைத்தயார்செய்து அவனுக்குக்கொடு. குப்பைகளைக் கொட்டி விட்டு வந்தால் கட்டிலில் உனக்காகத் தயாராக இருப்பேன் என்று சொல்லு. ஆளை மடக்கி விடலாம்.

**தனுஜா:** உனது கவலை புரிகிறது. எனது கணவனும் இப்படியேதான். என் கண்ணாளனின் கடமைகள் என்று ஒரு பட்டியல் போட்டு ஐஸ் பெட்டியில் ஒட்டியுள்ளேன். அவற்றைச்செய்கிறார். நீயும் அப்படிச் செய்து பார். ஆனால் குப்பையைக் கொண்டு போய்க் கொட்டுகிறார் இல்லை. அவரை உறுத்துவதற்காக நானே அவர் முன்னால் குப்பையை எடுத்துச் சென்று கொட்டி வருவதுடன் அவரது பட்டியலில் உள்ள குப்பைக் கொட்டுதல் என்ற வார்த்தைக்கு மேல் வேறு நிறத்தால் அடையாளம் இட்டிருக்கிறேன்.

**அமந்தா:** உன் தங்கையை டாவடிக்காமல் விட்டிருக்கிறானே... அதற்காகச் சந்தோஷப்படு!

**நோரா:** எதையும் செய்யாதே. அவனுடைய குரலுக்குச் செவி

சாய்க்காதே. எதையாவது செய்யச் சொன்னால் நீயும் செய். நானும் செய்கிறேன் என்று சொல். அடங்கி விடுவான்.

*மஞ்சு:* கோபத்தை மௌனத்தில் வெளிக்காட்டு. வேலை விட்டு வந்ததும் களைப்பாக இருப்பதாகப் பாவனை செய். கோபம் கொண்டு கத்தினான் என்றால் ஓ வென்று அழு. நீ தாதிதானே... கண்ணுக்குக் கிளிசரின் போட்டுப் பிழியப் பிழிய அழு. ஆள் அசந்து விடுவான்.

*பிரியா:* ஆண்கள் கோபம் காட்டிப் பயங் காட்டத்தான் செய்வார்கள். உன்னிடம் அன்பில்லாமலா நான்கு குழந்தைகள் கிடைத்தன? அவன் உன் கணவன். அவனுக்கு எல்லாவற்றிலும் பங்கு உண்டு. இதை அவனுக்கு உணர்த்தும் விதத்தில் உணர்த்த வேண்டும். ஆறுதலாக அன்பாக உனது சிரமங்களை உணரச் செய். பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் வாழ்வதில் உள்ள இன்பத்தைப் புரிய வைக்கலாம். இருபத்தோராம் நூற்றாண்டில் இவ்வாறு மற்றவர்களிடம் ஒரு படித்த பெண் ஆலோசனை கேட்பது சரியா என்று யோசித்துப் பார். அன்பினாலும் பாசத்தினாலும் கரைக்க முடியாத இதயம் கிடையவே கிடையாது.

*மனிஷா:* திரும்பத் திரும்பச் சொல்லிப் பார். கேட்கவில்லையென்றால் போடா என்று ஆளைக் கழற்றிவிடு. ஒரு நடுத்தர வயதான ஆளாகப் பார். உன் இளமைக்காகவே காலடியில் கிடப்பான். சொன்னதையெல்லாம் செய்வான். நாயைப் போலக் கட்டுப்படுவான்.

*சீமா:* ஏனைய சில ஆண்கள் தமது மனைவியருடன் நடந்து கொள்ளும் முறையைப் பார்க்கும் போது உனக்கு ஏற்பட்டது ஒரு விபத்தோ தவிர்க்க முடியாத ஒரு விடயமோ அல்ல. குடித்து விட்டுக் குழந்தைகளை அடிப்பது, சமையல் தாமதமானால் தாம் தூம் என்று குதிப்பது, உணவில் உப்புத் தூக்கலாக இருந்தால் பீங்கானை முகத்துக்கு வீசுவது போன்ற எதுவும் உனக்கு நடந்து விடவில்லை. எந்த ஒரு முரட்டு ஆணையும் ஒரு பெண் தனது புன்னகையால் பணிய வைக்க முடியும். உனது கண்முன்னாலேயே இவ்வாறான -பல விடயங்கள் நடந்திருக்கும். உனது நெருங்கி நண்பிகளின் வாழ்வைச் சற்று உற்று நோக்கிப் பார். என்னைப் பொறுத்த அளவில் உனது கணவன் ஒரு



சோம்பேறி. அதை ஒரு பெண்ணால் தாண்டிப் போக முடியவில்லை என்றால்... நான் என்னதான் சொல்வது?

*சுபா:* அடப்பைத்தியமே... வேலை விட்டு வந்த களைப்போடுதானே இரவுச் சாப்பாடு தயாரிப்பாய். சடாரென்று மயங்கி விழு. பதறிப் போவான். நாலு நாளைக்குக் கட்டிலில் கிட. திருந்தி விடுவான். பைத்தியம் மாதிரிக் கத்தினான் என்றால் நீயும் அதே மாதிரி நடந்து கொள். ஆளை அமர்த்தி விடலாம்.

*ரூபா:* ஒரு மூலையில் சாத்தி வைத்து நாலு உதை கொடுத்தால் ஒன்று திருந்துவான் அல்லது விட்டு விட்டு ஓடித் தொலைவான். தீர்ந்தது பிரச்சினை!


## பனங்காய்ப் பணியாரம்

**தேவையான பொருட்கள்:**

01. பனம்பழம் - 02
02. கோதுமை மா - 1/2 கிலோ கிராம்
03. சீனி - 400 கிராம்
04. உப்பு - தேவையான அளவு
05. தண்ணீர் - தேவையான அளவு
06 தேங்காய் எண்ணெய் - 1/2 லீற்றர்

**செய்முறை:**

பனங்காயுடன் சிறிதளவு தண்ணீர் சேர்த்து அதில் உள்ள பனங்களியை நன்றாகப் பிழிந்தெடுக்க வேண்டும். பின் பனங்களியை ஒரு பாத்திரத்தில் இட்டு அதனுடன் சீனி, தேவையான அளவு உப்புச் சேர்த்து, பனங்காயின் பச்சை வாடை போகும் வரை நன்றாக காய்ச்ச வேண்டும். காய்ச்சிய பனங்களி நன்றாக ஆறியதும், கோதுமை மாவை சிறிது சிறிதாகச் சேர்த்து கையில் ஒட்டாத பதம் வரும் வரை நன்றாகக் குழைக்க வேண்டும். அடுப்பில் ஒரு தாச்சியை வைத்து அதில் தேங்காய் எண்ணெய் விட்டு, எண்ணெய் சூடா னதும் அதில் பனங்களிக் கலவை வையை சிறு சிறு உருண்டைகளாகப்போடவேண்டும். பனக்காய்ப் பணியாரம் பொன்னிறமாக வரும்போது வடித்து இறக்குங்கள். ஆரோக்கியமான, சுவையான பனங்காய்ப் பணியாரத்தை ஆறவைத்துப் பரிமாறுங்கள்.



**குறிப்பு:** பனங்காய்ப் பணியாரத்தை நன்றாக சூடு ஆறிய பின்னர் உண்ண வேண்டும். காரணம் பனங்காய்ப் பணியாரத்தைசூடாகச்சாப்பிட்டால் ஒருவித கசப்புத்தன்மை இருக்கும். அதுமாத்திரமல்லாமல் வயிறு சம்பந்தமான நோய்களும் ஏற்படும்.



செவே.விவேகானந்தன்



# சித்திரவதையும் அடிப்படை உரிமைகளும்.

இவ்வுலகில் எவரும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பது அடிப்படை உரிமையாகும். அரசியலமைப்பின் மூன்றாவது அத்தியாயத்தில் சித்திரவதை செய்யக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. பிரிவு 11 இல் எவருமே சித்திரவதைக்கு, கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவாக நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தலாகாது எனக் கூறப்பட்டுள்ளது. இப் பிரிவை மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் மாற்றியமைக்க முடியாது. அவ்வாறு திருத்தம் கொண்டு வருவதற்கோ அல்லது மாற்றியமைப்பதற்கோ மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பும் பெறப்பட வேண்டும். ஆகவே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பையும் பெற்றால் எதனையும் செய்யலாம் என்றே அரசியலமைப்பு கூறுகிறது.

எது எவ்வாறாக இருந்தாலும் சித்திரவதை புரியும் அதிகாரிகள் பலர் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்கின்றனர். அதற்கு உதாரணமாக வேல்முருகு மாஸ்டரின் அடிப்படை உரிமை வழக்கு சான்று பகர்கின்றது.

வேல்முருகு, ஆசிரியராக கடமையாற்றியவர். தமிழரசுக் கட்சியின் ஆதரவாளராக இருந்து பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அம்பாறை மாவட்டத்தின் பெரிய தூண் ஆனார். இவர் ஆசிரியர் தொழிலிலிருந்து இளைப்பாறிய பின்பு அரசியலில் முழுமூச்சாக ஈடுபட்டார். இன, மத, மொழி, பேதமின்றி எல்லா மக்களுக்காகவும் உழைத்த இவரை 'வேல்முருகு மாஸ்டர்' என்று எல்லோரும் அன்பாக அழைத்தனர். இவரது புகழ் அம்பாறை மாவட்டத்திற்குள் மட்டும் ஒடுங்கவில்லை. இலங்கை முழுவதும் அறியப்பட்ட ஒருவராக இருந்தார்.

1956 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழர்களின் உடமை மற்றும் உயிருக்கு பாதகமான சூழ்நிலை உருவாகியது. தனிச் சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டது. தமிழர்களின் சாத்வீகப் போராட்டங்கள் பல தொடங்கின. தமிழர்கள் தங்களது உடமைகளையும் உயிர்களையும் இழக்கத் தொடங்கினர். காலத்திற்கு காலம் அதன் தோற்றங்கள் மாறின. ஆனால் அதன் விளைவுகள் ஆறாத வடுக்களாக அன்று தொட்டு இன்று வரையும் தொடர்ந்து வருகின்றன.

1977 ஆம் ஆண்டு தொடங்கிய ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் தமிழர்கள் புறந்தள்ளப்பட்டனர். இரத்த ஆற்றில் குளிக்கத் தொடங்கினர். 1981 ஆம் ஆண்டிலும் பல இடங்களில் தமிழர்கள் தாக்கப்பட்டனர். உடமைகள் எரிக்கப்பட்டன. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் கொடூர விளையாட்டுக்கள் நடைபெற்றன. அவர்களுக்கு அது விளையாட்டு. எங்களுக்கு உயிர் பயம். அந்த விளையாட்டில் வேல்முருகு மாஸ்டர் சிக்கிக் கொண்டார்.

அம்பாறை நான்காவது கொலனியில் தமிழ் மக்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர். அவர்களின் உடமைகள் நெருப்பில் ஆகுதியாகின. இதனைக் கேள்விப்பட்ட வேல்முருகு மாஸ்டர் ஒருசிலருடன் அந்தக் கொலனியை நோக்கி காரில் சென்றார். பொலிஸ் தலைமை அதிகாரி சந்திர பெரேரா இவர்களை

வழிமறித்தார். மாஸ்டரைக் கண்டதும் அதிகாரிக்கு கடும் கோபம் வந்தது. கெட்ட வார்த்தைகளில் பேசி திரும்பிப் போகும்படி பணித்தார். வேறு வழியின்றி வேல் முருகு மாஸ்டர் திரும்பிச் சென்றார். புகைமண்டலம் வானில் பரவுவதைக் கண்டார். கத்தோலிக்க அடிகளார் எல்மோ ஜோன் புள்ளே அதே கொலனிக்கு மோட்டார் வண்டியில் சென்று கொண்டிருந்தார். வேல்முருகு மாஸ்டரைக் கண்டதும் கொலனியில் நடக்கும்



அட்டூழியங்களையும் கொடூர செயல்களையும் விபரித்தார். இருவரும் 4 ஆம் கொலனியை நோக்கி மோட்டார்வண்டியில் புறப்பட்டனர்.

இடைவழியில் இருவரையும் இராணுவ சிப்பாய்கள் மறித்து விசாரித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது பொலிஸ் அதிகாரி சந்திர பேரேரா அங்கு வந்தார். வேல்முருகு மாஸ்டரைக் கண்டதும் கோபமுற்று இருவரையும் கைது செய்யும்படி கட்டளையிட்டார். ஜோன்புள்ளே அடிகளார் 'சென்றல் காம்ப்' பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். வேல்முருகு மாஸ்டர் சிப்பாய்களிடம் கையளிக்கப்பட்டார். 'நன்றாகப் புடைத்து, நல்ல பாடம் புகட்டும் வண்ணம்' கூறப்பட்டது.

படைவீரர்கள் வேல்முருகு மாஸ்டரை தமது 'றக்'கில் ஏற்றினார். தயவு தாட்சணியமின்றி அடித்து உதைத்து தண்டிக்கப்பட்டார். இழிவான நடாத்துகைக்கு உட்படுத்தப்பட்டார். கொடூரமான, மனிதாபமற்ற முறையில் வதைக்கப்பட்டார். வலி மிகுதியால் நடக்கக் கஷ்டப்பட்ட அவரை றக் வண்டியிலிருந்து இறக்கிவிட்டு "திரும்பிப் பார்க்காமல் ஓடுடா" எனக் கட்டளையிட்டனர். நடக்கவே முடியாத அவர் எவ்வாறு ஓடுவார்? என்ன செய்வது? கெந்திக் கெந்தி ஓடினார். ஏதோ சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தார். இரு சிப்பாய்கள் அவரை சுட முயற்சிக்க இன்னும் இருவர் தடைசெய்யும் காட்சியை

**மாஸ்டரின் ஆறு அறிவும் ஒடுங்கின. என்ன செய்வது என்று தெரியாது அவ்விடத்திலேயே நின்றுவிட்டார்.**



**சித்திரவதை, கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவான நடத்துகைக்கும் தண்டனைக்கும் வேல்முருகு மாஸ்டர் உட்படுத்தப்பட்டுள்ளார்**

கண்ணுற்றார். மாஸ்டரின் ஆறு அறிவும் ஒடுங்கின. என்ன செய்வது என்று தெரியாது அவ்விடத்திலேயே நின்றுவிட்டார்.

வேல்முருகு மாஸ்டர் றக் வண்டியில் தூக்கிப் போடப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கே சந்திர பெரேரா குசலம் விசாரித்தார். அங்கு வேல்முருகு மாஸ்டரின் வாக்கு மூலம் பதியப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஒக்ஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி வேல்முருகு மாஸ்டர் நீதவான் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டார்.

சந்திர பெரேரா வேல்முருகு மாஸ்டரை சிறைக்காவலில் வைக்கும்படி நீதவானைக் கேட்டுக்கொண்டார். பிணை முறியில் போவதற்கு கடுமையாக எதிர்த்தார். வேல்முருகு மாஸ்டருக்காக தோன்றிய சட்டத்தரணி வேல் முருகு மாஸ்டருக்கு ஏற்பட்ட காயங்களை அரசாங்க வைத்தியர் பரிசோதிப்பதற்கு நீதிமன்றின் அனுமதியைக் கேட்டிருந்தார். நீதவான், வேல்முருகு மாஸ்டரை சரீர பிணையில் போகும்படியும், அரசாங்க வைத்தியர் விடுமுறையில் சென்றதால் தனியார் வைத்தியரிடம் பரிசோதனை செய்யும்படியும் கூறினார்.



அதன்பிறகு 12.08.1981 இல் வழக்கு கூப்பிடப்பட்டது. அன்றைய தினம் வேல்முருகு மாஸ்டருக்காக பல சட்டத்தரணிகள் ஆஜரானார்கள். அன்றைய தினம் அரசாங்க சட்ட வைத்தியரிடமிருந்து அறிக்கை பெறுவதற்கு நீதிமன்றத்தில்

# சட்டம் பேசுகிறது


அனுமதி பெறப்பட்டு அன்றே சட்ட வைத்திய அறிக்கை பெறப்பட்டது. சட்ட வைத்தியரிடம் வேல்முருகு மாஸ்டர் தனக்கு காயங்கள் எவ்வாறு ஏற்பட்டன எனக் கூறினார். ஓகஸ்ட் மாதம் 1981 ஆம் ஆண்டில் அடிப்படை உரிமை வழக்கு உயர் நீதிமன்றத்தினால் தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பாக அரசியல் அமைப்பின் 11 ஆவது பிரிவின்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. சித்திரவதை, கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவான நடத்துகைக்கும் தண்டனைக்கும் வேல்முருகு மாஸ்டர் உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதுதான் முக்கியமாக மனுவில் கூறப்பட்ட குற்றச்சாட்டு.

உயர் நீதிமன்றில் நடைபெறும் அடிப்படை உரிமை வழக்கில், கீழ் நீதிமன்றங்களைப் போல சாட்சியங்கள் கேட்கப்படுவதில்லை. சத்தியக் கூற்று ஆவணங்களையே உயர் நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுக்கும். வேல்முருகு மாஸ்டரின் சத்தியக்கூற்றை மறுத்து சந்திர பெரேராவும் மற்றைய எதிர்வாதிகளும் தமது சத்தியக் கூற்றுக்களை தாக்கல் செய்தனர். அவர்களது சத்தியக் கூற்றில் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பு கொண்டார்கள் என்றும், குறிப்பாக சிவசிதம்பரம் பலமுறை தொடர்புகொண்டார் என்றும், அவர்கள் எவரும் வேல்முருகு மாஸ்டருக்கு சித்திரவதை செய்யப்பட்டதாக தங்களுக்கோ அல்லது உயர் அதிகாரிகளுக்கோ தெரிவிக்கவில்லை என்றும் கூறினர். அத்தோடு வேல்முருகு மாஸ்டர் தனது வாக்குமூலத்திலோ அன்றி நீதவானிடமோ இவ்வாறான முறைப்பாடு கூறவில்லை என்றும், சட்டவைத்தியர் முன்தான் கூறியுள்ளார்

**பெரும்பான்மை நீதியரசர்களின் தீர்ப்பே சட்ட வலு பெற்றது.**



**1981 ஆம் ஆண்டிலும் பல இடங்களில் தமிழர்கள் தாக்கப்பட்டனர். உடமைகள் எரிக்கப்பட்டன. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் கொடூர விளையாட்டுக்கள் நடைபெற்றன. அவர்களுக்கு அது விளையாட்டு. எங்களுக்கு உயிர் பயம்.**




**LAW & ORDER**

என்றும் கூறினர். அவர் பிணையில் சென்ற பின் 4 ஆவது கொலனிக்கு சென்றதால் அல்லது வேறு இடத்தில் அடிபட்டிருக்கலாம் என்றும், அதன் பின் சட்ட வைத்தியரிடம் பொய்யான தகவல்களைக் கொடுத்திருக்கிறார் என்றும் கூறினர்.

உயர் நீதிமன்றம், நீதவானிடம் ஓர் அறிக்கையைக் கோரியது. நீதவான் எதிர்வாதிகளுக்கு, குறிப்பாக சந்திர பெரேராவிற்கு சாதகமான அறிக்கையையே கொடுத்திருந்தார். சட்டத்தரணிகளோ அல்லது வேல்முருகு மாஸ்டரோ தன்னிடம் எவரும் அடித்ததாக கூறவில்லை என்றும், வேல்முருகு மாஸ்டர் நன்றாகவே நடந்து வந்தார் என்றும் நீதவான் தனது அறிக்கையில் கூறியிருந்தார்.

மூன்று நீதியரசர்கள், வேல்முருகு மாஸ்டர் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்க வில்லையெனக் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தனர். இரு நீதியரசர்கள் வேல்முருகு மாஸ்டரின் மனுவிற்கு சார்பாக தீர்ப்பளித்து அரசாங்கம் ரூபா பத்தாயிரத்தை வேல் முருகு மாஸ்டருக்குக் கொடுக்க வேண்டும் எனக் கூறினார். பெரும்பான்மை நீதியரசர்களின் தீர்ப்பே சட்ட வலு பெற்றது. அதனால் மூன்று நீதியரசர்களின் தீர்ப்பின் பிரகாரம் வேல்முருகு மாஸ்டரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

# மூளையைப் பாதிக்கும் 10 பழக்கங்கள்



1. காலையில் உணவு உண்ணாமல் இருப்பது.
2. மிக அதிகமாகச் சாப்பிடுவது.
3. புகைப் பிடித்தல்.
4. நிறைய சீனி சாப்பிடுதல்.
5. மாசு நிறைந்த காற்றை சுவாசிப்பது.
6. தூக்கமின்மை
7. தலையை மூடிக்கொண்டு தூங்குவது.
8. நோயுற்ற காலத்தில் மூளைக்கு வேலை கொடுப்பது.
9. மூளைக்கு வேலை கொடுக்கும் சிந்தனைகளை மேற்கொள்ளாமல் இருப்பது.
10. பேசாமல் இருப்பது.

## பறக்கும் தவளை




விஞ்ஞானிஒருவர் பறக்கும் தவளையை வியட்னாம் காடுகளில் கண்டு பிடித்துள்ளார். இதற்கு வெம்பயர் பிளையிங் புரக் என பெயரிடப்பட்டுள்ளது. இத் தவளை கால்களில் காணப்படும் மென் சவ்வின் உதவியுடன் பறப்பதாகவும் இத் தவளையினத்தின் குஞ்சுகள் மிகவும் கூரிய பற்களையும் கொண்டதாகவும் காணப்படுகின்றன. இதே வேளை இத் தவளைகள் இரத்தம் குடிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அழகான உடல் வேண்டுமா...?



அழகையும் ஆரோக்கியத்தையும் விரும்புகிறவர்கள் காலை உணவை 7 - 7.30 இற்குள் சாப்பிட வேண்டும். சமைக்காத உணவுகள், பழங்கள், காய்கறிகள், கரட், வெள்ளரிக்காய் மற்றும் ஊறவைத்த பருப்பு வகைகள் போன்றவைகளை காலை உணவில் சேர்க்கவேண்டும். பருப்பு வகைகளை நன்றாக அலசி முதல் நாள் இரவே மண் சட்டியில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலையில் 7 மணிக்கு அந்தத் தண்ணீரை பருகிய பின்பு ஒவ்வொன்றாக கடித்து மெதுவாக மென்று சாப்பிட வேண்டும். மதிய உணவை 1-2 மணிக்குள்ளும் இரவு உணவை 7-8 மணிக்கும் சாப்பிட வேண்டும். மென்று சாப்பிட்டு 15 நிமிடம் கழித்து தண்ணீர் பருக வேண்டும். குறைந்தது 3 மணி நேரம் கழித்துதான் தூங்க வேண்டும். இவ்வாறு செய்தால் அழகு உங்களைத் தேடி வரும்.

## அதிக வருடங்கள் உயிர்வாழும் மரம்



நான்காயிரம் வருடம் உயிர் வாழும் Redwood Tree என அழைக்கப்படும் தாவரம் கலிபோர்னிய காடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மிக உயரமாக வளரும் இத் தாவரம் 24 மீற்றர் சுற்றளவையும், 120 மீற்றர் உயரத்தையும், சராசரியாக 2000 தொன் எடையும் கொண்டுள்ளது. என்றும் பசுமையாக காணப்படும் இத்தாவரத்தின் தண்டுகள் சுபில நிறமுடையவை.

## குழந்தைகளும் கனவு காண்பார்கள்

நடந்தவற்றை யோசித்து மீளாய்வது செய்வது மற்றும் விழிப்புணர்வுக்கான மூளைப் பகுதிகள், பிறந்த குழந்தைக்கு முழுமையாகவளர்ச்சியடைந்திருப்பதுகண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களின் மூளை ஓய்வுநிலை வலைப்பின்னல் அமைப்பு எவ்வாறு இருக்கிறது என்று எம்.ஆர்.ஐ. ஸ்கான் எடுத்துப் பார்க்கப்பட்டபோது அது முழுமையாக வளர்ச்சி அடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் தூங்கும்போது இந்த வலைப்பின்னல், செயற்பாட்டில் இருப்பதால் அவர்கள் வளர்ந்தவர்களைப் போல் கனவு காண்கிறார்கள்.



## எகிப்திய பிரமிட்

எல்லோராலும் வியந்து பார்க்கத்தக்க உலக அதிசயங்களில் ஒன்றுதான் எகிப்திய பிரமிட். இந்த எகிப்திய கிஸா பிரமிட் பகுதியில் கட்டப்பட்ட 3 ஆயிரத்து 400 ஆண்டுகள் பழமையான ஒரு மண் சுவரை தற்போது தொல்லியல் நிபுணர்கள் தோண்டிக் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த மண் சுவர் கிஸா பிரமிட்டையும் கிரேட் ஸ்பிங்ஸையும் மணல் வீச்சில் இருந்து காப்பாற்றுவதற்காகக் கட்டப்பட்டிருக்கலாம் என்பது தொல்பொருள் ஆய்வாளர்களின் கருத்து.



# நினைவு நல்லது வேண்டும்

வி. ஜீவகுமாரன்

1989 ஆம் ஆண்டு tim berners- lee அறிமுகப்படுத்தப் பட்ட website ஆனாலும் சரி அதன் மிகச்சிறிய பிரிவாக 1997 களில் வந்த blog கள் ஆனாலும் சரி. அவை இன்றைய கணனித்துறையை ஆக்கிரமித்துள்ளது.




காது கேட்காதவர்களைத் தவிர எல்லோரிடமும் கைத்தொலைபேசி இருக்கின்றது என்ற நிலைமாறி. கைத்தொலைபேசியில் மின்னஞ்சல்களும் இணையத்தளங்களும் வீதி வழிகாட்டிகளும் மனித குலத்தை வழிகாட்டிச் செல்லப் புறப்பட்ட பின்பு அவை அனைவரின் பொக்கற்றுக்குள்ளும் வந்து ஏறி உட்கார்ந்து விட்டன என்பது நிஜம்.

உங்கள் விலாசம் என்ன? உங்கள் தொலைபேசி இலக்கம் என்ன? உங்கள் மின்னஞ்சல் விலாசம் என்ன? என்ற கேள்விகள் மறைந்து உங்களுக்கு blog குகள் இருக்கா? website இருக்கா? என்ற அளவில் தகவல் தொழில்நுட்பம் எங்கேயோ போய்விட்டது.

தெருவோரத்தில் நிற்கும் தினக்கூலிக்கு 'காலை ரயில் வண்டி இன்னும் இரண்டு மணி நேரம் பிந்தி வரும்' என்ற செய்தி கைத்தொலைபேசியில் வரலாம். கம்பியூட்டர் முன்னே இருக்கும் பங்குச் சந்தைக் காரர்களுக்கு பங்குச்சந்தையின் இறக்கமும் ஏற்றமும் இதயத்துடிப்பின் வரைபடம் போல் இருக்கலாம். மனித மரபணுக்களில் கருக்கட்டலின் அடுத்த சந்ததியில், அத்தனை பெண்களும் ஆண்களும் அழகாய்த்தான் பிறப்பார்கள் அல்லது பிறப்பிகப்படுவார்கள் என்ற எண்ணம் மனதில் தோன்றினாலும் உலகம் சுவாரஷ்யத்தை இழந்து போகப்போகின்றதோ என்ற பயமும் ஏற்படுகின்றது.

2000 ஆம் ஆண்டு பிறக்கும் வேளையில் உலகம் அனைத்தும் ஒரு விடயத்திற்கு பயந்து கொண்டு இருந்தது. அதுதான் கணனிப் பதிவுகள். 1.0 இந்த இரு எண்களின் ஆதிக்கத்தினால் இயங்கும் கணனி உலகம் 31-12-1999 ஆம் திகதி 23.59 குக்குப் பின் ஸ்தம்பிக்கப் போகின்றது என்ற பயம் அனேக மட்டங்களில் இருந்து கொண்டிருந்தது. இதற்காக உலக நாடுகள் எல்லாவற்றிலும் எத்தனையோ வடிவில் பாதுகாப்பு முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருந்தார்கள். 2000 ஆம் ஆண்டு உலகம் அழியப்போகின்றது என்ற என் சின்ன வயதுப் பயம் எனக்குள் பூதாகரமாய் வந்து வெருட்டியதால் கை தானாகவே நெஞ்சில் சிலுவை போட்டுக்கொண்டது. 01-01-2000, 00:00 தேவாலயத்திலும் நகரசபையிலும் மணிகள் அடிக்கத் தொடங்க, வாணங்கள் தரையில் இருந்து பீறிட்டுக் கொண்டு வானத்தை நோக்கி சென்று மத்தாப்பு மழை பொழியத் தொடங்கியது.


கைகள் நடுங்க கணனியை அழுத்தினேன். "HAPPY NEW YEAR" என்ற வாழ்த்தும் கணனியின் வலது கை மூலையில் 00:01 நேரமும் காட்டிக்கொண்டிருந்தது. மனம் அப்பாடா என இருந்தது. எல்லோரும், அவரவர் துறையைச் சார்ந்த பகுதிக்குள் ஏதாவது பாதிக்கப்பட்டு இருக்கின்றதா? என ஆராயத் தொடங்கினோம். இதனிடையே நான் எனது நெற்பாங்கில் எனது கணக்கில் உள்ள காசு ஏதாவது கூடி இருக்கின்றதா அல்லது குறைந்து இருக்கின்றதா என பார்த்துக்கொண்டேன். எதுவுமே நடந்திருக்கவில்லை.

மொத்தத்தில் 2000 ஆம் ஆண்டு இனிதே பிறந்தது. இதே ஒரு பயம் - அல்லது அதீத கற்பனையில் எழும் ஒரு பயம் "மெல்லத் தமிழ் இனி சாகும்" என்று பலர் வாயால் கேட்கும் போது எம் தமிழ் செத்துவிடுமா? என எனக்குள் தோன்றி மறைந்து கொண்டு இருந்தது.

எம் பிள்ளைகள் மேலை நாட்டில் இரண்டாம் தர சந்ததிகளாக வாழத் தலைப்பட்ட பொழுது, முதலாம் சந்ததிப் பெற்றோருக்கு ஆங்கில மோகம் அதிகரித்து ஆங்கிலம் தமிழை சாதிப் பிரதிஷ்டை செய்த பொழுது, புலம்பெயர் நாடுகளில் தமிழர் கலாச்சாரம் தனியே கூறைச் சேலையிலும் கழுத்தில் தொங்கும் தாலியில் மட்டுமே தொங்கிக் கொண்டு இருக்க, மற்றவற்றை இலகுவாக தூக்கி எறிந்த பொழுது, ஜேர்மனி மாமாவினதும் பிரான்சு சித்தியினதும் பிள்ளைகள் ஊமைப்பாவை காத்துக்கொண்டிருக்கும். இப்பொழுதும் இந்த "மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்ற கூற்று உண்மையாகப் போகின்றதோ பயம் என்னை பீடிக்கத் தொடங்கியது.

இலங்கையை விட்டு வெளிக்கிட்ட பொழுது உயிர்ப் பாதுகாப்பும் பொருள் தேடலும் தான் கண்முன் இருந்ததே தவிர ஒரு புதிய கலாச்சார சூழலில் இணைவாக்கம் என்ற பெயரில் எங்கள் இன

# கணனியில் தூரிகையாகும் கைவிரல்கள்



அடையாளத்தை இழந்துவிடும் அபாயத்தை நோக்கி செல்லப் போகின்றோம் என யாரும் நினைக் கவில்லை.

கவனங்கள் எல்லாம் காசின் மேலும், வீடுகள் மீதும், கார்கள் மீதும் திரும்பின. பாம்பு தின்னும் ஊருக்குப் போனால் நடுத்துண்டு கேட்கவேண்டும் என்று நினைத் தோமே தவிர பாம்பின் விஷம் எம் உடம்பில் சிறிது சிறிதாக ஏறிக்கொண்டிருக்கின்றது என்ப தைக் கவனிக்கத் தவறிவிடு வோம். ஏதோ ஒரு சந்தர்ப்பத் தில் அதனை கவனித்தது எமது நல்ல காலம். இந்த அபாயச் சங்கின் ஒலியைக் கண்டு பயந்ததன் விளைவாகத் தமிழ்க் கல்வி ஆரம்பமானது. புலம்பெயர் நாடுகளில் கல்வி இரண்டு விதமாக நடைபெறு கின்றது. ஒன்று முறையாகக் கற்றுத் தெளிந்தவர்களால் நடத்தப்படுவது. மற்றது தமிழ் தெரிந்தால் போதும் சனி - ஞாயிற் றுக் கிழமைகளில் நீங்கள் தமிழ் ஆசிரியர்களாய் கல்வி கற்பிக் கலாம் என்பது. எது எப்படி அமையினும் எழுவாய் - பயனிலை - செயற்படுபொருளுடன் மனப் பாடத்துடனும் நகரத் தொடங்கிய தமிழ் ஆர்வமும் இளைய தலைமுறைக்கு கணனியில் இருந்த அதி திறமையும் அவர்களை கணனியில் தமிழ் எழுத வைத்தது.

மெல்ல தமிழ் துளிர்க்கிறது என்று என் மனம் உவகை கொண்டது. அடுத்த ஒரு கிழமைதான் - ஒரு இணையத்தளத்தில் இந்தப் பட்டாளத்தின், தோழர் தோழிகளின் கவிதைகள் வரத் தொடங்கியது - சிறு தமிழ்ப் பிழைகளுடன்.

பின்பு பிரசுரத்திற்கு முன்பு பிழை திருத்தும் பதவி எனக்கு தரப் பட்டது. ஒருவரின் கவிதைகளுக்கு மற்றவர்கள் விமர்சனம் எழு தத் தொடங்கினார்கள். விமர்சனங்கள் மட்டுமல்ல எதிர்வினை களும்தான். ஒரு கவிதையைப் பார்த்துவிட்டு எனது மகள் துணி ந்தே எழுதினாள். "இதெல்லாம் கவிதையா?" என்று. அடுத்த ஐந்தாவது வினாடி வந்து விழுந்தது. "உன் அப்பா எழுதுவது எல்லாம் கதையா?" என்று. அலுவலகத்தில் அன்று உரத்துச் சிரித்துவிட்டேன். பக்கத்தில் இருந்த ஊழியர்கள் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். இந்த வளர்ச்சியின் அடுத்த கட்டம்தான் அந்த இணையத்தளத்தில் வந்த அத்தனை கவிதைகளையும் அதே வர்ணங்களுடன் கவிதை நூலாக வெளியிடுவது என்பது. அது தான் மெல்லத் தமிழ் இனித் துளிர்க்கும்!

இலங்கை அரசியல் போராட்டங்களில், புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் வசிக்கும் இளைய சந்ததியினரை இலக்கியப் பணிகளிலும் முன்னே கொண்டுவர வேண்டும். இதற்கு பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் உந்துதல்களும், ஊக்குவிப்புக்களும் அவசியமானதாகும்.

நன்றி - விஸ்வசேது இலக்கிய பாலம்

# முடியவில்லை

■ மருதூர் ஏ.எல்.அன்ஸார்



வேதனையை
வேதனமாய் தந்து
பிரிவின் தனத்தை
உணர வைத்தாய்

உன்னால் ஆன
அனுபவங்கள் வேதனை
என்ற பக்கங்கள்
என்ற பின்பும் - மாறாக
நீ-எச்சில் படுத்தினாலும்
உன் மீது பாசம்
கொள்வதை விடமாட்டேன்

உன்னைக் கரம் பற்றத்
துடிக்கும்
என் மனதை
கடிவாளம் போட்டு
நிறுத்த எனக்குத்தான்
தைரியமில்லையே!
நான் என்ன செய்வேன்...

உன்னால் ஆன
நினைவின் சமிக்ஞைகள்
என் குருதி ஓட்டத்தின்
நாடித் துடிப்புக்கள்
ஒவ்வொன்றிலும் - உன்னையே
ஞாபகப்படுத்தியே துடிக்கின்றது
என் உயிர்

# சித்தாண்டிப் பிரதேசத்தில் அதிகரிக்கும்

# பாடசாலை இடைவிலகல்

வ. சக்திவேல்







மட்டு நகரில் இருந்து வடக்குப் பக்கமாக அமைந்துள்ள ஏறாவூர் பற்று பிதேசத்திற்குட்பட்ட கிராமமே சித்தாண்டியாகும். அங்கு சித்தாண்டி - 01, வில்லுத்தோட்டம் ஆகிய கிராமங்களிலுள்ள அனேகமான சிறார்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகி வருகின்றனர்.

பாடசாலை செல்வதற்கான வாய்ப்புகள் இப்பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. இம் மாணவர்களின் தேவைகளை உரிய முறையில் பூர்த்தி செய்யாமலும், அதை நிறைவேற்றித்தர யாரும் இல்லாத நிலையிலும் உள்ளதாகவும் அப்பகுதி இடைவிலகல் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனாலும் தமது வீடுகளில் வறுமை தாண்டவமாடுவதால் பெற்றோருக்கு உதவும் முகமாக இவர்கள் தொழிலுக்குச் செல்கின்றனர். இதனால் இள வயதிலேயே குடும்ப சுமை இவர்களின் தலையில் சுமத்தப்பட்டுவிடுகின்றது. "எமது குடும்ப தேவைகளை தந்தை ஒருவரால் மட்டும் பூர்த்திசெய்யமுடியாத கஷ்ட நிலை காணப்படுகின்றது. எனவேதான் நாமும் பாடசாலையை விட்டு உழைப்புக்காக கிளம்பியுள்ளோம்" என வேதனையுடன் அப்பகுதி இடைவிலகல் மாணவர்கள் கூறுகின்றனர்.

"நான் எனது அப்பாவுக்கு உதவியாகத்தான் நிற்கிறன். பாடசாலையில் வசதிக்கட்டணம் கேட்கிறாங்க. போட்டு போறதுக்கு சப்பாத்து இல்ல. பாடசாலை சீருடை ஒரு சோடிதான் உள்ளது. எங்கட குடும்பத்திற்கு வருமானம் அதிகரித்தா எங்கட அப்பா, அம்மா எனக்கு எல்லாம் வாங்கித் தருவாங்க. நானும் நன்றாக படிப்பேன்" என்று தரம் 6 இல் கல்வி கற்று இடைவிலகிய ரூபன் எனும் மாணவன் எதிர்காலத்தைப் பற்றிய எதிர்பார்ப்பை ஏக்கத்தோடு வெளிப்படுத்தினான்.

16 வயதுடைய மற்றொரு மாணவனான செல்வக்குமார் "நான் கடந்த மூன்று மாதங்களாக பாடசாலைக்குப் போகவில்லை. நானும் அப்பாவுடன் சேர்ந்துதான் கூலி வேலைக்குப் போகின்றேன். இதைவிட வயல் வேலைக்கும் போகின்றேன்" என்றார்.

இவர்களோடு விளையாடிக்கொண்டிருக்கும் போது கிரி, ஜெயக்குமார் ஆகிய இடைவிலகல் மாணவர்கள் என்னருகில் வந்து "எங்கட ஊர்ல சுமார் 20க்கு மேற்பட்ட இடைவிலகிய மாணவர்கள் இருக்கிறார்கள். அதிகமாக ஆண் பிள்ளைகள்தான் உள்ளார்கள். குடும்பங்களின் வருமானம் குறைவு. குடும்பத்தில் அதிக பிள்ளைகள் உள்ளனர். குடும்பத்தில் தந்தை மாத்திரம்தான் உழைக்கின்றார். ஆகவேதான் எமது தந்தையின் உழைப்புக்காக உதவி வருகின்றோம். எமக்கு சரியான கஷ்டம்" என வேதனையை மனதுக்குள் மறைத்தவாறு கூறினார்கள்.

இதில் கவனிக்கப்படவேண்டிய விடயம் என்னவென்றால் பிள்ளைகளாகவே தமது குடும்ப நிலை கருதி பாடசாலையை விட்டு இடைவிலகும் ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. அம்மக்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான முயற்சிகளை ஏற்படுத்துவது ஒன்றே இதனை மாற்றியமைக்கக்கூடிய வழிமுறையாகும். பாடசாலைகளில் கூட குடும்ப நிலையறியாமல் வசதிக்கட்டணம் அறவிடும்போது இவ்வாறான மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சித்தாண்டி - 01 கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சா. மகேந்திரன் அவர்களைத் தொடர்புகொண்டு கேட்டபோது "எமது பகுதியில் இடைவிலகியுள்ள பிள்ளைகளுக்கு எம்மாலான உதவிகளைச் செய்துகொண்டுதான் வருகின்றோம். சிலருக்கு சப்பாத்து போன்ற பொருட்களை வழங்கியுள்ளோம். இப்பிரதேசகுடும்பங்களின்வருமானம் கீழ்மட்ட நிலையில் இருப்பதே இதற்குக் காரணம். குடும்பங்களின் வாழ்வாதாரம் விருத்தி அடையுமானால் நேரடியாக மாணவர்களின் கல்வி மேம்படும்" என்றார்.

கிழக்குப் பல்கலைக்கழகம், கல்வியற் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் தொழில் நுட்பக்கல்லூரி என அறிவுகளை விருத்தி செய்யும் கல்விச்சாலைகளைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருப்பது



கவலை தரும் விடயமே. எனவே துறைசார் அதிகாரிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள் அனைவரும் சித்தாண்டி பகுதி இடைவிலகல் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தி உதவ முன்வரவேண்டும்.

நடந்து முடிந்த யுத்தம் எம்மக்களிடமிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு சென்றுவிட்டது மனநிம்மதி உட்பட. அதிலிருந்து மீண்டு தமக்கென ஒரு அந்தஸ்தையும் தங்கள் இருப்புக்கான நிலையான அத்திவாரத்தையும் அமைத்துக்கொள்ளும் ஆயுதமாக கல்வியை பயன்படுத்த வேண்டும். பொருளாதார நிலை, பாதுகாப்பு கெடுபிடிகள், வெளிநாட்டு மோகம், இளவயதுத் திருமணம் போன்றவற்றால் பாடசாலை மாணவர்களின் கல்வி சீர்குலைகின்றன. எதிர்காலத்தில் இந்த நிலை மாற்றியமைக்கப்படவேண்டும். மாணவர்கள் மத்தியில் கல்விக்கான ஈடுபாடு தோன்ற வேண்டும். அவர்கள் விரும்பிய பாடங்களைத் தெரிவுசெய்து படிப்பதற்குண்டான வசதிகளை கல்வி நிர்வாகங்கள் செய்துகொடுக்க முன்வரவேண்டும். வசதி குறைந்த, ஆர்வமுள்ள மாணவர்கள் கற்பதற்கு ஆவண செய்துகொடுக்கவேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கட்டாயக் கடமையல்லவா?

## SMS JOKES

ஆசிரியர்: மழைக்கும் வெயிலுக்கும் என்ன வித்தியாசம்?
மாணவன் : மழையில் ஸ்ரேயா Dance ஆடுவாங்க
வெயிலில் பாவனா Dance ஆடுவாங்க..



A student:
Bike இருந்தா ஓட்டத் தோனுது..
TV இருந்தா பார்க்கத் தோனுது..
Lover இருந்தா பேசத் தோனுது..
ஆனா Book இருந்தால் மட்டும் ஏன்
படிக்கத் தோனுதில்ல...!!

இதில் எது புத்திசாலி
1. வட்டம்
2. சதுரம்
விடை : சதுரம்
அதுக்குத் தான் 4 மூலை இருக்கு..



## வராத சாமிகள்

மரங்கள் தோறும்
புத்தர்
குளங்கள் தோறும்
பிள்ளையார்
இருந்தும் என்ன
யாரும் வரவில்லையே
முள்ளிவாய்க்காலுக்கு!

புத்தன்
யேசு
அல்லா என
எல்லா நாட்டு சாமிகளும்
என் சாமி அறையிலே
இருந்தும் என்ன
யாருக்கும் கேட்கலியே
எனது அழுகுரல்..!

## சின்னதாய் ஒரு கேள்வி

காவல் தெய்வத்திற்கு
கொடுக்கப்பட்ட ஆயுதபாதுகாப்பு போலவே
எல்லா முரண்பாடுகளும்

அகிம்சையை கத்துக்கொடுத்த
காந்தி கையிலிருக்கும்
கைத்தடியும்
புத்திமதிகள் போலவே
முரண்பாட்டு மூட்டைகளாகி
புரியாமலே இருக்கிறது.

ஆசையை
துறக்கச் சொல்லி ஆசைப்பட்ட
புத்தனும் கூடத்தான்

## சுவரிலே எறிந்த பந்து

தம்பி செய்த தப்புக்கெல்லாம்
முதல்கோணல்
முற்றும் கோணலென என்னைத்
திட்டிய தந்தைக்குத் தெரியவில்லை
குடும்பத்தின் மூத்தவர்
அவரென்று...

மட்டுவில் ஞானக்குமாரன்

உண்மையின் பதிவு



# வைத்தியசாலை ஊழியர்களின் அலட்சியப் போக்கு

மனிதனுக்கு அவசியமானதொன்றுதான் வைத்தியசாலை. சிறுநோயுடனோ அல்லது பெரிய வியாதியுடனோ சென்று வைத்தியரைச் சந்திக்கும்போது அங்கு வைத்தியர்தான் எமது கடவுள். அவர்களின் கைகளில் தான் எமது உயிர் என்றுகூட சொல்லலாம். வைத்தியரின் அன்பான, ஆறுதலான வார்த்தைகள்தான் நோயாளியின் பாதி நோயைக் குணப்படுத்துகின்றது. அவர்களின் மனதில் ஒரு உற்சாகத்தையும் உண்டுபண்ணுகிறது. ஆனால் பல சந்தர்ப்பங்களில் ஒருசில வைத்தியசாலைகளில் (அரச வைத்தியசாலைகள்) இதற்கு முற்றிலும் மாறுபட்ட சம்பவங்கள் நடப்பதுதான் கவலைக்குரிய விடயம். நோயாளியை பரிசோதிக்காமலேயே அவருக்கு மருந்து கொடுப்பது, மற்றும் நோயாளிக்கும் மருத்துவருக்கும் இடையிலான இடைவெளி, அவர்களின் அசட்டைத்தனம் போன்றவற்றால் அதிகமாக பாதிக்கப்படுவது முதியோர்களும் உடம்புக்கு முடியாமல் இருப்பவர்களுமே. அரசாங்கத்தால் பல உதவிகளை பெற்று படித்துவிட்டு தங்கள் தேவைகளை மட்டும் கருத்திற்கொண்டு நோயாளிகளை கண்டபடி நடத்தும் அவலங்கள் அனேகமாக வெளியில் வருவது குறைவு. காரணம் அவர்கள் மருந்துகளை மாற்றிக் கொடுத்துவிட்டு சாகடித்துவிடுவார்கள் என்ற பயம். இப்படி பல சம்பவங்கள் ஏற்கனவே நடந்ததும் உண்டு. அதுமட்டுமல்ல வைத்தியசாலைக்கென பணிபுரிபவர்கள் கூட விட்டேத்தியாக நடந்துகொள்வதை நான் கண்டுள்ளேன்.

இவ்வாறு தோட்டப்புற சாரதியொருவர் பொது வைத்தியசாலை ஒன்றில் வைத்தியசாலை ஊழியர்களின் அலட்சியப் போக்கினால் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தினை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

கரோலினா தோட்டத்தில் தோட்ட வாகன சாரதியாகப் பணிபுரிந்துவருபவர் முத்தண்ணன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவர் அண்மையில் கொலஸ்ரோல் நோயினால் பாதிக்கப்பட்டு அருகிலுள்ள மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரண்டு நாட்களின் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அதிகாலை 3 மணியளவில் கொலஸ்ரோல் நோயினால் ஏற்பட்ட நெஞ்செரிவின் காரணமாக அப்பகுதி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். உடனே சில குளிசைகள் வழங்கப்பட்டதால் அவரின் வருத்தம் சற்றுக் குறைவடைந்தது. காலை 9 மணியளவில் வைத்திய அதிகாரி பரிசோதித்த பின்னர் தொடர்ந்து அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. அன்றையதினம் சற்றுத் தேறிய அவரின் உடல்நிலை மறுநாள் காலை 9 மணியளவில் மீண்டும் உக்கிர நிலையை அடைந்தது. இதனால் அவருக்கு மேலதிக சிகிச்சை அளிக்கவென வைத்திய அதிகாரி அவரை நாவலப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல உத்தரவிட்டார். காலை 10 மணியளவில் வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் வண்டி மூலம் அவர் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

அம்பியூலன்ஸ் வண்டியின் பின்புறத்தில் உதவியாளர் ஒருவருமில்லாமல் தனியாகப் படுத்துச் சென்ற அவருக்கு நெஞ்செரிச்சல் அதிகமாகிக் கொண்டே சென்றது. வண்டியும் நாவலப்பிட்டி நகரை அண்மித்தது. நாவலப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல குறுகிய தூரமே இருந்தது. ஆனால் அந்த வண்டி வைத்தியசாலைக்குச் செல்லாமல் திரும்பி மீண்டும்



அரசாங்கத்தால் பல உதவிகளை பெற்று படித்துவிட்டு தங்கள் தேவைகளை மற்றும் கருத்திற்கொண்டு நோயாளிகளை கண்டபடி நடத்தும் அவலங்கள் வெளியில் அனேகமாக வெளியில் வருவது குறைவு.

சென்ற பாதை வழியே பயணித்தது. மிகநீண்ட தூரம் திரும்பி வந்த அந்த ஊர்தி ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு ஹோர்ன் அடித்தது. அப்பொழுது அந்த நெடுஞ் சாலைக்கு அருகில் உள்ள வீடொன்றிலிருந்து ஒருவர் வந்துள்ளார். வந்தவரிடம் சாரதி கையிலிருந்த ஒரு பொருளைக் கொடுத்துவிட்டு மீண்டும் வைத்திய சாலையை நோக்கி ஓட்டிச் சென்றுள்ளார்.

இதிலுள்ள விடயம் என்னவெனில் குறிப்பிட்ட சாரதி, ஊர்தி நிறுத்தப்பட்ட ஊரைச் சேர்ந்தவரென் பதால் அங்குள்ள ஒருவர் ஏதோ பொருளொன்றை வாங்கிவர அன்றுகாலை பணம் கொடுத்தனுப்பியுள் ளார். பொருளை வாங்கிய சாரதி அதனைப் போகும் வழியில் கொடுக்க மறந்துவிட்டார். அதனால் திரும்பிச் சென்று குறித்த பொருளைக் கொடுத்துவிட்டுச் சென் றுள்ளார். இதற்காக சுமார் 45 நிமிடங்கள் தேவைப்பட்டி ருக்கிறது. குறிப்பிட்ட நோயாளியோ நெஞ்சுவலியின் காரணமாக தன்னால் எதுவுமே பேசமுடியாதிருந் ததாகவும் இன்னும் சிறிது நேரம் தாமதமாகியிருந்தால் தன் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தியிருக்குமோ என்று ஆதங்கப்பட்டார்.

அந்த சாரதி நினைத்திருந்தால் சென்ற உடனேயே அவரை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு வரும் போது குறித்த பொருளை உரியவரிடம் ஒப்படைத் திருக்கலாம். ஆனால் அந்தச் சாரதிக்கு நோயாளியின் நலன் முக்கியமாகத் தெரியவில்லை. அந்த நேரத்தில் நோயாளியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருந்தால் நிலைமை என்னவாகியிருக்கும்? பொறுப்புள்ள பணி யில் உள்ளவர்களின் இவ்வாறான அலட்சியப் போக்கி னால் இந்த முத்தண்ணன்போல மலையகப் பகுதிகளில் இன்னும் எத்தனைபேர் பாதிக்கப்பட்டிருப்பார்களோ தெரியவில்லை.

இவற்றைவிட மோசமான நடைமுறைகள் வைத்தியசாலை உள்ளே நடைபெறுவது அனேகமாக வெளியில் வருவது குறைவு. மலையகத்தில் மட்டு மல்ல. தலைநகரில் கூட இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன. என் நண்பி கூட தான் நேரில் கண்ட அந்த கொடுமையான காட்சியை என்னிடம் பகிர்ந்து கொண்டாள். கொழும்பு ஆதார வைத்தியசாலையில் தன் தந்தையை வயிற்றுவலி காரணமாக அனுமதித்துள் ளாள். அவருக்கு வைத்தியம் பார்த்ததோ தமிழ்பேசும் ஒரு இளம் பெண் வைத்தியர். நண்பியின் தந்தை கட்டி லில் படுத்து இருந்துள்ளார். குறிப்பிட்ட வைத்தியரோ தனது இருக்கையில் இருந்துகொண்டு ஒவ்வொன்றாக கேள்வி கேட்டுள்ளார். வருத்தம் காரணமாக நோயாளி மெதுவாகக் கதைத்துள்ளார். அதற்கு அம்மணி "சத்தமாக பேசுங்கோ.. எனக்கு ஒவ்வொரு கேள்வியாக கழுத்தை திருப்பித் திருப்பி கேட்க முடியாது. எனக்கு கழுத்தும் நோவுது" என்றுள்ளார்.

அந்த இடத்திலேயே தான் குறிப்பிட்ட வைத்தி யரை நன்றாகத் திட்டித் தீர்க்க வேண்டும் என்று நினைத்த நண்பி தன் தந்தையின் நிலை குறித்து அமை தியாக வந்துள்ளாள். சேவை மனப்பான்மையுடன் செய்வதே மருத்துவத் தொழில். அதில் தங்கள் சுயநலத்தை காட்டவேண்டும் என்று நினைத்தால் அதற்கு அரச வைத்தியசாலைகள் அல்ல அவர்களுக்கு உரிய இடம் என்பது சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்படியான சம்பவங்கள் எப்படி முடிவுக்கு வரும்? இதற்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின்முன் தண்டிக்கப்படுவார்களா?

# நேர் சிந்தனையும் உடல் நலமும்




டொக்டர்.எம்.கே. முருகானந்தன்

"மகள் என்னைக் கனடாவுக்கு வரச் சொல்லுறா. இந்தச் சளிக்காரி நான் அங்கை போய் என்ன செய்யிறது..." மூக்கால் சளி சிந்தவில்லை. வார்த்தைகளில் நம்பிக்கையீனம் ஓட ஓடச் சிந்தியது. அழாத குறையாகச் சொன்னார் அந்த அம்மணி.

இதே அம்மணி சென்ற மாதம் வந்தபோது "வாழ வழியே தெரியவில்லை. தனிய கிடந்து மாயிறன். கூப்பிட்ட குரலுக்கு ஏனென்ன யாருமில்லை. என்ன வாழ்க்கை" எனச் சலித்துக் கொண்டார். தனியே வாழ்வது சிரமம் எனக் கவலைப்பட்ட அதே அம்மா இப்பொழுது மகளுடன் வாழச் சந்தர்ப்பம் கிடைத்தபோதும் திருப்தியடையவில்லை.

போதுமென்ற மனசு பொன் போன்றது என்பார்கள். மாறாக எதிலும் திருப்திப்படாத மனசு நரகமாகத்தான் இருக்கும். "எனது கோப்பையில் தண்ணீர் அரைவாசி நிறைந்திருக்கிறது" எனச் சொல்பவர் அல்லது "அரைக் கோப்பை தண்ணீர்தான் இருக்கிறது" என்பவரா? இதற்கான மறுமொழியிலிருந்து ஒருவரது வாழ்க்கை பற்றிய எண்ணத்தை அறிந்து கொள்ளலாம் என்பார்கள்.

இவற்றைத்தான் நேர் சிந்தனை (Positive thinking), எதிர்மறை சிந்தனை (Negative thinking) என்றெல்லாம் சொல்கிறார்கள். நம்பிக்கையுள்ள மனது, அவநம்பிக்கையுள்ள மனது என்று புரியும்படி சொல்லலாமா? வாழ்க்கைப் பற்றிய பார்வை மட்டுமல்ல இவை. உங்கள் நலத்தோடும் தொடர்புடையனவாகும். மறுவார்த்தையில் சொன்னால் நேர் சிந்தனையுள்ள மனது, உடல் ஆரோக்கியத்தோடு தொடர்புடையது. எதிர்மறை சிந்தனையுள்ள மனது நலக்கேட்டுடன் தொடர்புடையது எனலாம்.

## நேர் சிந்தனையும் உடல் நலமும்

நேர் சிந்தனையானது உடல் நலம் பல வழிகளில் முன்னேற்றமடைய உதவுகிறது.

* வாழ்நாள் அதிகரிக்கும்.
* மனச் சோர்வு நோய்க்கான (Depression) சாத்தியம் குறைவாகும்.
* நாளாந்த வாழ்க்கை நெருக்கீடுகளின் தாக்கம் குறை வாகும்.
* உடல், உள ஆரோக்கியங்கள் மேம்படும்.
* சாதாரண தடிமன், காய்ச்சல் அணுகுவது குறையும்.
* மாரடைப்பு, பக்கவாதம் ஆகியவற்றால் இறப்பதற்கான சாத்தியம் குறைவாகும்.



இவற்றுக்கான காரணங்கள் என்ன?

நேர் சிந்தனை உள்ளவர்களது உடல்நலம் நல்ல நிலையில் இருப்பதற்குக் காரணங்கள் என்ன?

* நேர் சிந்தனையானது வாழ்வின் நெருக்கீடு நிறைந்த தருணங்களில் மனம் தளர விடாது நம்பிக்கையுடன் செயலாற்ற உதவும். இதனால் நெருக்கீட்டின் தீய விளைவுகளால் உடல்நலம் பாதிக்கப்படுவதைத் தடுக்கிறது என நம்பப்படுகிறது.

* நேர் சிந்தனை உள்ளவர்களுக்கு பொதுவாக வாழ்க்கை பற்றிய ஆரோக்கியமான நிலைப்பாடு உள்ளது. இதனால் அவர்கள் பொதுவாக நல்ல வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். நல்ல உணவுகளை உண்கிறார்கள். உடற்பயிற்சி, நடைப்பயிற்சி போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். புகைத்தல், மது, போதைப் பொருட்கள் ஆகியவற்றில் ஈடுபடுவதில்லை. இதனால் ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் கிட்டுகின்றது.

## மனதோடு பேசல்

நாங்கள் சதா காலமும் எமது மனதோடு பேசிக்கொண்டே இருக்கிறோம். இதை நாம் உணர்வதில்லை. ஆற்று நீர்போல எமது

மூளையினுள் சதா காலமும் சிந்தனைகள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. தன்னிச்சையாகத் தோன்றி வற்றாத நீருற்றுப் போல பாய்ந்தோடுபவை நேர் சிந்தனைகளாக அல்லது எதிர்மறை சிந்தனைகளாக இருக்கலாம். இந்தச் சிந்தனைகள் பலவும் தர்க்க ரீதியானதாக உண்மையின் அடிப்படையில் தோன்றி இருக்கலாம். அல்லது எமது தவறான நம்பிக்கைகள் காரணமாகவும், போதிய தகவல்கள் கிட்டாததாலும் ஏற்பட்டு இருக்கலாம்.

இவ்வாறு எழுபவை எதிர்மறை சிந்தனைகளாக இருந்தால் வாழ்க்கை, அவநம்பிக்கை சூழ்ந்ததாக மாறிவிடும். மாறாக நேர் சிந்தனைகளாக இருந்தால் ஒளிமயமான எதிர்காலம் தித்திக்கும். உங்கள் சிந்தனையின் போக்கு எத்தகையது என்பதை அடையாளம் காண முயலுங்கள்.

உங்கள் எதிர்மறை சிந்தனைகளை அடையாளம் காண்பது எப்படி?

* நாள் முழுவதும் பல நல்ல காரியங்களைச் செய்கிறீர்கள். சாதனைகளைப் புரிகிறீர்கள். மற்றவர்களது பாராட்டுகளையும் பெறுகிறீர்கள். ஆனால் ஒரு தவறு நடந்து விடுகிறது. அந்த நாளின் முடிவில் நீங்கள் மிகுதி எல்லாவற்றையும் மறந்து விட்டு அந்த ஒரு தவற்றை மட்டும் தூக்கிப் பிடித்துக் கவலை கொள்கிறீர்களேயானால் நீங்கள் எதிர்மறை சிந்தனை கொண்டவர் எனச் சொல்லலாம்.

* ஏதாவது தவறுகள் நேரும்போது அல்லது நடக்க வேண்டிய கருமம் நிறைவேறாத தருணங்களில் அதற்குக் காரணம் நீங்கள்தான் என மனங்கோணுவதும் எதிர்மறை சிந்தனைதான்.

* எதிலும் நன்மையை எதிர்பார்க்காது இருத்தல். உதாரணமாக காதலியுடன் ஒரு சுற்றுலா செல்லத் திட்டமிட்டிருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் அங்கு போய் ஏதாவது மடத்தனமாகப் பேசி நடந்து அவளது உறவை-யே முறித்துவிடக் கூடும் எனத் தயங்கினால் அதற்கு வாழ்க்கை பற்றிய அவரது நம்பிக்கையீனம் மட்டுமே காரணமாக இருக்க முடியும்.



### மாற்ற முடியுமா?

மனதோடு பேசும் உங்கள் உரையாடல்கள் அனைத்தும் எதிர்மறை சிந்தனைகளாக இருந்தால் உங்கள் வாழ்க்கை முடிந்துவிட்டது. இனிச் செய்வதற்கு எதுவும் இல்லை என மனங்கலங்க வேண்டியது இல்லை. உங்கள் சிந்தனைகளினது பாதையை நீங்கள் முயற்சித்தால் மாற்றிக் கொள்ளலாம்.

* நாளாந்த செயற்பாடுகளின் இடையே உங்களை நீங்களே சீர்தூக்கிப் பாருங்கள். உங்கள் சிந்தனைகள் சரியான வழியில் செல்கின்றனவா அல்லது கவலைக்குரிய பாதையில் செல்கிறதா? எதிர்மறை சிந்தனை வழி சென்றால் அதனை இடைமறித்துச் சரியான சிந்தனைக்கு இட்டுச் செல்லுங்கள்.

* புன்னகைக்கும், சிரிப்பிற்கும் இடம் ஒதுக்கி வையுங்கள். நகைச்சுவை உணர்வு வாழ்வை மலர்ச்சிக்கு உள்ளாக்கும். எத்தகைய நிகழ்வுக்கும் நகைச்சுவை, கிண்டல், முசுப்பாத்தி என இனிமையான பக்கம் இருக்கவே செய்யும். அதைக் கண்டுபிடித்து வாழ்வை நம்பிக்கையாக்குவது அவரவர் கைகளில்தான் தங்கியுள்ளது. அதிலும் முக்கியமாக துன்பமான நிகழ்விலும் கூட சிரிப்பை உண்டாக்கக் கூடிய பக்கத்தைத் தேடிக் கொள்ளலாம்.

எனது நண்பரின் மனைவி மறைந்தபோது அவரது மறைவிற்கு அனுதாபம் சொல்வதற்காகச் சென்றிருந்தேன். "இப்பத்தான் அவளுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. எனது சுடுசொற்களிலிருந்து" என்றார்.

ஆழ்மனத்தில் சோகம் மூடியிருந்தபோதும் அதனை மறைக்க அவரது நகைச்சுவை உணர்வு கை கொடுத்தது. உங்கள் வாழ்வைப் பார்த்து நீங்களே சிரிக்கக் கற்றுக் கொண்டால் அதைவிட பெரிய பேறு எதுவும் இருக்க முடியாது.

* ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளும் உதவும். தினசரி உடற் பயிற்சி அல்லது நடை, உடல் நலத்திற்கு மட்டுமல்ல மனநலத்திற்கும் முக்கியமானது. அத்துடன் நொறுக்குத் தீனிகளைத் தவிர்த்த சத்துள்ள உணவு முறையும் நெருக்கீடுகளை துணிவோடு எதிர்கொள்ள உதவும்.

* நீங்கள் நேர் சிந்தனையுள்ளவர்களாக இருந்தால் மட்டும் போதாது. உங்களைச் சுற்றியுள்ளவர்கள் நல்லவர்களாக மட்டுமின்றி வாழ்வில் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் உங்களது நேர்சிந்தனைகளை அவர்கள் மாற்றிவிடும் அபாயம் உண்டு. சந்தேகமும், நம்பிக்கையீனமும், செயற்திறனும் அற்றவர்கள் உங்கள் வாழ்வில் நெருக்கீடுகள் அதிகரிக்கக் காரணமாகிவிடுவார்கள்.

* உங்களை நீங்களே உற்சாகப்படுத்துங்கள். உங்கள் உணர்வுகளை மென் மனத்தோடு அணுகுங்கள். அதை நோகடிக்கும் வகையில் உங்கள் மனத்தோடு பேசாதீர்கள். மற்றவர்கள் முகத்துக்கு நேரே சொல்ல முடியாத கடுமையான வார்த்தைகளை உங்கள் மனத்திற்குள் பேசி அதைக் காயப்படுத்தாதீர்கள். இவை உங்கள் சிந்தனைகளை நேர்வழியில் செல்ல வழிவகுக்கும்.

'இது முன்பு நான் ஒருபோதும் செய்யாதது. இப்பொழுது எப்படிச் செய்யப் போகிறேன்' எனத் தயங்க வேண்டாம். 'இதைச் செய்து பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. இதை என்னால் செய்ய முடியும்' எனச் சவாலாக எடுங்கள்.

'இது சிக்கலானது' என எதையும் செய்யத் தயங்காதீர்கள். 'மாற்று வழியிலாவது இதைச் செய்ய முடியும்' என சிந்தியுங்கள்.

'இது தீவிரமான மாற்றம். இதில் ஈடுபடுவது ஆபத்தை விலைக்கு வாங்குவது போல' என, புதிய முயற்சிகளில் இறங்கும்போது சிந்திக்காது, 'முயற்சித்துப் பார்ப்பதில் தவறில்லை' என எண்ண வேண்டும்.


இவற்றைச் செய்தால் ஒரே நாளில் சிந்தனை முறையில் மாற்றம் ஏற்பட்டுவிடும் என எதிர்பார்க்க வேண்டாம். தொடர்ந்து முயற்சியுங்கள். தொடர்ந்து பயிற்சி செய்யுங்கள். படிப்படியாக நல்ல மாற்றம் ஏற்படும். நேர் சிந்தனை கொண்ட மனது உங்களுக்கு வாழ்வில் நம்பிக்கையையும், சந்தோஷங்களையும், உடல் ஆரோக்கியத்தையும் கொண்டு வரும். நம்புங்கள்

■ C.K. மயூரன்



# சா
# தனைகளும்
# வே






அண்மையில் நடைபெற்று முடிந்த ஆஷஸ் கிண்ணத் தொடர் ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களின் பார்வையையும் தன்பக்கம் இழுத்துக்கொண்டது. எதிர்பாராத பல திருப்புமுனைகளை ஏற்படுத்திச் சென்ற இத்தொடரில் பல புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டதோடு எதிர்கால கிரிக்கெட் வரலாற்றில் பல மாற்றங்களை செய்வதற்கு இத்தொடர் வழிகோலியுள்ளது.

24 ஆண்டுகளுக்குப் பின் அவுஸ்திரேலிய மண்ணில் ஆஷஸ் கிண்ணத்தை வென்று சாதனை படைத்தது இங்கிலாந்து. அவுஸ்திரேலியா சென்ற இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. நான்கு போட்டிகளின் முடிவில் 2-1 என இங்கிலாந்து முன்னிலையிலிருந்த நிலையில் ஐந்தாவது டெஸ்ட் சிட்னியில் நடந்தது. இந்தப் போட்டியில் ரிக்கி பொன்டிங் விளையாடாத காரணத்தால் மைக்கல் கிளார்க் தலைமையில் விளையாடியது அவுஸ்திரேலியா.

முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா 280 ஓட்டங்களையும் இங்கிலாந்து 644 ஓட்டங்களையும் பெற்றன. அவுஸ்திரேலியா இரண்டாம் இன்னிங்சிலும் ஏமாற்றியது. 2 ஆவது இன்னிங்சில் 281 ஓட்டங்களை மட்டுமே பெற்று இன்னிங்ஸ் மற்றும் 83 ஓட்டங்களால் இன்னிங்ஸ் தோல்வியடைந்தது. இதனால் இங்கிலாந்து 3-1 என்ற கணக்கில் ஆஷஸ் தொடரை வென்று, 24 ஆண்டுகளுக்குப் பின், அவுஸ்திரேலிய மண்ணில் தொடரைக் கைப்பற்றி மாபெரும் சாதனை படைத்தது. ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதை இத்தொடரில் 766 ஓட்டங்களைக் குவித்த குக் தட்டிச்சென்றார்.



**மொத்தத்தில் இந்த ஆஷஸ் தொடர் பலரின் தலைவிதியை இப்போது தீர்மானித்துள்ளது. அணித் தெரிவிலும் தேர்வாளர்கள் தவறுகளை விட்டதும் காணக்கூடியதாய் இருந்தது.**

## சாதனைகள்

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை ஒரே தொடரில் இருமுறை இன்னிங்ஸ் தோல்வியைத் தழுவாத அவுஸ்திரேலியா, இந்த ஆஷஸ் தொடரில் மூன்று முறை இன்னிங்ஸ் தோல்வியைத் தழுவி மோசமான சாதனையைப் படைத்துள்ளது. இரண்டாவது (அடிலெய்ட்) போட்டியில் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 71 ஓட்டங்களாலும், நான்காவது (மெல்போர்ன்) போட்டியில்ஒரு இன்னிங்ஸ் மற்றும் 157 ஓட்டங்களாலும், ஐந்தாவது (சிட்னி) போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 83 ஓட்டங்களாலும், 3 ஆவது தடவையாக தோல்வியடைந்து வரலாறு படைத்தது. 1956 ஆம் ஆண்டு ஓல்ட் டிராஃபர்ட் மைதானத்தில் பெற்ற வெற்றிக்குப் பின்அவுஸ்திரேலியாவுக்கெதிராக இங்கிலாந்து பெற்ற மிகப்பெரிய வெற்றியாக நான்காவது போட்டியில் பெற்ற வெற்றி அமைந்தது.








ஆஷஸ் தொடரிலடைந்த 3 இன்னிங்ஸ் தோல்வியுடன் டெஸ்ட் அரங்கில் அவுஸ்திரேலியா இன்னிங்ஸ் தோல்வியடைவது 8 ஆவது முறை. இதில் இங்கிலாந்துக்கெதிராக மட்டும் 7 முறை இன்னிங்ஸ் தோல்வியைத் தழுவியுள்ளது. 1986 - 1987 தொடருக்குப் பிறகு இங்கிலாந்து, அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரில் 3- 1 என வென்று சாதனை படைத்துள்ளது. அதைவிட 24 ஆண்டுகளுக்குப் பின் (1978-1979) அவுஸ்திரேலிய மண்ணில் இங்கிலாந்து தொடர்ச்சியாக இரண்டு போட்டிகளில் வெற்றி பெறுவது இதுவே முதன் முறை.

1987 இல் மைக் கெட்டிங்கின் தலைமையில் இங்கிலாந்து (2-1) என அவுஸ்திரேலிய மண்ணில் ஆஷஸ் தொடரை வென்றது. அதற்குப் பின்னர் இப்போது ஸ்ராஸ் தலைமையில் இங்கிலாந்து அணி வெற்றி வாகை சூடியுள்ளது. கடந்த முறை சொந்த மண்ணில் (2009) ஆஷஸ் தொடரை (2-1) தன்வசப் படுத்திய இங்கிலாந்து, -இம்முறை அவுஸ்திரேலியாவில் 3-1 என வெற்றி பெற்றுள்ளது.

இதுவரை நடந்த 66 ஆஷஸ் தொடர்களில் அவுஸ்திரேலியா 31 தடவைகளும் இங்கிலாந்து 30 தடவைகளும் வென்றுள்ளன. 5 தொடர்கள் சமநிலையில் முடிந்துள்ளன.

## வேதனைகள்

இந்தத் தொடரின் 4 போட்டிகளில் பொன்டிங் மொத்தமாக 113 ஓட்டங்களையே பெற்றார். இதனால் இப்போது இவரின் அணித் தலைமைப் பொறுப்பும் ஊசலாடுகிறது. பொன்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி, இதுவரை 2 முறை ஆஷஸ் தொடரை இங்கிலாந்திடம் இழந்துள்ளது.








ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் செயற்பாடு பற்றி அவுஸ்திரேலியப் பத்திரிகைகள் பதம் பார்த்த நிலையில் பொன்டிங் நடந்து கொண்ட விதம் பற்றியும் பல முன்னாள் வீரர்கள் தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர். நான்காவது டெஸ்ட் போட்டியின் போது, இங்கிலாந்து வீரர் பீட்டர்சனுக்கு ஆட்டமிழப்புக் கோரி நடுவர் அலிம் தாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் பொன்டிங். ஆட்டமிழப்பல்ல எனத் தெளிவாகத் தெரிந்தும், தொடர்ந்து நடுவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பொன்டிங்கிற்கு, சர்வதேச கிரிக்கெட் பேரவையின் விதிகளின்படி, போட்டி ஊதியத்திலிருந்து 40 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது. அதன் பின் அடுத்த நாள் நடுவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பொன்டிங் இச்சம்பவத்துக்கு மன்னிப்பும் கேட்டார்.

மொத்தத்தில் இந்த ஆஷஸ் தொடர் பலரின் தலைவிதியை இப்போது தீர்மானித்துள்ளது. அணித் தெரிவிலும் தேர்வாளர்கள் தவறுகளை விட்டதைக் காணக் கூடியதாய் இருந்தது. சில சமயம் தேர்வாளர்கள் சிலரும் மாற்றப்படலாம் என்றே தெரிகிறது. எனவே எதிர்காலத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டில் பல மாற்றங்கள் நிகழும் போல் தெரிகிறது. பொறுத்திருந்து பார்ப்போம் ●

# ஏமாற்றங்களும் எதிர்பார்ப்புகளும்




கு. நிரோஜன்

அண்மையில் உலக தமிழ் மக்கள் அனைவரது பார்வையையும் தன்பக்கம் ஈர்த்துக்கொண்ட ஒரு நிகழ்வே சர்வதேச எழுத்தாளர் மாநாடு. இம்மாநாட்டை எதிர்த்து உலகளாவிய ரீதியில் பகிரங்கமாகவும், இணையத்தளங்கள், வலைப்பதிவுகளூடாகவும் பலர் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். அழைப்பு விடுக்கப்படிருந்த பல இலக்கியவாதிகள் வராமல் தங்கள் எதிர்ப்பைக் காட்டியிருந்தார்கள். இருந்தும் பிரமாண்டமான முறையில் இம்மாநாடு நடந்து முடிந்திருப்பது ஓரளவு திருப்தியளிக்கின்றது.

புலம்பெயர் எழுத்தாளரான லெ. முருகபூபதியின் தலைமையில் ஜனவரி 6 ஆம் திகதியிலிருந்து 9 ஆம் திகதிவரை இடம்பெற்ற இம் மாநாட்டுக்கு இலங்கை உட்பட கடல் கடந்த நாடுகளிலிருந்து பல தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் கலந்துகொண்டனர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நான்கு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் தினமும் மூன்று மண்டபங்களில் ஆய்வுரைகள் நடைபெற்றன. அத்தோடு குறுந்திரைப்படங்களும் ஒளிபரப்பப்பட்டன. எம்மவர்களின் எண்ணங்கள், தேவைகள், எதிர்பார்ப்புக்களை உலகத்தவர்களுக்கு எடுத்துக்காட்டுவதாக இந்த மாநாடு அமைந்திருந்தாலும் அரசியல் ரீதியாக எமது மக்களுக்கான தீர்வையோ உரிமையையோ வென்றெடுக்கக்கூடிய எந்தவொரு திட்டமிடலோ அத்திவாரமோ இடப்படாதது மனவேதனையான விடயமே.

ஆரம்ப நிகழ்வாக காலி வீதியிலிருந்து ஊர்தி பவனியுடன் பேராளர்கள் அழைத்து வரப்பட்டு வரவேற்பு நிகழ்வுகளுடன் மாநாடு ஆரம்பமாகியது. கணனியும் வலைப்பதிவுகளும், ஈழத்துத் தமிழ் இலக்கியம்,பெண் எழுத்து, சிறுவர் இலக்கியம், உலகத் தமிழ் இலக்கியம், பல்துறை, அவைக்காற்றுக் கலைகள், சிற்றிதழ், மொழிபெயர்ப்பு, செவ்விதாக்கம், நாட்டாரியல் ஆகிய விடயதானங்களில் ஆய்வுரைகள் நடைபெற்றன. ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பவர்களாகவும் ஆய்வு மதிப்பீட்டாளர்களாகவும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

ஆய்வுரைகளின் போது பல கனதியான, ஆழமான கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு அவை வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாநாட்டில் சகோதர மொழியைச் சேர்ந்த ஒருவர் "இலங்கை இலக்கியத்தில் தமிழ் சிங்கள மொழிபெயர்ப்பின் பங்கு" எனும் தொனிப்பொருளில் ஆய்வுரை நடத்தியிருந்தமை மொழிகளுக்கிடையே ஒரு நல்லுணர்வை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. ஒருசில உச்சரிப்புத் தவறு இருந்தாலும் சிறப்பாக இருந்தது.

ஒவ்வொரு அரங்குக்கும் தமிழ் வளர்த்த அறிஞர்களின் பெயர்கள் சூட்டப்பட்டமையானது அவர்களை நினைவு கூருவதாக அமைந்திருந்தது. அத்தோடு பல்துறை கலைஞர்களின் ஆக்கங்களையும் தாங்கிய சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. மாலை வேளைகளில் கலை நிகழ்வுகள் அரங்கை அலங்கரித்ததோடு இறுதிநாள் மாலை நிகழ்வுகள் இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றன.

ஆனாலும் எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் காத்திரமாக நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தில் சில கருத்துகளை சொல்லித்தான் ஆகவேண்டும். குறிப்பாக முதல்நாள் ஆரம்ப நிகழ்வில் காலி வீதியிலிருந்து பேராளர்களுடன் ஊர்தி பவனி இடம்பெற்றபோது அதற்கு முன்னே மறைப்பை ஏற்படுத்திய வண்ணம் தேவையில்லாத வகையில் வாகனம் ஒன்றை முன்னே வரவிட்டமை அனைவரையும் முணுமுணுக்க வைத்தது. அதுமட்டுமின்றி முன்னே வரவேண்டிய ஊர்தி பவனியை கடைசியாக வரவிட்டமையும் அனைவரையும் விசனப்படவைத்தது.

சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வுகளில் மண்டபம் பார்வையாளர்களால் நிறைந்தது. இதனால் போதிய இடவசதி இல்லாததால் மாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அது மட்டுமன்றி அநேகமான நிகழ்வுகள் குறித்த நேரத்தை விடவும் தாமதமாகவே ஆரம்பிக்கப்பட்டதால் தாமதமாகவே முடிவடைந்தன. மாநாட்டு ஏற்பாட்டாளர்களுடன் தொடர்புடைய சிலரே அடிக்கடி நிகழ்வுகளில் தமது பேச்சாற்றல்களை வளர்த்துக்கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்தியாவிலிருந்து பல எழுத்தாளர்கள் இங்கு வந்திருந்தாலும் அவர்கள் சரியான முறையில் இந்த மாநாட்டில் பயன்படுத்தப்படவில்லையென சில இந்திய எழுத்தாளர்கள் எம்மிடம் தெரிவித்தார்கள். அதுமட்டுமல்ல அவர்களுக்கான இடவசதிகளும் போக்குவரத்து வசதிகளும் ஏன் உணவு நடைமுறைகள் கூட சரியான விதத்தில் ஒழுங்குபடுத்தப் படவில்லையெனவும் குறைபட்டுக் கொண்டார்கள். மாநாட்டுக்கு காலையில் அவர்களை அழைத்து வருவதில் கூட எமது ஒழுங்கமைப்பாளர்கள் பல தவறுகளை விட்டிருந்ததால் அவர்கள் மாநாடு தொடங்கிய பின்னரே சமூகமளிக்கக்கூடிய நிலைமையை தினமும் காணக்கூடியதாகவிருந்தது.

சில ஆய்வுகள் கேள்வி கேட்பவையாகவும் ஆய்வு முறைக்கு உட்படாததாகவும் இருந்தன. சில ஆய்வுரைகள் உற்சாகமூட்டாததால் சிலர் நித்திரையில் மூழ்கிவிட்டனர். மற்றும் சிலர் தாம் இருக்கும் இடத்தினை மறந்து தமக்குள் கூடி கதைக்கத் தொடங்கிவிட்டனர். ஆய்வரங்குகளில்

கலந்துகொள்வோரது எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வந்தமை எல்லாவற்றையும் பறை சாற்றி நின்றது. சரியான விதத்தில் விளம்பரங்கள் மேற்கொள்ளப்படாததும் இதற்கொரு காரணமாக இருக்கலாம். ஆய்வரங்கில் ஆய்வுரைகளை நடத்திய சிலர் தமது சஞ்சிகைகள், பத்திரிகைகளை முன்நிறுத்தி விளம்பரம் செய்திருந்ததையும் காணமுடிந்தது. ஒருசிலர் தம்மைத் தாமே சுய விளம்பரமும் செய்துகொண்டார்கள்.

பெண் எழுத்து எனும் விடயதானத்தில் ஆய்வரங்கு நடந்தபோது அதில் கலந்துகொண்ட ஒருவர் சற்றுக் குதர்க்கமாகப்பேசி ஏற்றுக் கொள்ளமுடியாத ஓர் கருத்தை முன்வைத்து ஆய்வரங்கை சிறிது சஞ்சலப்பட வைத்துவிட்டார்.

இங்கு பணம் செலுத்தி பேராளர்களாகக் கலந்து கொண்டவர்கள் மாத்திரமே அனுமதிச் சீட்டினைக்காட்டி தேநீர், உணவு என்பனவற்றைப் பெற்றுக்கொண்டனர். அதுவும் முறையாக வழங்கப்படாமையால் எல்லோரும் முட்டி மோதிக்கொண்டனர். அத்தோடு அமர்ந்து சாப்பிடுவதற்கும் இடம் ஒதுக்கப்படவில்லை. ஒரு சில அரங்குகளில் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டன. ஆனால் அவ்வாறு வழங்கப் பட்டபின் அந்த தேநீர்க் கோப்பைகள் உரிய முறையில் அகற்றப்படவில்லை. ஒரு அரங்கில் அகற்றப்படாமல் இருந்த தேநீர்க் கோப்பை ஒன்று வேறொருவரின் காலில் தட்டுப்பட்டு ஆய்வரங்கைச் செவிமடுத்துக் கொண்டிருந்த பிறிதொரு ஆய்வரங்கில் ஆய்வுரை செய்யவிருந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரின் ஆடை யை நனைத்துவிட்டது. அந்த இடத்தைவிட்டுச் சென்ற அவர் திரும்பி வரவேயில்லை. இது தவிர முன்பே ஆய்வரங்கை நிறைவு செய்த ஒரு குழுவினர் பிறிதொரு அரங்கில் ஆய்வுரை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அதற்கருகே இருந்து கதைத்து ஆய்வரங்கை நடத்தியவர்களுக்கும் அதில் கலந்து கொண்டவர்களுக்கும் சங்கடத்தை ஏற்படுத்தினர். இவற்றையெல்லாம் ஏற்பாட்டாளர்கள் கவனித்திருக்க வேண்டும். அல்லது அவர்களது கவனத்திற்காவது இவ்வாறான விடயங்கள் கொண்டுவந்திருக்கப்படவேண்டும்.



ஒரு தயாரிப்பாளரது ஒன்றுக்கு மேற்பட்ட குறும்படங்கள் காண்பிக்கப்பட்டன. இதனைத் தவிர்த்து பலருக்கு சந்தர்ப்பம் வழங்கியிருந்தால்






பலரது படைப்புகளுக்கு களம் அமைத்துக்கொடுத்த பெருமையை இம் மாநாடு பெற்றிருக்கலாம். எமது நாட்டில் எத்தனையோ குறுந்திரைப்படத் தயாரிப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்களது படங்களையும் தெரிவுசெய்து இம்மாநாட்டில் காட்சிப்படுத்தியிருக்கலாம்.


எது எவ்வாறோ இன்றைய காலத்தின் கட்டாய தேவையாக இருப்பது யதார்த்தத்தை பிரதிபலிக்கும் ஆக்கங்களும் புதிய வாழ்க் கையை ஆரம்பிக்க தேவை யான ஒரு நம்பிக்கையூட்டலுமே. ஆனால் யுத்த வடுக்களைத் தாங்கிய அல்லது மக்களின் பிரச்சினையைப் பிரதிபலிக்கும் எந்தவொரு ஆக்கமோ நிகழ்வோ இங்கு நடைபெறாதது மனதை வேதனைப்படுத்தும் விடயமாகும்.

மாறாக வழமைப்போல பழமை இலக்கியங்களையும் கட்டுரைகளையும் கவிதை களுமே மாநாட்டை முழுமையாக ஆக்கிரமித்திருந்தன. இவை முக்கியம்தான். ஆனால் இவற்றோடு தமிழ் மக்களது பிரச்சினைகளையும் அதனைத் தீர்க்கும் வழிமுறைகளை யும் எடுத்துக் கூறியிருந்தால் காத்திரமாக இருந்திருக்கும். சாதாரண மாக ஒரு சிறிய விழா நடத்துவதென்றாலே கடுமையான உழைப்பும், முன்னேற்பாடும், திட்டமிடலும் தேவை. ஆனால் இந்த மாநாட்டில் இவை இருந்தும் தேவையான அளவு அவை பிரயோகிக்கப்படவில்லை என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாகவிருந்தது.

பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் இலங்கையில் முதன்முதலாக இப்படி ஒரு மாநாட்டை நடாத்தி முடித்திருப்பது வரவேற்கத்தக்கதே. இன்றைய நிலையில் சிதைந்துபோயிருக்கின்ற எமது வாழ்வும் வளமும் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒரு கடப்பாடு எழுத்தாளர்களின் கைகளிலேயே இருக்கின்றது. இதனை நோக்காகக் கொண்டாவது இந்த மாநாட்டினூ டாக எமது மக்களுக்கான ஒரு தீர்வையோ அல்லது எமது இருப்புக்கான ஒரு வரைபையோ சர்வதேச எழுத்தாளர்களூடாக படைப்புலகில் ஒரு புதிய பரிமாணத்திற்கான அத்திவாரத்தை இந்த மாநாடு தோற்றுவித்திருக்கவேண்டும். ஆனால் ஏனோ அது செய்யப்படவில்லையென்பதே ஏமாற்றம் தரக்கூடிய விடயமாக இருக்கின்றது.

மணிப்புலவர் மருதூர் ஏ.எம். மஜீத்





# அண்ணல் நபி காட்டிய அரசியல்

மக்கள் உண்ண உணவின்றி திரிகின்ற வேளையில், மன்னர்கள் அறுசுவையோடு உணவருந்தினார்கள். உடுப்பதற்கோ படுப்பதற்கோ எதுவுமின்றி பிரஜைகள் அலைந்தபோது, அதனை கண்கொண்டு பாராது, காதுகொண்டு கேளாது, மலர் மஞ்சத்திலே பட்டாடையுடன் படுத்துறங்கினார்கள். அரசோச்சியார்களின் கட்டுப்பாடற்ற அரசியலானது காட்டெருமையின் தன்மையைப் பூண்டது. குடிபோதையில் தன்னுணர்விழந்து பேயாட்டம் ஆடும் ஒருவனின் கையிலுள்ள வாள்போன்று அரசியல் அதிகாரம் பேயாட்டம் ஆடியது. அறம் மறமாக்கப்பட்டது. அக்கிரமக்காரரும் அநியாயம் செய்வோரும் வாழ்வின் சுகபோகங்களை சுதந்திரமாய் அனுபவிக்க, நீதிக்காக போராடும் மக்களும், நேர்மைவாதிகளும், பெரும் துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாக்கப்பட்டனர். குள்ளநரித் தந்திரச் செயல்களும், குதர்க்கவாதங்களும், அறிவு நுட்பமும், புத்திசாதுரியத் தன்மையாகவும் அதேநேரத்தில் அறிவாற்றலும், விவேகமும் மடமைப் பண்புகளாகக் கருதப்பட்டன.

காட்டெருமையின் புத்தி கொண்ட அரபிகளிடையே, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஓர் உன்னத வாழ்க்கையை தன்னகத்தே கொண்டு வாழ்கின்ற நேரத்தில் அரசியல் வாழ்க்கையையும் அனுபவிக்க நேர்ந்தது. இந்த வேளையிலே அண்ணலவர்கள் ஆட்சி செய்ய ஆரம்பித்த நேரத்திலே ஆட்சியில் ஜனநாயகத்திற்கு வித்திடப்பட்டது. அநாதையாய், ஏழையாய், போதகராய், தலைவராய், எல்லோரும் போற்றும் புனிதராய் வாழ்ந்த எம் பெருமானாரின் அரசியல் சட்டத்தில் இன்றைய அரசியல் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. மக்களால், மக்களுக்காக, மக்களைக்கொண்டு அமைக்கப்பட்ட ஆட்சி முறையே ஜனநாயக ஆட்சி என்கின்றோம். அவர்களை மக்களின் பிரதிநிதியாக, மக்கள் தலைவராக அங்கீகரித்தார்கள். மதீனாவின் மக்கள்தான் அரியாசனம் என்னும் ஆட்சியில் ஏற்றினார்கள்.

ஓரடி நிலத்திற்கு, ஆறடி மனிதர்களை பலி கொடுக்கும் பாவத்தை இன்றைய அரசியலிலே காண்கின்றோம். தனது நாட்டில் ஓரடி நிலத்தையாயினும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று சூளுரைத்து பல இலட்சம் மக்களை பலி கொடுத்தார்கள் இன்றைய அரசியல்வாதிகள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் கூட தனது தாய் நாட்டுக்குத் தயங்காது போர்க்களம் புகச்சொல்லியிருக்கின்றார்கள். ஆனாலும் அவர்கள் இயன்றளவு சமாதானத்தை வேண்டினார்கள்.

ஒவ்வொரு நிமிடமும் உயிருக்கு உலைவைத்துக் கொண்டிருந்த மக்களின் சகிப்புத் தன்மையோடு எவ்வளவு நேர்மையாக நடந்து கொண்டார் என்பதற்கு ஹு"தைபியாவில் ஏற்பட்ட உடன்படிக்கையே போதுமானது. மக்காவாசிகள் யாராவது மதீனாவுக்குள் நுழைந்தால் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்ற இந்த உடன்படிக்கையால் முஸ்லிம்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் என்றிருந்தும், துன்பத்தில் பொறுமையையும், பொன்னான சமாதானத்தையும் கடைப்பிடிப்பதே உண்மையான செயல் என்று அரசியல் வாழ்வில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார்கள்.

நாட்டுமோகம், பதவிப்பித்து இவற்றால் போர்களை மூட்டி ஒன்றும் தெரியாத மக்களை அழித் தொழிக்கும் இழிக்குணத்தை, அறிவின் உச்சியிலிருப்பதாக கூறிக்கொள்ளும் இந்த விஞ்ஞான காலத்தைக் கண்டுகொண்டுதான் இருக்கின்றோம். ஹுதைபியா வில் கலந்துகொண்ட முஸ்லிம் களிடையே தங்கள் நலனை விட் டுக்கொடுத்தாவது எல்லோரும் வாழ வழி செய்ய வேண்டும் என்ற பெருமானாரின் பொன் மொழியை ஏற்று நடப்பதை காணமுடிகின்றது. சமாதான கால மாயிருந்தாலும் சரி, குண்டு பொழியும் யுத்த காலமாயிருந் தாலும் சரியே என்றுதான் இஸ் லாமும் ஏந்தல் நபியவர்களின் வாழ்க்கை முறையும் கூறுகின் றது. ஏகத்துவத்தைப் பரப்ப உன்னத பணியில் ஈடுபட்ட நபிகள் திலகம் அவர்களின் பிரச்சாரம் ஆரம்பத்தில் பெரும் கஷ்டத்திலும்கூட, அவர்கள் நிலையான அரசாங்கத்தை நிறுவி விட்டுச்சென்றுள்ளனர் என்பதை அரசியல் கண்கொண்டு பார்ப்பவர்கள் நன்கறிவார்கள்.

கொடூரம் கொண்ட அரே பியர்களை ஒரு சில வருடங்களில் ஒரே கொடியின் கீழ் ஒரே இலட் சியத்தின் கீழ் கொண்டு வந்த அப்பெருமானாரின் அரசியல் வர லாற்றைப் பார்க்கும் பொழுது மதத்தின் அடிப்படையில் ஆட் சியின் ஒவ்வோர் அம்சத்தையும் அவர்கள் அடைந்ததே அதற்குக் காரணம் என்பதை உறுதிகொள்ள வேண்டும்.

இறை மறையும், நபி முறையும் கூறுவதெல்லாம் தாழ்ந்த நிலை யில் உள்ளவர்கள் மற்றவர்களைப் போன்று உயர்ந்த நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதே. ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் உழைத்து, பொருள் சேர்த்து அனுபவிப் பதற்கு உரிமை உண்டு. அதே வேளையில் தொகையாக உள்ளோர் குறிப்பிட்ட ஒரு தொகையை ஏழைகளுக்கு கட் டாயம் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என நபி அவர்கள் கொள்கையாகப் பரப்பினார்கள்.

ஜனநாயகக் கட்சி நடைபெறு கின்ற நாடுகளிலும் கூட சிறு பான்மை மக்கள் தங்கள் கலாச் சாரங்களுக்கு இடமில்லாது அவதி யுறுவதை நாம் காண்கின்றோம். இதேவேளை சாதி, சமய சண்டை களோ, பெரும்பான்மை, சிறு பான்மை என்ற பேதங்களோ ஏற் படவுமில்லை. எல்லோரும் சம மாக கருதப்பட்டார்கள். "செங்க திரும் தண்ணிலமும் சேர்ந்து கையிற் தந்திடினும் என் கொள்கை விடமாட்டேன்" என்றுரைத்து

**“ நபி அவர்கள் கூட்டத்தில் இருக்கும்போது மற்றவர்களுடைய பேச்சுக்கு மதிப்புக்கொடுத்து வரவேற்பார்கள்.**



**முஸ்லிம்களிடையே தங்கள் நலனை விட்டுக்கொடுத்தாவது எல்லோரும் வாழ வழி செய்ய வேண்டும் ”**

தரணியெல்லாம் இஸ்லாமிய ஆட் சியின் புகழைப் பரப்பிய பெருமா னார் அவர்கள் மட்டுமல்ல. அண் ணல் நபியவர்களின் அருமைத் தோழரான அபூபக்கர் (ரலி) அவர் கள் தான் கலீபாவாகத் தேர்ந் தெடுக்கப்பட்டபோது ஆற்றிய உரையில் தான் தவறிழைத்தால் தன்னைத் திருத்துமாறு மக்களிடம் வேண்டினார்கள்.

வள்ளல் நபியவர்கள் வகுத்த அரசியல் சாசனத்திலே மத சுதந்திரம் பூரணபங்கை வகித்தது. பேச்சுச் சுதந்திரம் பேணிக் காக்கப்பட்டது. மதத்தில் பல வந்தமில்லை. உங்களுடைய மார்க்கம் உங்களுக்காக இருக் கட்டும், என்னுடைய மார்க்கம் எனக்காக இருக்கட்டும் என்பன போன்ற வாக்கியங்கள் மத சுதந் திரத்தை எடுத்தோதுவதை நாம் காணலாம். இதேபோல நபி அவர்கள் கூட்டத்தில் இருக் கும்போது மற்றவர்களுடைய பேச்சுக்கு மதிப்புக்கொடுத்து வரவேற்பார்கள். "உங்கள் ஆலோ சனைகளும் அபிப்பிராயங்களும் எனக்கு உதவியளிக்கும்" என்ற அபூபக்கர் (ரலி) அவர்களின் பேச் சும் இஸ்லாமிய அரசியலில் பேச்சுச் சுதந்திரம் உண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்றது என்பதற்கு நபிகள் அவர்கள் கூறிய உபதேசம்.

"கோயில்களில் தங்களைத் தடுத்துக்கொண்ட
வண்ணம் சில மானிடர்களை காண்பீர்கள் அன்னாரை
துன்புறுத்தாதீர்கள், பெண் களை கொலை புரியாதீர்,
சிறுவரை உயிர்ச்சேதம் செய்யாதீர்,
வயோதிபரின் உயிரைக் காவாதீர்,
பசுமரங்களை வெட்டாதீர்"

பார்த்தீர்களா? யுத்தத்திற்கு தான் செல்லாவிட்டாலும், தனது சகாப்பாக்கள் தீங்கிழைக்காத வண்ணம் யுத்தம் செய்வதற்காக இடும் கட்டளையை? இப்படி எத்தனையோ உபதேசங்களை அருளியுள்ளார்கள்.


மேலும் "அரசன், தான் ஆட்சி செய்யும் குடிமக்களைப் பற்றியும், ஆண்மகன், தான் ஆட்சி செய்யும் குடும்பத்தார் பற்றியும், பெண் ணானவள், தான் ஆட்சி செய்யும் கணவன் வீடு பற்றியும், வேலை யாள், எஜமானது பொருட்கள் பற்றியும் விசாரிக்கப்படுவார்கள்" என்றும் உரைத்தார்கள்.

"சட்டத்தின் முன்னே நாயகம் அவர்கள் உட்பட உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர் அனைவரும் சமமே. எனக்கு இறைவனால் வெளிப் படுத்தப்பட்டதையே நான்

பின்பற்றுகின்றேன். இறைவனுக்கு மாறாக நடந்தால் ஒரு வலிமை வாய்ந்த நாளின் வேதனையை அஞ்சுகின்றேன்" என்கின்றார்கள்.

அதுமட்டுமா? "இறைவனை அஞ்சவேண்டாம் என்று உத்தரவிடாமல் இருக்கும்வரை (அதிகாரிகளுக்கு) செவிமடுத்துக் கீழ்ப்படிவது மனிதரின் கடமையாகும். ஆனால் இறைவனுக்கு கீழ்ப்படிய வேண்டாம் என்று கூறினால் (அவ்வதிகாரிகளுக்கு) செவிமடுக்கவோ கீழ்ப்படியவோ வேண்டும் என்பது அவசியமல்ல" என்று நபி பெருமானார் அருளியுள்ளார்கள்.

ஒருநாள் அலி அவர்கள் அண்ணல் அவர்களிடம் இப்படியான விதிகளைப் பற்றி திருமறையில் தீர்க்கமான கட்டளை இல்லாவிட்டால் எவ்வாறு நடந்து கொள்வது என வினவியபோது அதற்கு அண்ணல் அவர்கள் கூறினார்கள் "எனது சமூகத்தில் இருக்கும் நேர்மையானவர்களை ஒன்றுகூட்டி



**"விவகாரத்தைப்பற்றி முடிவுசெய்யும் தனிப்பட்ட ஒரு மனிதனின் கருத்துப்படி எதையும் தீர்மானிக்க வேண்டாம்"**

கலந்தாலோசித்து விவகாரத்தைப்பற்றி முடிவு செய்யும் தனிப்பட்ட ஒரு மனிதனின் கருத்துப்படி எதையும் தீர்மானிக்க வேண்டாம்" என்று சொன்னார்கள். சொல்லியதோடு மட்டுமல்லாது தனது வாழ்க்கையில் செய்தும் காட்டினார்கள். எதிரிப்படையெடுப்பு போன்ற காரியங்களில் தங்களுடைய தோழர்களுடன் கலந்தாலோசித்துள்ளார்கள். பல முக்கிய விடயங்களில் முஸ்லிம்கள் கலந்தாலோசித்துள்ளார்கள்.

இவ்வாறு நபி அவர்கள் அரசியல் வாழ்வில் எவ்வாறு நடந்தார்கள் என்பதையும், நாம் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது பற்றியும் அறிந்தோம். ஆகவே முஸ்லிம்கள் கோமான் நபியின் அரசியல் கோட்பாடுகளை அன்றி வேறு எதையும் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை.



நேசமணி

# உன் நிழலைக்கூட தொடமாட்டேன்

உன்னைக்
கண்டதும் எனக்குள்
ஓர் மாறுதல்
அது ஏனென
எனக்குத் தெரியாது
உன்னை எனக்கு
உயிர் வரை பிடித்திருந்தது

உன்னை
முதல் முதல்
சந்தித்தபோது நான்
பல வருடங்கள்
எங்கெங்கோ தேடிய
அன்பு உன்னிடம்
மட்டுமே
இருப்பதைக் கண்டேன்

அதனாலோ என்னவோ
உன்னைக் கேட்காமல்
என்னை அறியாது
நான் நேசிக்கின்றேன்
உன்னை

நீ என்னிடம்
பேசிப்பழகிய போது
என்னை நானே
நொந்து கொண்டேன்
உன்னை
பல வருடங்களுக்கு முன்னரே
சந்தித்திருக்கக் கூடாதா என்று

நீ எனக்கில்லை என்ற
உண்மை தெரிந்தாலும்
உன்னை மறக்க முடியவில்லை


நீ மாற்றான்
தோட்டத்து மல்லிகையா?
ம்... அப்படியே
இருந்துவிட்டுப் போ
எனக்கு உன்
அன்பு மட்டும் போதும்

அன்பானவளே
எனக்குள் உண்டான
காதலுக்காய்
நீ உன்னை
வதைத்துக் கொள்ளாதே
நான் உன் அனுமதியின்றி
உன் நிழலைக்கூட
தொடமாட்டேன்.

# மின்னஞ்சலின் ஐ.பி. முகவரியை கண்டறிய...

ஜிமெயில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களுக்கு வரும் மின்னஞ்சலின் ஐபி முகவரியை (IP Address) மட்டுமல்ல ஏனைய தகவல்களையும் கண்டுபிடித்துவிடலாம்.


முதலில் உங்கள் இன்பொக்ஸில் உள்ள மின்னஞ்சலை திறக்கவும். வலது புறத்தில் உள்ள Reply என்பதின் பக்கமுள்ள கீழ் அம்புக்குறியை கிளிக் செய்தால் மேலும் சில வசதிகள் கொண்ட ஒப்சன்கள் கிடைக்கும். அதிலிருந்து Show Original என்பதை தெரிவு செய்யவும்.




உடனே வலையுலாவியில் இன்னொரு விண்டோ திறக்கப்படும். அதில் நமக்கு வந்த மின்னஞ்சலின் என்கோடிங் (Encoding) செய்யப்பட்ட தகவல்கள் அதில் காட்டப்படும்.

கீழ் உள்ள படத்தில் உள்ள வட்டமிட்டுள்ள பகுதியில் Received from என்ற வரியில் நமக்கு வந்துள்ள மின்னஞ்சலை அனுப்பியவரின் ஐபி முகவரி எண் இருக்கும். அதை வைத்து ஒருவரின் ஐ.பி. எண்ணை அறியலாம்.

அந்த ஐ.பி. எண்ணை வைத்து தகவல்கள் பெற உதவும்



வலைதளங்களின் (Tracing websites) மூலம் அது எங்கிருந்து வந்தது, நாடு, சேவர் பெயர் போன்ற தகவல்களையும் பெற முடியும். www.cqcounter.com/whois தளத்தில் உங்களுக்கு வேண்டிய ஐ.பி. எண்ணை கொடுத்து மேலதிக விபரங்களை பெறலாம்.

# விக்கிபீடியா



Dictionary, Encyclopedia மாறி இப்போது விக்கிபீடியா இன்று அனைவரது வாழ்விலும் ஆதிக்கம் செலுத்துகின்றது. இதில் பல தகவல்களை தேடிப்பிடித்து சேமித்து வைத்துக்கொண்டு பிறகு ஒப் லைனில் படிக்கலாம். அத்தோடு ஒரு தலைப்பைக் கொண்ட பல கட்டுரைகளை ஒரே கோப்பாக புத்தக வடிவில் சேமித்து வைத்து பிறகு படித்துக் கொள்ளலாம்.

முதலில் உங்களுக்கு தேவையான தகவல் அடங்கிய கட்டுரை பக்கத்தை விக்கிபீடியாவில் தேடி திறந்து கொள்ளுங்கள். இப்பொழுது விக்கிபீடியா தளத்தில் உள்ள இடது புற பேனில் உள்ள Print/Export என்ற லிங்கை கிளிக் செய்யுங்கள்.

இதில் திறக்கும் Create a Book, Download as PDF, Printable version போன்ற வசதிகளில் நமக்கு தேவையானவற்றை தெரிவு செய்து கொள்ளலாம்.

Download as PDF என்ற வசதியை தெரிவுசெய்த சில நொடிகளில் திறக்கும் திரையில், The document file has been generated என்ற செய்தியோடு Download the file லிங்கும் இருக்கும். இதை கிளிக் செய்து PDF கோப்பை கணனியில் தரவிறக்கிக் கொண்டால் சரி.

அடுத்ததாக Wikipedia Book எப்படி உருவாக்குவது என்று பார்க்கலாம். இதில் ஒரே தலைப்பைச் சார்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை ஒருங்கிணைத்து ஒரு அழகிய பயனுள்ள புத்தகமாக (PDF/ODF) மாற்றலாம். முதலில் மேலே சொன்னது போல இடதுபுற பேனில் உள்ள Create a Book லிங்கை கிளிக் செய்து கொள்ளவும். இப்பொழுது திறக்கும் Book Creator பக்கத்திற்கு உங்களை இட்டுச் செல்லும்.

இங்கு Start book creator பொத்தானை கிளிக் செய்தவுடன் மீண்டும் உங்கள் பழைய பக்கத்திற்கே இட்டுச் செல்லும். ஆனால் இம்முறை இந்த பக்கத்தின் மேற்புறம் புதிதாக Book creator bar ஒன்று தோன்றியிருப்பதை பார்க்கலாம்.

இதில் Add this page to your book எனும் லிங்கை கிளிக் செய்து அந்த கட்டுரையை புத்தகத்தில் இணைத்துக் கொள்ளலாம். இப்படி ஒருமுறை இணைத்த பிறகு அந்த கட்டுரையின் பக்கத்தில் உள்ள, அந்த குறிப்பிட்ட கட்டுரைக்கு சம்பந்தமுள்ள எந்த ஒரு லிங்கின் மீதும் மௌஸ் கர்சரை கொண்டு செல்கையில், Add linked wiki page to your book என்ற சிறு பெட்டியை கிளிக் செய்வதன் மூலமாக, அந்த லிங்கில் உள்ள கட்டுரையும் நீங்கள் உருவாக்கும் புத்தகத்தில் இணைக்கப்பட்டுவிடும். இது போன்று உங்களுக்கு தேவையான அனைத்து கட்டுரைகளையும் இணைத்த பிறகு, மேலே உள்ள Book Creator பாரில் உள்ள Show book எனும் லிங்கை கிளிக் செய்யுங்கள்.

இப்பொழுது திறக்கும் Manage your Book திரையில் Title, Sub Title போன்றவற்றை கொடுப்பதோடு மட்டுமல்லாமல், கீழே உள்ள பெட்டியில், கட்டுரைகளின் வரிசையை நமது தேவைக்கு ஏற்றபடி ட்ராக் செய்து மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

பிறகு Download பெட்டியில் தேவையான கோப்பு வடிவை தேர்வு செய்து, Download பொத்தானை கிளிக் செய்தால் போதுமானது. உங்கள் அபிமான ebook ரெடி. இதிலுள்ள மற்றொரு வசதி, இப்பொழுது நீங்கள் உருவாக்கிய புத்தகத்தை, பிரிண்ட் செய்த புத்தகமாக பெற Pediapress இல் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

திருமலை ராஜ்குமார் ■

ஆழிப் பேரலையில் உயிர்களையும் உடைமைகளையும் காவு கொடுத்து ஆறு வருடங்கள் கழிந்து விட்ட நிலையில் சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் குடியேறிய மக்கள் இன்னமும் உண்ண உணவின்றி இருக்க இடமின்றித் தவிக்கின்றனர். சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வீடுகள் மற்றும் கடனுதவிகளைச் செய்து வந்தாலும் அவை போதியனவாக இல்லையென்பதே அம்மக்களுடைய குறையாகவிருக்கின்றது. சில பிரதேசங்களிலோ இவைகூடக் கவனிக்கப்படுவதில்லை. சில அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களுடைய செயற்திட்ட (Project) காலம் முடியும் வரை செயலாற்றிவிட்டு காலம் முடிய அம்போ என இவர்களை விட்டு விட்டுச் செல்லும் சம்பவங்களும் இன்னமும் நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன. இப்பகுதிகளிலுள்ள மக்கள் சுயமான தொழில் செய்யக்கூடிய வசதிகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களுக்கான இருப்பிட மற்றும் பாதுகாப்பு வசதிகளை இவ்வாறான நிறுவனங்கள் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த திருமால்புர கிராமத்திற்குச் செல்லும் வாய்ப்பு அண்மையில் ஏற்பட்டது. அங்கு சென்று அங்குள்ள மக்களுடன் உரையாடி அவர்களுடைய பிரச்சினைகள் பற்றிக் கேட்டு ஆராய்ந்தோம்.

திருகோணமலையிலுள்ள விழுது ஆற்றல் மேம்பாட்டு நிறுவனம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களைச் சேர்ந்த மக்களை மீள் குடியேற்றும் திட்டத்தில் புதிய வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்து 2006 காலப்பகுதியில் 62 வீடுகளில் பாதிக்கப்பட்ட மக்களை குடியேற்றியது. இங்கு தற்போது 46 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு மூன்றிற்கு மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் அம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நன்னீர் மீன்பிடித்திட்டம், சிறு கடனுதவி மற்றும் கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு போன்றவற்றுக்கு உதவி வருகின்றன. இருந்தும் திருமால்புர கிராம மக்கள், மிகவும் வசதியற்ற ஒரு நிலையிலேயே வாழ்ந்துவருவதை அங்கு சென்றிருந்த எம்மால் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியில் இருக்கும் பெரிய குளம் கிராமத்தில் இருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் ஒரு காட்டுப் புறத்தில் திருமால்புர கிராமம் அமைந்துள்ளது. ஒழுங்கான பாதைகள் இல்லை. குடியேற்றிய காலம் முதல் இன்றுவரை இவ் வீடுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை. பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அப்பகுதியில் வேலை செய்தாலும் இது பற்றி இதுவரை யாரும் சிந்தித்தது கிடையாது. மக்கள் தங்கள் தேவைகளுக்காக திருகோணமலைக்கு வரவேண்டிய தேவை உள்ளது. தங்கள் கிராமத்திலிருந்து பயணிக்க அவர்களுக்கு பாதை சீரின்மையால் கடும் சிரமத்துக்கு ஆளாகும் அதேவேளை இரவு நேரங்களில் மின்சாரம் இல்லாததால் மிகவும் பயத்துடனே காலத்தைக் கழித்து வருகின்றனர்.



புஸ்பராணி



ஜெரால்ட்

இது தொடர்பாக திருமால்புர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி புஸ்பராணியிடம் கேட்டபோது "இக் கிராமத்தில் மொத்தம் 46 குடும்பங்கள் வசித்து வருகின்றோம். இது வனவிலங்குகள் வாழும் காட்டுப் பகுதி என்பதால் எம்மை யாரும் கவனிப்பதில்லை. இங்கு ஒன்பதுபேர் ஊனமுற்றவர்கள். 11 விதவைகளும், மூன்று கைவிடப்பட்ட பெண்களும், தடுப்பில் உள்ள கணவன்மார் உள்ள குடும்பங்கள் மூன்றும், கடத்தப்பட்டவர்கள் உள்ள குடும்பங்கள் மூன்றுமாக



உள்ளன. இங்கு நாட்கூலிக்கு வேலைசெய்பவர் களே அதிகமாகக் காணப்படுகின்றனர். 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியாண்டு பரீட்சைக்குக் குப்பி விளக்கில் படித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அக்காவும் தம்பியும் விளக்குத் தட்டுப்பட்டு தீ விபத்திற்கு உள்ளானார்கள். இவர்களை வைத்தி யசாலைக்கு கொண்டு செல்வதற்கு எந்தவிதமான போக்குவரத்து வசதியும் இல்லாது மிகவும் கஷ்டப்பட்டோம். நகரத்து வைத்தியசாலைக்கு செல் வதானால் 8 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டி யுள்ளநிலை. இவ்வாறு மின்சார வசதி இல்லாது எமது மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது நாம் பாவப்பட்டவர்களாக வாழ்ந்து வருகின்றோம்" என்றார் ஆதங்கத்தோடு.

இக்கிராமத்தைச் சுற்றிலும் அடர்ந்த காடுகள் காணப்படுவதால் யானைகள் தொல்லை அதிகமாக காணப்படுவதோடு இரவு நேரங்களில் வீட்டுத் தேவைக்காக பயிடும் பயிர்களைக் கூட நாசம் செய்கி ன்றதாக அப்பகுதி மக்கள் எம்மிடம் முறையிட்டனர்.

"எமக்கான குடிநீரை பெரியகுளம் குளக்கரையில் உள்ள கிணற்றிலேயே பெற்றுவருகின்றோம். இக் கிணறு சுத்தமாக இல்லை. கிருமிகள் காணப்படுகின் றன. இதனை எடுத்து வடித்தே நாம் குழந்தைகளுக்குக் குடிப்பதற்கு கொடுக்கவேண்டியுள்ளது. இதனால் ஏற்படும் நோய்களுக்கு செலவு செய்யும் அளவிற்கு எம்மிடம் பணம் இல்லை. ஒருநாள் வேலைக்கு போகாவிட்டால் எமது வீட்டின் அடுப்பிலே பூனை படுக்கும் நிலையிலேயே எங்கள் கிராமத்தின் ஒவ்வொரு குடும்பமும் வாழ்ந்து வருகின்றது. கிராமத்திற்கு வெளியே ஒரு குடிநீர் குழாய் இருந்த போதும் எல்லா நேரமும் இதில் தண்ணீர் வருவது இல்லை" என்றார் அக்கிராமத்தைச் சேர்ந்த ஜெரால்ட்.

இங்கு காலை 6.30 மணிக்கு பாடசாலை செல்லும் சிறார்கள் மாலை 4 மணிக்குப் பிறகே வீடு வரும் ஒரு அவல நிலை காணப்படுகின்றது. இதை விடுத்து எந்த ஒரு பிரத்தியேக வகுப்புக்கும் செல்லமுடியாமையால் அவர்களது எதிர்காலமே பாதிப்படைகின்றது. இவ்வாறான ஒரு சூழலில் இவர்களது வாழ்க்கை சென்றுகொண்டிருந்தால் இம்மக்களின் எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது. நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற இவ்வேளையில் இக்கிராமம் பற்றி சற்று சிந்திப் பார்தானும் இல்லை. இங்குள்ள நிறுவனங்கள் இம்மக்களின் நிலை பற்றி உரியவர்களின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும். அதேவேள்ள ஊடகங்களும் இப்பிரதேசத்திற்குச் சென்று இம்மக்களின் நிலை பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து அம்மக்கள் வாழ வழிசெய்ய வேண்டும் ●








# அடிப்படை வசதிகளின்றி அல்லல்படும் திருகோணமலை திருமால்புரம்

விருந்தினர் பக்கம்



# “இந்தியக் கலைஞர்கள் பாடினால்தான் கேட்பார்களாம்...”

அண்மைய நாட்களில் அச்சு ஊடகங்களில் பரவலாக பேசப் பட்ட ஒரு கலைஞர் பகவத்சிங் நித்தியானந்தன். திறமைகள் இனங்காணப்பட்டு வாய்ப்பளிக்காமை என்பது நமது நாட்டுக்குக் கிடைத்த ஒரு சாபக்கேடு. எல்லா இடங்களிலும் எல்லாவகையான கலையார்வம் உள்ளவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்க ளாக தங்கள் சொந்த செலவில் ஏதாவது முயற்சித்து செய்தாலே யொழிய அவர்களின் திறமை ஒருநாளும் வெளிக்கொணரப் படுவதில்லை.



இலங்கையின் புகழ்பெற்ற திருத்தலங்களான நல்லூர், செல்வச் சந்நிதி, நயினை நாகபூசணியம்மன், திருக்கோணேஸ்வரம், கதிர்காமம் போன்ற திருத்தலங்களின் மீது பாடப்பட்ட பக்திப் பாடல்கள் அடங்கிய 'ஆதித்யா' என்ற இறுவட்டை அண்மையில் வெளியிட்டி ருந்தார் நித்தியானந்தன்.



சிரித்த முகம். எல்லோருடனும் இயல்பாகப் பழகும் இனியகுணம். மெய்மறக்க வைக்கும் குரல்வளம். பார்ப்போரைக் கொள்ளை கொள்ள வைக்கும் சிரிப்பு. இத்தனையும் ஒருங்கே கொண்ட நித்தி யானந்தன் இசைக்கலைமாமணி மட்டுமல்ல, பிரபல அரச தொலைக் காட்சி ஒன்றில் அறிவிப்பாளரும் தயாரிப்பாளரும்கூட. அண்மையில் இவர் எமது அலுவலகத்திற்கு வந்திருந்தபோது பல விடயங்களைப் பற்றி கலந்துரையாடினோம்.

குமுறுகிறார் பகவத்சிங் நித்தியானந்தன்

பண்டாரவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது 17 ஆவது வயதிலேயே இசைப்பயணத்தை ஆரம்பித்துவிட்டார். “மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா இசைக் கல்லூரியில் கர்நாடக சங்கீதத்தை முழுமையாகக் கற்றேன். இலங்கை வானொலியின் 75 ஆவது பவளவிழா கொண்டாட்டத்தின்போது நடந்த தேசிய மட்ட போட்டிகளில் மெல்லிசைப் பாடல்களுக்கு இசையமைத்து தேசிய மட்டத்தில் “gold award” கிடைச்சது. நான் பண்டாரவளை சென் மேரிஸ்ல படிக்கும்போது பாமினி ராமநாதன் மிஸ்தான் எனக்கு

படிப்பிச்சாங்க. நான் இசைநடன கல்லூரிக்கு போறதுக்கு முன்னாடியே வாத்தியங்கள் எல்லாம் ஓரளவு வாசிப்பேன். அப்போது எனக்கு அக்ஷயாஸ் என்று ஒரு இசைக்குழுவும் இருந்தது. அதுல என்னோட வாத்தியம் கீ-போட்தான். நிறைய மேடைக் கச்சேரிகளுக்கெல்லாம் இசை வழங்கியிருக்கேன். பிறகு வேலைக்கு வந்தபிறகு இசைக்குழுவைக் கொண்டுநடத்த நேரமில்லாமல் அப்படியே விடவேண்டிய நிலை. இன்று நான் ஒரு தயாரிப்பாளராக முன்னேறி வந்ததற்கு நான் இசையை கற்றிருந்ததும் ஒரு முக்கிய காரணம்" என்று கூறிய நித்தி இசையைப் படிக்கவேண்டும் என்று நினைக்கவில்லையாம்.

பிறகெப்படி ஆர்வம் வந்தது என்று ஆவலுடன் கேட்டோம்.

"நான் A/L படிக்கும்போது என்னோட இசைத்துறை ஆசிரியை 'உன் குரல் நல்லா இருக்கு. ஏன் நீ மியூசிக் படிக்கக் கூடாது' எண்டு கேட்டாங்க. அதற்கு நான் 'ஏன் SPB எல்லாம் மியூசிக் படிச்சிட்டா வந்து பாடுனாங்க' எண்டு கேட்டேன். அதுக்கு அவங்களுக்கு பதில் சொல்ல முடியல. A/L இல் விஞ்ஞானப் பிரிவில் கற்க முடிவு செய்தேன். என்னோட சகோதரி ஒருத்தரும் 'ஏன் உங்க திறமையை வீணாக்கப் போறீங்க. மியூசிக் படிங்க என்று சொன்னாங்க. எல்லோரும் சொல்றாங்க. சரி படிச்சுத்தான் பார்ப்போமே என்று படிச்சன். எங்கட பாடசாலையில் நான்தான் முதல் முதலில் A/L இல் மியூசிக் பாடம் எடுத்தன். அப்போதுதான் விளங்கியது என் ஆசிரியர் சொன்னது எந்தளவு உண்மை என்று. ஒரு இசைக்கலைஞனாக இருக்கவேண்டுமாயின் கட்டாயம் இசை தெரிந்திருக்க வேண்டும். இந்திய பாடகர்களுக்கும் எங்கட பாடகர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். அவங்கள பார்த்தீங்கன்னா எல்லாரும் ஏதோ ஒரு விதத்தில கர்நாடக சங்கீதம் படிச்சிருப்பாங்க. அந்தச் சூழலும் அவர்களுக்கு இருப்பதால் இசையை உள்வாங்கிக் கொள்வது என்பது அவர்களுக்கு இலகுவாக இருக்கும். ஆனால் எங்கட நாட்டுல இதற்கான ஆர்வம் கம்மியாத்தான் இருக்கு" என்று மூச்சுவிடாமல் கூறி முடித்த நித்திக்கு எல்லா வாத்தியங்களையும் இசைக்கக்கூடிய திறமை இருந்தாலும் வீணை மிகவும் பிடிக்குமாம்.

**எங்களுடைய கலைஞர்கள் என்றால் இப்படித்தான் என்று ஒரு முடிவே பண்ணிட்டாங்க.**

எத்தனை மெல்லிசைப் பாடல்கள் பாடி இருக்கின்றீர்கள்? அல்பம் பண்ணவேண்டும் என்ற ஆர்வம் எப்படி வந்தது?

"நம்நாட்டு பாடல்கள் அல்லது நம்நாட்டு இசைக்கு ஒரு களம் இல்லைதானே. நாங்களே ஏதாவது அல்பம் பண்ணிட்டு நாங்களே பாடணும். ஒரு தொலைக்காட்சி தொடருக்கு title song பண்ணியிருக்கேன். நிறைய மெல்லிசைப் பாடல்களுக்கு இசையமைத்து பாடி இருக்கின்றேன். ஏற்கனவே பாட்டெல்லாம் பண்ணி வச்சிருந்தன். இப்படி அல்பமா வெளியிடுவதற்கு சரியான சந்தர்ப்பம் கிடைக்கல. இதுல 10 பாடல்கள் இருக்கு. பூங்காற்று மெல்ல வீசும்.... என்ற பாடல் நல்லாவே ஹிட் ஆகி இருக்கு"

உங்களுடைய அல்பம் எந்தளவு வரவேற்பைப் பெற்றுள்ளது என்று நாம் கேட்க அவ்வளவு நேரமும் கலகலப்பாக பேசிக்கொண்டிருந்த நித்தி சற்று கவலை தோய்ந்த குரலில்..

"எங்களுடைய கலைஞர்கள் என்றால் இப்படித் தான் என்று ஒரு முடிவே பண்ணிட்டாங்க. எங்கட கலைஞன் என்ற கருத்தை விட்டு எந்த ஒரு இசைக் கலைஞனது படைப்பையும் நல்லா இருக்கா என்று கேட்டுப் பார்த்தால் அதுவே ஒரு பெரிய விஷயம். எங்கட நாடு இந்தியா என்ற வேறுபாடு வேண்டாமே. எந்த நாட்டில் இருந்தாலும் இசை எல்லா நாட்டிற்கும் பொதுவானது. எங்கிருந்து வந்தாலும் தரமான இசை என்று பார்க்கும் பக்குவம் மக்களுக்கு வரவேண்டும். எங்கட தயாரிப்பு எண்டா உடனே முகத்த சுழிக்கிறாங்க. நான் என் அல்பத்தை கொண்டு கொடுத்த உடனேயே 'இல்ல Indian play back singers பாடினாத்தான் கேட்பாங்க' என்று, உடனே சொல்றாங்க" என்று மிகவும் வேதனைப்பட்டார்.

இவருடைய அல்பத்தை பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் பிள்ளையார் கோயிலருகில் உள்ள சீடி கடையில் கொடுத்திருக்கின்றார். அங்கிருந்த கடைக்காரர் "இத யாரும் வாங்கமாட்டாங்க" என்று முகத்திலடித்தாற்போல் சொல்லியிருக்கின்றார். "ஒருக்கா கேட்டுப்பாருங்க. காசு வேண்டாம். இது பக்திப் பாடல். கோயில்ல வைச்சு 4 பேர் கேட்டால் கொடுங்க" என்று கூறியும் "இல்ல இங்க வைக்க வேண்டாம். இந்தியாவில் இருந்து பாட்டு வருது" என்று கூறித் திருப்பி அனுப்பியிருக்கின்றார்கள்.

நித்தி இவ்விடயத்தை எம்மிடம் எழுத வேண்டாம் என்று கூறினார். ஒரு பொறுப்புள்ள, மக்களின் உரிமைகளுக்காக போராடும் ஒரு மக்கள் ஊடகம் என்ற ரீதியில் இவ்வாறான விடயங்களை அம்பலத்திற்குக் கொண்டு வருவது எமது கடமை. இதற்குக் காரணம் இந்திய சினிமா மோகமே என்று கூறினால் அது நூற்றுக்கு நூறு பொருந்தும். மக்களின் மனநிலை முதலில் மாறவேண்டும். காலம் காலமாக அந்நிய மோகங்களிலே தங்கியிருந்தால் எமக்கென்று ஒரு தனித்துவம் வேண்டாமா? கலைக்கு முதலிடம் இந்தியாதான். ஆனால் எமது நாட்டிலும் கலை இருக்கின்றது. கலைஞர்களை வளர்த்தால்தானே கலையும் வளரும்? கலையை வளர்க்கின்றோம், கலாச்சாரத்தை கட்டிக் காப்பாற்றுகின்றோம் என்று கோஷம் எழுப்பி பயனில்லை. செயலில் காட்டவேண்டும். வேற்று நாட்டு தயாரிப்பு என்றால் கோடியை கூட கொடுத்து இறக்குமதி செய்யும் நம்மவர்கள், சும்மா கொடுத்தாலும் வேண்டாம் என்று ஓடுவது ஏன்? இந்திய கலைஞர்கள், இலங்கைக் கலைஞர்கள் என்ற மாற்றம் வேண்டாமே. எல்லோரும் கலைஞர்கள் என்ற மனப்பான்மை வளரவேண்டும். மாற்றம் என்ற ஒன்றைத் தவிர மாற முடியாதது ஒன்றுமில்லை. இனிவரும் காலமாவது கலைக்கும், கலைஞர்களுக்கும் மதிப்பளிக்கும் ஒரு நிலையை அடைய வேண்டும்.

■ கலாவர்ஷ்னி கனகரட்ணம்



# வகுப்பறை...

பூ. ஜெசிந்தா

## பிள்ளையின் ஆளுமையில் கற்றலின் வகிபங்கு

கற்றலில் ஓர் சிறந்த ஊக்கியாக செயற்படுவது அக் கற்றலுக்கான தெளிவான ஓர் இலக்கினை மாணாக்கர் ஏற்று அதனை அடைய விளைவதாகும். ஊக்கிகளுக்கு அடிப்படையாகத், தேவைகள் உள்ளன. ஒரு தேவை நிறைவுற, அதற்கேற்ற ஒரு இலக்கினை நோக்கிச் செயற்பட்டு அதனை அடைவது செயலுக்கு உந்துதலாக அமைகிறது. உணவை அடைதலான இலக்கை அடைய, பசியுள்ள ஒரு வெள்ளை எலி சிக்கலறையின் சரியான பாதையினைக் கற்க ஊக்குவிக்கப்படுகிறது.


விலங்குகளின் கற்றலில், உடல் தேவைகளின் நிறைவு இலக்காகும். ஆனால் வகுப்பறைக் கற்றலின் இலக்குகள் பலதரப்பட்டவை. ஆராய்தல், கைப்பணிச் செயல்கள், உடல் திறன், விளையாட்டுக்கள் போன்ற பலவும் இலக்குகளாகப் பயன்படுத்தலாம். பொதுவாக உடனடி இலக்குகள் சிறு குழந்தைகளது கற்றலில் மிக பயனுள்ளவை. தொலைநோக்குடன் ஒரு தூர இலக்கை அடையச் செயற்படுவது இவர்களுக்குச் சிரமமானது. மற்றும் இலக்கை வெற்றியுடன் அடைந்தது பற்றிய உடனடி அறிவும் அளிக்கப்படுவது கற்றலை மேலும் தூண்டும்.

ஓரளவு முதிர்ச்சி பெற்ற மாணவர்கள் எதிர்காலத் தொலைதூர இலக்குகளை அடைவதில் ஆர்வம் காட்டுவர். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சிறந்த தொழில்நுட்பப் படிப்பை தேர்ந்தெடுத்த தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் இன்றிலிருந்தே ஆர்வத்துடன் அதற்கேற்ற பயிற்சிகளை மேற்கொள்வது, இதனால் தான் ஊக்குவித்தல் தேவை அதற்கேற்ற இலக்குகள் ஆகியனவும் தொடர்புடையவை. கற்றலுக்கேற்ற ஆயத்த நிலையின் கூறுகளாக இவை உள்ளன.

பொதுவாககற்றலில் மாணாக்கரை ஊக்குவித்து அவர்களது ஊக்குவிப்பு களுக்கேற்ற கற்றல் இலக்குகளையும் செயல்களையும் அமைத்துத் தருவதில் சில உத்திகள் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் உதவும். இவர்களது ஊக்குவிப்பு குழந்தைகளை உற்சாகப்படுத்துகிறது.

குழந்தைகளின் தேவைகள் பற்றிய உளவியல் அறிவு ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் தேவை. முக்கியமாக ஆசிரியர் ஊக்குவித்தலின் விளைவு, பாடசாலைச் சூழ்நிலை, வகுப்பறைச் சூழ்நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஊக்குவித்தலில் அன்பும் மகிழ்ச்சியும் இணைந்ததான செயற்பாடு சிறந்ததாக அமையும்.

மாணவர்களுக்கு தன்னம்பிக்கை வளர்க்கும் விதத்தில் நடந்துகொள்வதும் அதற்கான கருப்பொருட்கள் அடங்கிய உதாரணங்களைக் கையாளுவதும் கற்றலில் ஊக்குவித்தலுக்கு உதவலாம். மாணவர்களின் கற்றல் திறனை விருத்தி செய்யும் நோக்கில் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கற்றல், கற்பித்தல்களுக்கு முதன்மை அளிக்கப்படுகின்றது.




## சவால்களை வெற்றிகொள்ளும் ஆக்கபூர்வமான முறைகள்

தகவல் தொழில்நுட்பம் இன்றைய பொழுதில் ஏனையவற்றைப் புறந்தள்ளி பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அதனால் முழு உலகமும் பூகோள கிராமமாக மாற்றம் பெற்றுள்ளது. எந்த ஒரு தனி மனிதனும் தனித்து வாழமுடியாது என்பது போல புதிய பூகோள கலாச்சாரத்தின் வளர்ச்சியையும் தடுக்க முடியாது. அத்துடன் தன் தனித்துவத்தைப் பேணியவாறு தேசியத்தை மதித்து பரஸ்பரம் புரிந்துணர்வுடன் வாழ வேண்டும் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த வகையில் வாழ முற்படும்போது சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அந்தச் சவால்களுக்கு முகம் கொடுக்கி சந்தர்ப்பங்களையும், சவால்களையும், விரிவாகவும், வித்தியாசமான கோணங்களிலும், ஆக்கபூர்வமாகவும் நோக்கப்பட வேண்டும்.

சவால்களை எதிர்கொள்ளுதல் என்பதில் மிக முக்கியமாகச் செல்வாக்கு செலுத்துவது தீர்மானங்களை எடுத்தல் ஆகும். இதில் தீர்மானங்கள் பல்வேறு வகையினதாக அமையும். வழமையான தீர்மானங்கள், உணர்ச்சிபூர்வமான தீர்மானங்கள், சிந்தனைத் தீர்மானங்கள் என நாம் அன்றாடம் மேற்கொள்ளும் விடயங்களில் இவற்றை மேற்கொள்கின்றோம். அவற்றில் சவால்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தீர்மானம் எடுக்காதிருத்தல், மற்றவர்களை நினைத்து தீர்மானம் எடுத்தல், தீர்மானங்களைக் காலம் தாழ்த்துதல் என்றவகையில் பொருத்தமானதை, பொருத்தமான நேரத்தில் கையாளுவதன் மூலம் நம் முன் விரிந்து நிற்கும் சவால்கள் வெற்றி கொள்ள முடியும். சவால்களை எதிர்கொள்ளும்போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

**1. உணர்ச்சிகளைக்கட்டுப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.**

**2. இயலுமான வரை சரியான, உண்மையான விடயங்களைப் பற்றி சிந்தியுங்கள்.**

**3. தூர நோக்குடன் செயற்படுங்கள்.**

**4. பிரச்சனையின் எல்லாப் பக்கங் களையும் நியாயமாகப் பாருங்கள்.**

**5. பிறரின் தாக்குதலில் இருந்து விடுபட்டு சுயாதீனமாகச் சிந்தியுங்கள்.**

6. பிறர் தேவைகளையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ளுங்கள்.

7. பொறுப்புடன் தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள்.


வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் தீர்மானம் எடுக்க வேண்டியிருக்கும் என்பதை உணருங்கள். வாழ்க்கையை, ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைக்கப்பட்ட தீர்மானங்களின் வரிசை என அழைக்கலாம். சில சந்தர்ப்பங்களில் மிக குறுகிய காலத்தினுள் பெருமளவு தீர்மானங்களை எடுக்க நேரிடுகிறது. பயனுடைய தீர்மானங்களை எடுப்பதற்கு அனுபவங்கள், பரந்த நோக்கு, சிறந்த அறிவு என்பன அவசியமாகும். நாம் எடுக்கும் தீர்மானம் ஒன்றின் விளைவுகள் எங்களுக்கு மட்டுமன்றி எங்கள் குடும்பம், பாடசாலை, சமூகம் ஆகியவற்றிலும் தாக்கம் செலுத்தும்.

## தொடர்பாடலின் பண்பு நலன்

இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகி விட்டது. இன்று உலகமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கி விட்டமைக்கு இத் தொடர்பாடல் விருத்தியே காரணம் எனலாம்.

பழமை மிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் நவீன தொடர்பாடல் முறைகளான தொலைபேசி, தொலைநகல், தொலைப்பதிவு , இணையம் வரையான பல்வகைப்பட்ட ஊடகங்களும் அகில உலகத்தையும் ஆட்டிப்படைக்கின்றன. எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும் தேவைகளின் போதும் நாம் பல்வேறு வகைப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அத்தகைய தொடர்பாடலானது பல்வேறு மட்டங்களில் இடம்பெறக்கூடும். வயதில் கூடியோருடனோ, குறைந்தோருடனோ, சம வயதுடையோருடனாகவும் இருக்கலாம். நம்மை விட அறிவிலும், ஆற்றலிலும், கல்வியிலும், செல்வத்திலிலும் சிறப்புப் பெற்றவர்களுடனாகவும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறுபட்டவர்களுடனும் தொடர்பாடல் மேற்கொள்ளும் நாம் தொடர்பாடல் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம் தொடர்பாடல் திறன் மிக்கவர்களாக விளங்க வேண்டும்.

உதாரணமாக நாம் பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர்களிடம் செல்லும் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்வோம். பண்பாக எப்படிப் பேசுவது, நடந்து கொள்வது என்பனவெல்லாம் இங்கு முக்கிய விடயங்களாகின்றன. எத்தகைய ஒழுங்கில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை தெரிந்து நடத்தல் வேண்டும். அடக்கமாகவும், தெளிவாகவும் பேசுதல் வேண்டும். அவ்வாறே வைத்தியரிடமும் செல்லும் சந்தர்ப்பத்திலும் பண்பாகவும் அமைதியாகவும் நடந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே கடை வியாபார நடவடிக்கைகளின் போதும் ஒவ்வொருவருடனும் நடந்து கொள்ளும் முறைகளில் கவனம் செலுத்துதல் வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களின் போதெல்லாம் நாம் பொருத்தமுற நம்மை இயைபாக்கி, பண்புடனும் முறையுடனும் தொடர்பாடலை மேற் கொள்வது அவசியமாகும்.



## இளைஞர்களுக்கு வழிகாட்டுதல் தேவை

இளமை என்பது எல்லையற்ற ஆற்றலின் பெரும் களஞ்சியம். இந்த சக்தியின் மூலம் இளைஞன் தன்னுடைய லட்சியத்தை செதுக்கிக் கொள்ள முடியும். இதற்காகவே இறைவன் இளைஞர்களிடம் வியக்கத்தக்க பலத்தையும் ஆற்றலையும் அளித்துள்ளார். ஆனால் நமது இளைஞர்களோ தங்களிடம் உள்ள ஆற்றலை அறியாமல் உள்ளனர். தனது அளவற்ற ஆற்றலை அறியாததால் வீரம் மிக்க அனுமான் கூட கடலைத் தன்னால் கடக்க முடியுமா என்று சந்தேகம் கொண்டார். ஆனால் எல்லையற்ற அவருடைய ஆற்றலை மற்றவர்கள் நினைவுபடுத்தியவுடன் ஒரே தாவலில் கடலை கடந்துவிட்டார்.

இதுதான் இன்றைய இளைய தலைமுறையினரின் நிலை. அவர்களுடைய பலத்தையும் திறமையையும் மூத்தவர்களான நாம் நினைவுபடுத்த வேண்டும். அப்போது அவர்கள் தங்களுக்குள்ளே இருக்கும் சிறந்த திறமைகளை வெளிக்கொணர்ந்து முழுமையான ஆளுமையை வளர்த்துக் கொள்ள முடியும். இளைஞர்களால் சாதிக்க முடியாதது என்று எதுவும் இல்லை. ஆனால் முதலில் தங்களுடைய இலட்சியத்தை அடைவதற்குரிய சரியான பாதையை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

பலமான உடற்கட்டை ஒருவன் பெற நினைத்தால் உடலை உறுதியாக்கும் உடற்பயிற்சியில் தினமும் தவறாமல் ஈடுபடவேண்டும். அதேநேரத்தில் ஒரு ஒழுங்குமுறையுடன் சுகாதாரமான ஊட்டச்சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும். பண்டிதனாக வர விரும்பினால் சிறந்த அறிஞர்களுடன் நெருங்கிப் பழக வேண்டும். ஆழமாகப் படிக்க வேண்டும். தேர்ந்தெடுத்த துறையில் சொற்பொழிவுகளைக் கேட்டு அதனைத் தொடர்ந்து சிந்தனை செய்ய வேண்டும். இத்தகைய ஒழுக்கமுடைய கடும் உழைப்போடு கூடிய விடாமுயற்சி அவனை சிறந்த அறிஞனாக உருவாக்கும். எந்தத் துறையில் ஒருவன் உயர விரும்புகின்றானோ அந்தத் துறையின் நுட்பமான வழி முறைகளைக் கற்று பயிற்சி செய்ய வேண்டும். அத் துறையில் சிறந்து விளங்க தனது முழு மனதையும் செலுத்த வேண்டும்.

நமது இளைஞர்கள் வழிகாட்டுதலைத் தேடி வேறு எங்கும் செல்ல வேண்டியதில்லை. சில நல்ல புத்தகங்களை எடுத்துப் படிப்பதே அவர்கள் முதலில் செய்ய வேண்டும். வெளியே செல்லும் மனதைக் கட்டுப்படுத்தி புத்தகத்திலுள்ள கருத்துக்களில் ஆழ்ந்து மூழ்கி முழு முயற்சியுடன் பயிற்சி செய்யவேண்டும். இந்த உண்மை நிரூபிக்கக் கூடியது. நமது இளைய தலைமுறையினருக்கு இது ஒரு அறைகூவல் ●













# சிரிக்கச் சிந்திக்கத் தூண்டும் மொழிவாணனின் கடிஜோக்ஸ்

நகைச்சுவை உணர்வு என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயல்பாக இருக்க வேண்டும். எல்லோரும் ரசிக்கும்படியாகவும் யார் மனதையும் புண்படுத்தாதபடியும் இருக்க வேண்டும். நகைச்சுவை உணர்வு எல்லோருக்கும் வருவது கிடையாது.

நகைச்சுவை உணர்வு மிக்க ஒரு மனிதன் எல்லா விடயங்களையும் சாதாரணமாக எடுத்து சாதிக்கும் வல்லமை படைத்தவன் என அறிஞர்கள் கூறுவர். நகைச்சுவையின் ரசிப்புத் தன்மையானது ஆளுக்காள் வேறுபடும்.

ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனை தெரியாதவர்கள் இருக்க முடியாது. இவர் நகைச்சுவை எழுத்தாளர் மட்டுமல்ல. சிறந்த பல்துறைக் கலைஞருமாவார். தன் எண்ணத்தில் உருவான நகைச்சுவைகள் அனைத்தையும் திரட்டி அண்மையில் ஒரு நூலாக வெளியிட்டிருந்தார்.

எழுத்துத் துறையில் பல்வேறு பரிணாமங்களில் பரிணமித்துக் கொண்டிருக்கும் இவரது 19 ஆவது இதழே இந்த 'கடி ஜோக்ஸ்' என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பு இந்து இளைஞர் மன்ற ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரபா கணேஷன், பஷீர் சேகுதாவுத், குமரகுருபரன், ராம் போன்ற அரசியல் பிரமுகர்கள், தினக்குரல் ஆசிரியர் தனபாலசிங்கம், புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

பொதுவாக இவ்வாறான நிகழ்வுகளுக்கு அரசியல் பிரமுகர்களை அழைப்பு என்பது அபூர்வமே. அவர்களும் கூட கலையுணர்வு மிக்கவர்கள். கலை இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் என்பதை அந்நிகழ்வு எமக்கு எடுத்துக்காட்டியது. ஆனாலும் இன்று அநேகமான இலக்கிய நிகழ்வுகளில் அரசியல் பிரமுகர்களும் கலந்துகொள்வது அரசியலுக்கும் அப்பாற்பட்ட அவர்களின் கலை ஈடுபாட்டை காட்டுகிறது. ஆனாலும் கலை அரங்குகளில் அவர்கள் உரையாற்றும்போது அவ் அரங்கு அரசியல் அரங்காக

**பிரபா**

மாற்றப்படுவதுதான் சங்கடமாக இருக்கின்றது.



நூல் அறிமுக உரையை சமூகஜோதி எம்.ஏ. ரபீக் அவர்கள் வழங்கினார்கள். "பேராதனை பூங்காவில் நிற்கும்போது ஏற்படும் பேரானந்தத்தை விட குற்றால அருவியிலே குளிக்கின்ற போது ஏற்படும் குதூகலத்தை விட இந்த மொழிவாணனின் கடி ஜோக்ஸ் வெளியீட்டில் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது" என்று ஒரு சிறந்த அறிமுகவுரையை வழங்கினார். அரசியல் என்பது ஒரு சாக்கடை என்பதைத்தான் காலம் காலமாக பலர் சொல்லக் கேட்டிருப்போம். ஆனால் இவர் அரசியல் என்பது ஒரு பூக்கடை என்றார்.

எவருடைய மனதிலே நகைச்சுவை உணர்வு இல்லையோ அவர்களுக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் சகிப்புத் தன்மையும் இருக்கவே இருக்காது. நாம் வாசிக்கும் அத்தனை விடயங்களும் எம் மனதில் இருக்கும் என்று கூறமுடியாது. ஆனால் இவ்வாறான நகைச்சுவைகள் எம் மனதில் நிலைத்து விடும்.

இந்நூலிலே ஆசிரியர், தான் தரித்துக்கொண்ட பெயருக்கு பொருத்தமாக மொழியின் அழகையும், ஆழத்தையும்,

**'ஊசிப்போன உழுந்துவடையை என்ன செய்யலாம்' என்று கேட்கிறார். நாங்களென்றால் 'வீசித்தான் போடணும்' என்போம். ஆனால் இவரோ 'ஊசியை எடுத்துவிட்டு வடையைச் சாப்பிடலாமே?' என்கிறார்.**

இனிமையையும், செம்மையையும் மிக லாவகமாகக் கையாளுகின்றார். எமது மொழியில் இருக்கும் லாவண்யத்தை ஆசிரியர் தன் நடையில் நன்கு பயன்படுத்தியிருக்கின்றார். அதனோடு கலந்து சிறு நக்கலையும் நையாண்டியையும்கூட சொல்லத் தவறவில்லை. நகைச்சுவையா? மனிதனுக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கும்போது இதற்கெல்லாம் எங்கே நேரம் இருக்கின்றது என்று நம்மில் பலர் யோசிப்பதால் போலும் நம் நாட்டில் இவ்வாறான படைப்புகளுக்கு பஞ்சமாக இருக்கின்றது. ஆனால் வாழ்வில் நாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இன்னல்கள், மன நெருக்கடிகள் என்பவற்றுக்கு நகைச்சுவை உணர்வு ஒரு இலவச மருந்து என்பது பலருக்குத் தெரிவதில்லை.

நாமெல்லாம் ஒரு கேள்விக்கு ஒரு பதிலைத்தான் சொல்வோம். ஆனால் நாம் எதிர்பார்க்காத விதத்தில் இவரது பதில் வேறு விதமாக அமைவதோடு, வாசிக்கும் வாசகன் ஆஹா இப்படியும் யோசிக்கலாமா என்று வியக்கும் வண்ணம் அவரது பதில் அமையும்.

'கல்லைத் தூக்கி கடலில் போட்டால் என்ன நடக்கும்' என்று கேட்டால் நாம் விஞ்ஞான ரீதியில் விளக்கம் அளிப்போம். ஆனால் இவரோ வெகு இயல்பாக 'அதற்கு நீந்தத் தெரியாது' என்பார். தேள், தேனி இவையெல்லாம் கொட்டினால் வலிக்குமாம். ஆனால் டீ கொட்டினால் வலிக்காதாம். 'ஊசிப்போன உழுந்து வடையை என்ன செய்யலாம்' என்று கேட்கிறார். நாங்களென்றால் 'வீசித்தான் போடணும்' என்போம். ஆனால் இவரோ 'ஊசியை எடுத்துவிட்டு வடையைச் சாப்பிடலாமே?' என்கிறார். ஆங்கில எழுத்துக்களில் B எப்போதும் குளிராக இருக்குமாம். காரணத்தைக் கேட்டால் அது AC க்கு நடுவில் இருக்கின்றதாம் (a-b-c). நடந்து வந்தால் லேட் ஆகும் என்றபடியால் தான் பறவைகள் பறந்து வருகின்றதாம். பசு மாட்டுக்கு டீ காபி என்பன கறக்கத் தெரியாததால்தான் பால் கறக்கின்றதாம். பாம்புக்கு பிடித்த நோய் புற்று நோயாம். தொடைக்கு ஆங்கிலத்திலே 'தை' என்றபடியால்தான் ஜதி சொல்லும்போது தை தை என்று சொல்றாங்களாம். இவ்வாறு ஒவ்வொன்றுக்கும் நகைச்சுவையோடு கூடிய பதில்களைத் தந்து வாசகர்களை சிரிப்பு மழையில் நனைய வைப்பதோடு சிந்திக்கவும் வைக்கிறார். இவ்வாறு இன்னும் எண்ணற்ற உதாரணங்களைக் கூறலாம்.

மொத்தத்தில் புதிய சிந்தனை மற்றும் புதிய மாற்றத்தை உருவாக்கும் நோக்கில் ஆசிரியர்












'கடிஜோக்ஸ்' என்ற இந்த புத்தகம் ஊடாக வாசகர்களை வித்தியாசமாக யோசிக்க வைக்கிறார். சோகமாக இருக்கும் வேளைகளிலே இந்த புத்தகத்தை எடுத்து வாசித்தால் மிகவும் ஆரோக்கியமான நிலையை எய்தக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும்.

இலங்கையில் கட்டுரை, கவிதை, நாவல் என்று நாளுக்கு நாள் ஒவ்வொரு புத்தகங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஆனால் கடி ஜோக் பற்றிய புத்தகம் வெளியாவதில்லை. 'கடி ஜோக்ஸ்' என்ற பெயரை வேறு விதமாக மாற்றி இருந்தால் இது தமிழ் இலக்கிய உலகில் ஒரு புது முயற்சியும் புது வரவும் என்று பதிவு செய்யப்பட்டிருக்கலாம்.

இன்று யுத்தத்தில் இருந்து மீண்ட எம்மக்களின் மனங்களுக்கு மாற்றம் ஒன்று அவசியமாகிறது. இவ்வாறான மாறுபட்ட சிந்தனைகளைக் கொண்ட இவ்வாறான புத்தகங்கள் எம் மக்களின் மனங்களுக்கு நல்ல மருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் மொழிவாணனின் இந்த நூலும் மக்களின் மகத்துவமான வாழக்கைக்கு வழிசமைக்கும் என்று நம்புவோம் ●



**த. சிந்துஜா**

# சடங்குகளும் சம்பிரதாயங்களும் அவசியந்தானா?

தமிழர்களின் வாழ்வில் கலாச்சாரம், பண்பாடு என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. சாமத்தியச் சடங்கு, திருமணச் சடங்கு, காதுகுத்து, பிறந்தநாள் என சம்பிரதாயங்களின் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது. பிரதேசத்திற்கு பிரதேசம், சமூகத்திற்குச் சமூகம் இச்சடங்கு முறைகள் மாறுபடுகின்றன. தொன்றுதொட்டு கொண்டாடப்பட்டு வரும் இச்சடங்குகள் ஒரு மூட நம்பிக்கையாகவே கருதப்படுகின்றன.

அதாவது ஒரு பெண் திருமணம் முடித்தபின் பொட்டும் தாலியும் எப்போதுமே அணிந்திருக்கவேண்டும், கணவன் இறந்தபின் மறுமணம் செய்யாது வெள்ளைச்சாறி அணிந்து தனித்து வாழவேண்டும், பெரிய பிள்ளையாக வந்தவுடன் வீட்டுக்குள்ளே வைத்திருப்பது, தனியாக எங்கும் போகவிடாது தனிமைப்படுத்துவது, யாருடனும் கதைத்துப் பேசவிடாமல் தடுப்பது போன்ற மூட நம்பிக்கைகள் தமிழ்க் கலாசாரமாக கருதப்படுகின்றன.

இஸ்லாமியர்களைப் பொறுத்தளவில் ஒரு பெண் பருவ-மடைவது அவளது தந்தைக்கே தெரியாது. ஆனால், ஏனைய மதத்தவர்களை நோக்கும்போது அந்த பிள்ளையை சாமத்திய சடங்குசெய்யும்வரைவீட்டிலுள்யாரும்பார்க்காதுஒருஅறைக்குள் தனியாக பூட்டிவைத்து, உணவுகளில் கட்டுப்பாடு வைப்பதும், பேய்ப் பிசாசு பிடித்து விடும் என்று பூசாரியைக்கொண்டு சாந்தி செய்வதுமாக தொடர்கள் அரங்கேறும். சில நாட்களின் பின்பு தன் பிள்ளை பெரியவளாகிவிட்டாள் என்று ஊருக்கே பறைசாற்றும் முகமாக எல்லோரையும் கூட்டி நிறையப் பணம் செலவழித்து கொண்டாடுகின்றனர்.

இச்சடங்குகளை படித்தவர்கள் மற்றும் பணம் படைத்தவர்கள் தாங்களது கௌரவத்திற்காகவும், அந்தஸ்தை வெளிக்காட்டுவதற்கும், தாங்களதுமதிப்பைஉயர்த்துவதற்காகவும் பெண்களை ஒரு காட்சிப்பொருளாக வைத்து கொண்டாடி வரும் வேளை, கிராமத்தில் வாழும் கஷ்டத்திற்கு மத்தியில் உள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு தமது வசதி கருதி இச்சடங்கைச் செய்யாது விடுகின்றனர். இவற்றைப் பார்க்கும் ஏழை பிள்ளை மனதால் பாதிக்கப்படுகின்றாள். இருந்தும் கிராமத்து பிள்ளைகள் சடங்குகள் செய்யப்படாமல் நன்றாகத்தான் வாழ்கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு சீரழிவுக்கு மத்தியில் பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சிரமப்படும் வேளையில் நாகரீகம் என்னும் பேரில் வீட்டுக்கு வீடு பெற்றோர்கள் தமது பெண்பிள்ளைகளுக்கு ஊரையே கூட்டி சாமத்தியசடங்கு செய்வது அவசியந்தானா? பெற்றோர்களே சிந்தியுங்கள்! நம் நாட்டில் பெண்கள் முகம் கொடுக்கும் உளவியல் பிரச்சினைகளின் காரணிகளில் இந்தச் சாமத்தியச் சடங்கும் ஒன்றாக இருக்கிறது.

ஒரு பெண் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்படும் பருவம் அவள் பூப்பெய்தும் பருவம்தான். இது பற்றிய சரியான புரிந்துணர்வு இல்லாமையால் பல பெற்றோர்கள் தமது பெண்பிள்ளைகளை, தமது மகள் பருவமெய்துவிட்டாள் என்பதற்கு சான்றாக இந்த சாமத்தியச் சடங்கைச் செய்கின்றனர். இந்த நிலையில் நாம் இது பற்றிப் பேச வேண்டியதொரு கட்டாயத்தில் இருக்கிறோம்.

நவீன யுகத்தில் இந்தளைத் தூரம் நாம் பல்வேறு துறை-றைகளிலும் வளர்ந்து விட்ட நிலையில் சாமத்தியச் சடங்குகள் அவசியந்தானா? சாமத்தியச் சடங்கு எமது கலாசாரத்தில் ஏன் இடம் பிடித்துக் கொண்டது? என்பது போன்றதான கேள்விகளுக்கு மிகத் தெளிவான கருத்துக்களோ அல்லது விளக்கங்களோ எமக்கு இதுவரை சரியான முறையில் கிடைக்காவிட்டாலும் பல பெரியவர்களுடன் சாமத்தியச்சடங்கு பற்றிப் பேசிப் பார்த்தபோது ஒவ்வொருவரும் சொன்ன காரணங்கள் வித்தியாசமாக இருந்தன. அதாவது ஆண், பெண் பாகுபாடின்றி விளையாடித் திரிந்தவளை ஆண்களில் இருந்து பிரித்து வைப்பதற்காகவும், எங்கள் வீட்டிலும் ஒரு குமர் இருக்கிறாள். மணமகன்மார் பெண் கேட்டு வரலாம் என்பதைத் தெரியப் படுத்துவதற்காகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன என்று காரணங்கள் நீண்டன. பாருங்கள் ஒரு பெண்ணை எவ்வாறு ஏலம் போடுகிறார்கள் என்று.

இப்படியான கருத்துக்களின் மத்தியில் "இவள் இனி உங்கள்பிள்ளை. நீங்கள்தான் அவளைக்காக்கவேண்டும் என்று சொல்லி ஊர்மக்களிடம் பிள்ளையை ஒப்படைப்பதற்காகவே சாமத்தியச் சடங்கு நடக்கிறது" என்று ஒரு புலம்பெயர்ந்த பெரியவர் சொன்னார். இப்படியானதொரு கருத்தைக் கேட்க சிரிப்பைத் தவிர வேறொன்றும் வரவில்லை. கல்வி கற்காத பல மக்களுக்கு இது பற்றி புரிந்துணர்வு இல்லை என்றால் கற்றவர்கள் ஆராய்ந்து, ஆக்கப்பூர்வமாக செயற்படுவார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன். அவர்களும் அப்படியே.


எம் எம்மத்தியில் உள்ள கற்றவர்கள் இப்படியான உப்புச் சப்பற்ற கருத்துக்களைத் தருவது எமது சமூகத்தை, எமது கலாசாரத்தை, எமது பண்பாட்டை நாமே அவமானப்படுத்துவதற்குச் சமானமாகிறது. சிறுபராயத்தை விட்டு பருவமெய்திய நாளிலிருந்து குற்றம் கண்டுபிடிக்கவும், குறை கூறவும், பருவம் பார்த்துத் தருணம் தேடி பெண்ணைச் சீரழிக்கவுமே சமூகத்துள் ஒரு கழுகுக் கூட்டம் காத்திருக்கும் வேளையில் பல பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாகின்றனர். இப்போதெல்லாம் வீட்டுக்குள்ளேயே இவை நடைபெறுவதை அன்றாடம் ஊடகங்களின் மூலம் அறியலாம். மாமாவால், சித்தப்பாவால், அக்காவின் கணவனால், அப்பாவின் நெருங்கிய நண்பனால் என்று பட்டியல் நீளும். இப்படித்தான் பெரும்பான்மையான குற்றங்கள் தினம் தினம் அரங்கேறுகின்றன.

வெளிநாட்டவர் மத்தியில் ஓரளவுக்காவது இவை வெளிச்சத்துக்கு வருகின்றன. ஆனால் இவை குமுறல்களாகவும், கோபங்களாகவும், ஆற்றாமையாகவும் பெண்களுக்குள் அடங்கிக் கிடக்கின்றன. கலாச்சாரம், பண்பாடு என்று வாயளவில் உச்சரித்து மனதுள் போலியாக வாழும் மனிதமல்லாதவர்களின் முகத்திரைகளைக் கிழித்தெறிய எம் பெண்களிடம் தைரியம் இல்லை. வெளியில் தெரிந்தால் சமூகமும், அதன் கலாச்சாரமும், அதன் பண்பாடும் பாதிக்கப்பட்ட பெண் என்று பாழுங்கிணற்றில் தள்ளி விடும் இந்தச் சமுதாயம்.

நாட்டில் நடக்கும் வன்முறைகளுக்கும், யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்து வாழும் எத்தனையோ குடும்பங்கள் உணவிற்கே கஷ்டப்படும் இந்நிலையில் பெருந்தொகையான பணத்தை வீணடித்து ஊர் மக்களின் சந்தோஷத்திற்காகவும், ஆடம்பரத்துக்காகவும் ஒரு பெண்பிள்ளையை அலங்காரப்படுத்தி பூப்புனித நீராட்டு விழா என்று பத்திரிகை அடித்து மக்களைக்கூட்டி இவ்வாறானதொரு சடங்கு பெண்களுக்கு செய்வது அநியாயம். தனியாக நடமாடுவதற்கே பயப்படும் பெண்களின் இந்த நிலையில் அவர்களை நாம் தான் பாழுங்கிணற்றில் தள்ளிவிடுகின்றோம். இதைப்பற்றிய ஒரு தெளிவான சிந்தனையும் தீர்க்கமான முடிவும் எடுக்கவேண்டியது பெற்றோரின் கட்டாயக் கடமை.

## தத்துவம்

என்ன தான் தத்துவம் சொன்னாலும்
நாம follow பண்ணப்போறதில்ல
forward தான் பண்ணப்போறம்
நமக்கெல்லாம் எதுக்கு தத்துவம்..?




# ஊக்க மருந்து


வேலை ஒன்று வேண்டும் என்பதற்காக ஏதோ ஒரு படிப்பை முடித்து வேலை ஒன்றில் அமர்ந்த பின்னர் சில வருடங்கள் சந்தோஷமாகக் கழியும். சம்பளம், புதிய சுதந்திரம் ஆகியவற்றில் திருப்தி கண்டு கொண்டிருந்த ஒருவன், தான் செய்யும் வேலையில் திருப்தி இல்லை என்று உணரும்போது தனக்குப் பிடித்த ஒரு துறையில் மேற்கொண்டு படிக்க வேண்டும் அல்லது பயிற்சி பெற வேண்டும் என்று தீர்மானிக்கிறான். ஒரு அலுவலகத்தில் 8 தொடக்கம் 5 மணி-வரை வேலை செய்பவர்கள் இந்தப் படிப்பை மேற்கொள்வதில் கஷ்டம் ஒன்றும் இருக்காது என்று கருதி தமக்குப் பிடித்த அல்லது உயர்ச்சி தரக்கூடிய படிப்பைத் தெரிவு செய்வர்.

அலுவலக வேலை அவ்வளவு கடினமில்லை தான். சற்று ஓய்வாக இருக்கக்கூடிய நாட்கள் பல உண்டு. சில வேலைகள் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டி இருந்தாலும் பல வேலைகளை அவர்களே திட்டமிட்டுச் செய்ய முடியும். ஆனாலும் வீடு வந்து சேர்ந்த பின் எந்த ஒரு படிப்பையும் தொடர முடியாத நிலை. வாசித்துக் கிரகிக்க வேண்டிய விடயங்களை ஒரு முறையேனும் வாசிக்க முடியாத படி உடல் சோர்வடைந்து காணப்படுவதற்கு என்னதான் காரணம்? வேலைப் பழுவா?

ஒருகாரணம், ஆர்வமோ விருப்பமோ இல்லாதவேலை! தொழில் வாழ்வாதாரத்தைத் தருகிறது. ஆனால் திருப்தியைத் தருவதில்லை. சிலநேரம் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. எனவே கிடைக்கும் ஊதியத்துக்களவாக வேலை செய்தால் போதும் என்ற மனநிலை உருவாகின்றது. இப்படியாக வேலையில் அக்கறை கொள்ளாதவர் அந்த வேலை செய்வதன் மூலம் எந்த ஒரு அறிவையும் பெற்றுக் கொள்ளமாட்டார். கற்பதை நிறுத்திவிட்டால் வளர்ச்சியும் தடைப்படும். வளர்ச்சி இல்லாவிட்டால் முன்னேற்றம் இல்லை. பதவி உயர்வில்லை. சம்பள உயர்வுமில்லை. இது மேலும் அதிருப்தியை ஏற்படுத்தும். எதிர்மறை எண்ணங்கள், ஏக்கங்கள், தீர்மானிக்க முடியாத மனநிலை போன்றவை மூளைக்கு அதிக வேலையைக் கொடுப்பதனால் விரைவில் களைப்பு ஏற்படுகின்றது. உடல் வேலைதான் அதிக களைப்பை ஏற்படுத்துகிறது என்பது பரவலான எண்ணம். ஆனால் சோர்வை ஏற்படுத்துவதில் அதிக பங்களிப்பைத் தருவது மன உணர்வுகள் தான் என்பது அறிவியல் தரும் தகவல்.

செய்யமுடிவில்லையே, காலத்தை வீணாக்கி விட்டோமே போன்ற சிந்தனைகள் எதிர்மறை மன எழுச்சிகளைப் பிறப்பிப்பதனால் அதிகளவு சக்தி விரயமாகிறது. இது களைப்பை ஏற்படுத்துகின்றது. மாறாக அறிவை விருத்தி செய்யப் போகிறேன், வேலையில் அதிக கவனம் செலுத்தி அதைத் திறமையாகச் செய்யப் போகிறேன் என்ற தீர்மானத்தோடு அமைந்த கூற்றுக்கள் உற்சாகத்தைத் தருகின்றன. உற்சாகத்துக்கான ஊக்க மருந்து, செயற்படுவதற்கான தீர்மானங்களே!!

- அன்பழகன்



# ஊடக மயக்கம்



## இணையத்தின் வளர்ச்சி



தகவலைப் பரிமாறிக் கொள்ள உதவும் ஒரு சாதனமே ஊடகம் எனப்படுகின்றது. அந்த வகையில். இன்றைய காலகட்டத்தில் வாசித்தல். கேட்டல். பார்த்தல் என்பவற்றைவிட தேடுதலினூடாக தகவல்கள் பரிமாற்றப்படுகின்றன. இணையத் தளங்கள் இதில் வெற்றியடைந்து வருகின்றன. அநேகமான புதிய விடயங்களை உடனுக்குடன் தமிழில் இணையத்தளத்தில் காணக்கூடியதாக உள்ளது. இதை எந்தளவு வேகமாக இடுகையிடுகிறார்களோ. அந்த அளவிற்கு அவற்றின் புகழ் பரவும். செய்திகள் தவிர. இத்தளத்தில் இடுகையிடப்படும் காணொளிகளும் சிறந்தவையாகவும் அரிதானவையாகவும் உள்ளன.

**- கே. கபில், வத்தளை**

## கிடைத்ததை வைத்து ஓட்டும் ஊடகங்கள்

"நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது சக்தியின் மியூசிக் எக்ஸ்பிரஸ்..." இது சக்தி எப்.எம். இல். நான் கேட்ட ஒரு ஒளிபரப்பாளரின் குரல். அப்பாடா எப்படி கத்துகிறார்கள்! படபடப்பாக ஒலிபரப்பாளர்கள் பேசித்தள்ளுகிறார்கள், சிரிக்கின்றார்கள், ஜோக் அடிக்கிறார்கள், குளறுகிறார்கள், ஊளையிடுகிறார்கள். ஒலிபரப்பு என்ற பெயரில் இன்று புதிய முறையை கையாளுகிறார்கள். இனிமையான குரலில் மென்மையாகவும் தெளிவாகவும் பேசுகின்ற இளைய ஒளிபரப்பாளர்கள் இன்று இல்லை. பஞ்சம், பட்டினி நிலவுகின்றபோது கிடைப்பதை எடுத்து விழுங்கத்தானே வேண்டும். நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் இல்லாதபோது யார் கிடைத்தால் என்ன? என்ற நிலையில்தான் இன்றைய தனியார் ஊடகங்கள் செல்கின்றன.

**- நா. இன்பகுமரன்**
**வாசல வீதி, கொட்டாஞ்சேனை**

## வசந்தத்தின் நடுநிலைமை

சில இலத்திரனியல் ஊடகங்களைப் பொறுத்தவரையில் செய்திகளை உண்மைத்தன்மையாக வழங்குவதில்லை. இது மனவேதனையைத் தரும் விடயம். ஏதாவது ஒரு வகையில் யாரோ ஒருவருக்கு வால் பிடிக்கத்தான் செய்கின்றார்கள். அந்த வகையில் "வசந்தம் எப். எம்" மணித்தியாலச் செய்திகள், பிரதான செய்திகள் என நாடளாவிய ரீதியில் நடக்கும் நிகழ்வுகளை திரட்டித் தருவது மக்களுக்கு பிரயோசனமாகவுள்ளது. வசந்தம் செய்திப்பிரிவு, மற்றும் நிகழ்ச்சி பிரிவினர்களுக்கு நன்றியும் வாழ்த்தும் உரித்தாகட்டும்.

**- திருமதி மர்சுகா தாவூத், ஏறாவூர்**

## செவிக்கு இனிமையாகும் 'சூரிய ராகங்கள்'

வானொலிகளின் வரிசையில் என்னை மிகவும் கவர்ந்த நிகழ்ச்சி என்றால் அது சூரியனில் ஒளிபரப்பாகும் "சூரிய ராகங்கள்" தான். விடிந்தவுடனேயே காதுகளுக்கு இனிமையான பாடல்களையும் புதிய பாடல்களின் அறிமுகங்களும் சேர்ந்தவையாகவே இந் நிகழ்ச்சி உள்ளது. என்னைப் போன்ற பல இளைஞர்களின் விருப்பத்தை இந்நிகழ்ச்சி பூர்த்திசெய்கின்றது.

**- ரீரோஷினி, தெஹிவளை**

## கதைப்பதற்கு கற்றுக்கொண்டு வாருங்கள்

ஊடகங்கள் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டிய ஒரு இடமே தவிர கேளிக்கை நடத்தும் இடமல்ல என்பதை இன்றைய அறிவிப்பாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். கலையகத்தில் மைக்கிற்கு முன் உட்கார்ந்தால் தங்களுக்கு நட்சத்திர நினைப்பு வந்துவிடுகின்றது. ஒரு முதன்மை வானொலியில் அண்மையில் 'விடுமுறை' நாள் மாலை வேளையில் ஒரு நிகழ்ச்சியை செவிமடுத்தபோது விளங்கியது அவர்களது இலட்சணம். இரண்டு ஆண் அறிவிப்பாளர்கள் ஒரு பெண் நேயரிடம் உரையாடினார்கள். சாதாரணதரம் படிக்கும் மாணவி ஒருவரிடம் "நீங்கள் ஓ.எல் படிக்க எத்தனை வருடம் ஸ்கூல் போனீங்க?", "அப்போ நீங்க பத்து வருசத்தில ஓ.எல் எழுத மாட்டீங்களா?" இப்படி பல தேவையில்லாத கேள்விகளைக் கேட்டு கூத்தடித்தார்கள். நகைச்சுவைக்கென்றும் குழப்புவதற்கென்றும் நிகழ்ச்சிகளை வைத்துள்ளீர்கள்தானே? பிறகேன் உங்களுக்கு இந்த தேவையில்லாத வெட்டி வேலை? இது தொடர்ந்தால் சம்பந்தப்பட்டவர்களின் பெயரைக் குறிப்பிட்டு நான் எழுதவேண்டியிருக்கும்.

**- கே. திருநாவுக்கரசு, வைத்திய வீதி, தெஹிவளை**

'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல். அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட. பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

**'ஊடக மயக்கம்', 'இருக்கிறம்'**
**3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07,**
**மின்னஞ்சல்: irukiram@gmail.com**

# யாழ்ப்பாணத்தில் "இருக்கிறம்" பெற்றுக்கொள்ளும் இடங்கள்



மெகா வேல்ட் (வெஸ்ரியன் பிரஸ்)
402.பிரதான வீதி,
சுண்டுக்குளி

பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

அஷ்டலக்சுமி புத்தகசாலை,
14. பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்

மண்டேலா புத்தகசாலை,
2. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

அன்னை புத்தகசாலை,
07, ஆஸ்பத்திரி வீதி,
யரழ்ப்பாணம்

ஜங்கரன் ஸ்டேஷனரீஸ்,
6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

கருணாநிதி (அரன்ஸ் சொப்)
100. அரசடி வீதி,
நீராவியடி

வேல் ஸ்ரோர்ஸ்,
887, தட்டாதெரு,
யாழ்ப்பாணம்

அம்பாள் ஸ்ரோர்ஸ்,
96,கே.கே.எஸ் வீதி,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்

லிங்கம் ஸ்ரோர்ஸ்,
603, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்

ஞானம் புத்தக நிலையம்,
635,கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்

பாக்கியா ஸ்டேஷனரீஸ்
121, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்

மகாலட்சுமி
கொக்குவில்,
யாழ்ப்பாணம்

ரூபன் புத்தகசாலை
ஆனைக்கோட்டை சந்தி,
ஆனைக்கோட்டை

மெடிலாண்ட் மருந்தகம்
ஆலடி சந்தி,
மானிப்பாய்

மானிப்பாய் இந்துக்கல்லூரி

சிவா வெற்றிலைக்கடை
மானிப்பாய் சந்தை,
மானிப்பாய்

ஆனந்தா ஸ்ரோர்ஸ்
இணுவில் வீதி,
மானிப்பாய் பார்மஸி ஒழுங்கை

கண்ணன் ஸ்ரோர்ஸ்
கட்டுடை,
மானிப்பாய்

கரன் மருந்தகம்
பிரதான வீதி,
சங்கானை

எஸ்.ஆர்.வி. ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி,
சங்கானை

தியாகராஜா
சுசிலாதேவி அச்சகம்,
சித்தங்கேணி

New Trust Center
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்

துர்க்கா
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்

சிற்றி சென்றர்
கே.கே.எஸ் வீதி,
மருதனார்மடம்

எஸ். தனபாலசிங்கம்
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்

கரன் ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ் வீதி,
இணுவில்

சோதி பேக் கவுஸ்
கே.கே.எஸ் வீதி,
இணுவில்

ஹரி கிருஸ்ணா
பலாலி வீதி,
இணுவில்

சானுசன் ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி,
திருநேல்வேலி

கஜன் குரூப்
76 பி, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு

மாயவன் தொலைத்தொடர்பகம்,
112 பி, சேர்.பொன். இராமநாதன்
வீதி,
யாழ்ப்பாணம்

புக் லெப்
172, சேர்.பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்

சிவசக்தி ஸ்ரோர்ஸ்
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்

கற்பக விநாயகர் ஸ்ரோர்ஸ்
உரும்பிராய்

புருசோத் அச்சகம்
சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்

நகுலன் களஞ்சியம்
மடத்தடி பலாலி வீதி,
உரும்பிராய்

சபான் புத்தகசாலை
பிரதான வீதி,
அச்சுவேலி

கலைச்சோலை
வல்வெட்டித்துறை

தர்மலிங்கம் கடை
நியூஸ் ஏஜன்ட்,
உடுப்பிட்டி வல்வெட்டித்துறை

ஸ்ரீ வாணி விலாஸ்
சாவகச்சேரி வீதி,
புலோலி வடக்கு,
புலோலி

மயூரா தொலைத்தொடர்பகம்
மந்திகை

நாவலர் புத்தகசாலை
மந்திகை

கனோன்
பஸ் நிலையம்,
பருத்தித்துறை

லான்ட்மார்க்
பருத்தித்துறை

கமலா புத்தகசாலை
பிரதான வீதி,
பருத்தித்துறை

தங்கை தொலைத்தொடர்பகம்
கிராமகோடு,
பருத்தித்துறை

மொடர்ன் புத்தகசாலை
பஸ் நிலையம்,
நெல்லியடி,
கரவெட்டி

இராஜலக்சுமி மல்டி பெலஸ்
நியூஸ் ஏஜன்ற்,
நெல்லியடி,
கரவெட்டி

டோரா என்டர்பிரைசஸ்
பிரதான வீதி,
நெல்லியடி

அருணோதயம்
புத்தூர் கிழக்கு,
புத்தூர்

குளோபல் நெற்
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி,
புத்தூர்

மாஸ்ரர் தொலைத்தொடர்பகம்
நீர்வேலி

லக்கி பன்சி கவுஸ்
இருபாலை சந்தி,
கோப்பாய்

ஸ்ரீராம் பன்சி கவுஸ்
கைதடி சந்தி,
கைதடி

வாசன்ஸ் ஸ்ரோர்ஸ்
01, புதிய சந்தை,
சாவகச்சேரி

பொதிகை கொம்பியூட்டர் கிரபிக்ஸ்
03, தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி

ஸ்ரீராம் மருந்தகம்
கண்டி வீதி,
சாவகச்சேரி

கஜமுகன் ஸ்ரோர்ஸ்
மீசாலை வடக்கு,
மீசாலை

கஜானன் மல்ரி சர்விஸ்
அல்லாரை வீதி,
மீசாலை

ஏ. சுப்பிரமணியம்
தோப்பு லேன்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

புதிய அருள்நாயகி புத்தகசாலை
பஸ் நிலையம்,
கொடிகாமம்

பன்சினா பீ.சி சிஸ்டம் பன்சி
கச்சாய் வீதி,
கொடிகாமம்

ராம் பூபால்
726, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

ரூபன் புத்தகசாலை
605, கே.கே.எஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

பகவான் மருந்தகம்
221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

சோபி ஸ்ரோர்ஸ்
373, அரசடிச் சந்தி,
நல்லூர்

ஸ்ரீகாந் புத்தகசாலை
501, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்


துஷ்யந்தன் களஞ்சியம்
கோவில் வீதி,
முடமாவடி சந்தி

கந்தையா ஸ்ரோர்ஸ்
தாவடி சந்தி,
கொக்குவில்

மகேந்திரன் ஸ்ரோர்ஸ்
பொற்பதி வீதி,
கோண்டாவில்

பாலேந்திரம்
ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்

# கொழும்பில் 'இருக்கிறம்' கிடைக்கும் இடங்கள்










கந்தையா ஸ்டோர்ஸ்
357, காலி வீதி,
கொழும்பு - 04

AVKCO லங்கன்ஸ்
399, காலி வீதி,
கொழும்பு - 04

கோகிலம் புத்தகசாலை
4C-5 பஸல்ஸ் வீதி,
கொழும்பு - 06

பூபாலசிங்கம் B.S
309A, 2/3 காலி வீதி,
கொழும்பு - 06

மீடியா விஷன்
396A, காலி வீதி,
கொழும்பு - 06

விண்ட்ஸர் புத்தகசாலை
372, காலி வீதி,
கொழும்பு - 06

சங்கர் புத்தகசாலை
240, காலி வீதி,
கொழும்பு - 06

கொரடோவா புத்தகசாலை
226, காலி வீதி,
கொழும்பு - 06

டயமண்ட் ஸ்டோர்ஸ்
184, காலி வீதி,
கொழும்பு - 06

K.S. கொமினிகேஷன்
வெள்ளவத்தை

சரவணாஸ் ட்ரக்ஸ்
7C, ஹம்டன் வீதி,
கொழும்பு - 06

டெக்னோ நெட்கபே
9A, ஹம்டன் வீதி,
கொழும்பு - 06

இண்டோ சிலோன் கபே
284, காலி வீதி,
கொழும்பு - 03

ஹெட்டியாராச்சி
கொள்ளுப்பிட்டி

பாலரட்ணம் ஏஜென்சி
73/A தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07

ராகமணி புத்தகசாலை (லக்பிம நியூஸ்)
டவுண் ஹோல்,
மருதானை

பூபாலசிங்கம் B.S
202, செட்டியார் தெரு,
கொழும்பு - 11

R.K. ஸ்டோர்ஸ்
141-1P, ஆண்டிவேல் வீதி,
கொழும்பு - 13

சிவசக்தி ஸ்டோர்ஸ்
226/3, ஆண்டிவேல் வீதி,
கொழும்பு - 13

அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை
320, செட்டியார் தெரு,
கொழும்பு - 11

கிருஷ்ணா கோ
22, ஜம்பட்டா வீதி,
கொழும்பு 13

அக்ஷா
57/F, ஜம்பட்டா வீதி,
கொழும்பு - 13

ராதிகா குரோசரீஸ் (R.G. SHOP)
176, ஜம்பட்டா வீதி,
கொழும்பு - 13

வேலாங்கண்ணி புத்தகசாலை
03, ஜிந்துப்பிட்டிய வீதி,
கொழும்பு - 13

மல்டி டிரேடர்ஸ்
168, ஜிந்துபிட்டிய வீதி,
கொழும்பு - 13

S.S. குரோசரீஸ்
556 - 1/3, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு - 15

V.A. ஸ்டோர்ஸ்
10, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13

சாய் புத்தகசாலை
92, கொட்டாங்சேனை வீதி,
கொழும்பு - 13

G.S.L. குரோசரீஸ்
172, மெஸஞ்சர் வீதி,
கொழும்பு - 12

பார்க் குரோஸரீஸ் மில்க் சொப்
13/14, அண்டர்சன் ப்ளட்ஸ்,
மார்கெட் பார்க் வீதி

ரஞ்சனி புத்தகசாலை
190/A, ஜம்பட்டா வீதி,
கொழும்பு - 13

A வண் டிரேடர்ஸ்
315, முத்துவெல மாவத்தை,
மோதர,
கொழும்பு - 15

உபுல் ஜயசிங்க
480Q, பார்கெஸன் வீதி,
மட்டக்குளிய

அனுஷியா புத்தகசாலை
361, மோதர வீதி,
கொழும்பு - 15

ஜயந்தன் நியூஸ் பேப்பர்ஸ்
331/A, லையடாஸ் ரோட்வே,
கொழும்பு - 14

K.P.S. குரோஸரீஸ்
9/B, பரமானந்த மாவத்தை,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13

மில்க் பார்
96, பாபாபுள்ளே பிளேஸ்,
கிராண்பாஸ்,
கொழும்பு - 14

விஜிதா குரோஸரீஸ்
B4, S32, N.H.S.
மாளிகாவத்தை,
கொழும்பு - 10

இலங்கையிலிருந்து வெளிவரும் முதல்தர சஞ்சிகையான 'இருக்கிறம்' இன்று இந்தியா உட்பட ஜேர்மனி, கனடா, பிரான்ஸ், லண்டன், சுவிஸ் ஆகிய நாடுகளில் விற்பனையாகி வருகின்றது.

**தொடர்புகளுக்கு :**


விளம்பர முகாமையாளர்
'இருக்கிறம்'
03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி - 011 3150836. தொலைநகல் - 011 2685190
மின்னஞ்சல் - advtirukkiram@gmail.com
இணைய முகவரி: www.Irukkiram.tk


இப்பொழுது விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதால் உங்கள் விளம்பரங்களையும் பிரசுரிக்க இது ஒரு அரிய சந்தர்ப்பம். தமிழ் பேசும் மக்களின் தேசிய சஞ்சிகையில் விசேட விலைக்கழிவுடன் குறைந்த விலையில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரியுங்கள்.